கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 4 02 – 08 ஜூலை 1998 முழக்கம்: 181

Sakthy Video
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont:- 0181 -6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se -13
Tel: 0181-2979432

# எம்.ஐ. 24 சுட்டு வீழ்த்தப்பட்டது

## வவுனியா விமானப்படை வலையத்தினுள் தாக்குதல்

சிறீலங்கா விமானப்படையின் எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தி விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் வவுனியா விமானப்படைத் தளம் அருகேவைத்து கடந்த வெள்ளிக்கிழமை (26.06.98) அன்று சுட்டுவீழ்த்தப்பட்டது. அதில் பயணம் செய்த நான்கு விமானப்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரால் வவுனியா விமானப் படைதளம் அருகே புதுமுறிப்பு என்னும் கிராமத்தில் வைத்து காலை 8.30 மணியளவில் இத் தாக்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்திக்கு இணையாகப் பறந்த மற்றொரு உலங்குவா

(☞ 2ம் பக்கம்)

## புலிகளின் இலக்கு உயர் இராணுவத் தளபதிகள்!

### தாக்குதல் பற்றி ஆராய விசேட குழு

(29.06.98)

விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணிகள் ஜெயசிக்குறுய் போர் முனைக்கு தலைமைதாங்கும் தளபதிகளும், இராணுவ அமைச்சர் ரத்வத்தையும் பயன்படுத்தும் வவுனியா விமானப் படைத் தளத்தின் பாதுகாப்பு வலயத்தினுள் நிலையெடுத்து வெற்றிகரத் தாக்குதல் நடத்தியுள்ளமை சிறீலங்கா அரசை அச்சத்திற்கு உள்ளாக்கி உள்ளது.

கடந்த வெள்ளியன்று புலிகள் நடாத்திய எம்ஐ 24 உலங்கு வானூர்தி மீதான தாக்குதல், அதில் உயர் மட்டத்தினர் பயணம் செய்கின்றார்கள் என்ற தகவல்களின் அடிப்படையிலேயே நடாத்தப்பட்டதாக கொழும்பு இராணுவ வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

(☞ 2ம் பக்கம்)



### 100 மீற்றர் உயரத்துக்கு வீசிய தீச்சுவாலை தாக்குதல்பற்றி விபரிப்பு

விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்தியானது நிலத்தில் வீழ்ந்து சுமார் ஒருமணிநேரம் தீப்பற்றி எரிந்துள்ளது. இதனது சுவாலை நூறு மீற்றர் உயரம் வரை உயர்ந்து பரவியதாக அப்பகுதி மக்கள் விபரித்துள்ளனர். அருகே அமைந்திருந்த விமானப் படை தளத்திலிருந்து விரைந்த படையினரால் ஒரு மணிநேரத்திற்கு பிற்பாடே . தீச்சுவாலைகளை அணைக்க முடிந்துள்ளது. புலிகளின் தாக்குதலினால் வானில்வெடித்து தீப் பிளம்பு போல் வீழ்ந்தே இவ் உலங்கு வானூர்தி எரிந்துள்ளது.

## கனகராயன் குளத்தில் கிளேமோர் தாக்குதல்

### விமானப்படை அதிகாரி - 12 சிப்பாய்கள் பலி

கனகராயன் குளப்பகுதியில் விடுதலைப் புலிகள் நடாத்திய தொடர் கிளேமோர் தாக்குதலொன்றில் விமானப்படை உயர் அதிகாரி ஒருவரும், சிப்பாய்களும் பலியாகியுள்ளனர். மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். இத் தாக்குதலின் போது அவர்கள் பயணம் செய்த வாகனங்களும் முற்றாக சிதறடிக்கப்பட்டுள்ளது.

காவற் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள விமானப் படையினரின் நிலைமைகளை அறிவதற்காக இந்த அதிகாரி ஏனைய விமானப்படை சிப்பாய்களோடு இப்பகுதிக்கு வந்த வேளையிலேயே இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்குதல் நடாத்தப்பட்ட இடம் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில்

(☞ 2ம் பக்கம்)

## மீண்டும் கிபீர் வெறித்தனம்

### மூவர் உடல் சிதறி பலி

சிறீலங்கா வான் படையின் கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் வன்னி கோணாவில் பகுதியில் மீண்டும் மேற்கொண்ட வெறித்தனத்தில் மூன்று அப்பாவிப்

(☞ 2ம் பக்கம்)

## வவுனியாவில் தமிழ் குழுக்களின் 18 வதை முகாங்கள்

வவுனியாப் பகுதிக்கு வரும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் ஏராளமானோர் அப் பகுதியில் உள்ள 18 வதை முகாங்களுக்குள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் வதைமுகாங்கள் சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளேயே இயங்குகின்றன என்றும், இவற்றை அரசியல் நீரோட்டத்திற்கு வந்துவிட்டோம் எனக் கூறும் கொழும்புத் தமிழ் குழுக்களே நடத்துகின்றன என்றும் கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்களப் பத்திரிகை ஒன்று பிரதான தலைப்பு செய்தியாக வெளியிட்டுள்ளது.

இப் பத்திரிகை மேலும் தனது செய்தியில் சிறீலங்காவின் பாதுகாப்புத்துறையின் செயற்பாடுகளையும் மீறி இத் தமிழ் குழுக்களின் இவ் வதைமுகாங்கள் செயற்படுவதாக சிறீலங்காவின் பாதுகாப்பு உளவுத்

(☞ 2ம் பக்கம்)

## இந்துக்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தவும்

### சிறீலங்கா அரசிடம் சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மகாநாட்டில் வேண்டுதல்

பாரிசில் கடந்த சனி, ஞாயிறு (27—28.06.98) தினங்களில் இடம் பெற்ற முதலாவது அனைத்துலக இந்து ஒருமைப்பாட்டு மகாநாட்டில் சிறீலங்கா அரசு இந்து வழிபாட்டுத் தலங்கள் மீதும், இந்துக்கள் மீதும் நடாத்தும் தாக்குதல்களை கண்டித்து ஏகமனதான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடந்த சனியன்று காலை பிரான்சிற்கான நேபாள தூதுவர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைக்க இந்தியா, தென்னாபிரிக்கா, மலேசியா, அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பல்வேறு மத் சமூக அரசியல் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road,
Wembley,
Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege.Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

*நிர்வாகி:*
ப. வேலுப்பிள்ளை
*நிறுவக ஆசிரியர்:*
அமரர் க. கஜேந்திரன்
*ஆசிரியர்:*
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel; 076 5425804

# தொப்பி விற்ற இளைஞர் கைது

*(29.06.98)*

சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் பாவிப்பது போன்ற தொப்பியை விற்ற குற்றத்திற்காக ஒரு இளைஞர் சிறீலங்கா படைகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னாரிலுள்ள பெஞ்சமின் ஸ்ரோர் என்ற பிரபல கடை ஒன்றில் வேலைசெய்பவரான சிவராசா சிவபாலன் என்ற இளைஞரே சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

இந்த இளைஞர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து இன்று மன்னார் நகர வர்த்தகர்கள் கடையடைப்புச் செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சிவபாலன் விற்பனை செய்ததாகச் சொல்லப்படும் தொப்பி பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டு கொழும்பிலிருந்து மன்னார் வரையுள்ள பல இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டியே மன்னாருக்குக் கொண்டுவரப்பட்டது. அப்படியிருக்க சிவபாலன் சட்டவிரோதமாக அந்தத் தொப்பியை விற்றார் எனக் கூறி அவரைக் கைது செய்திருப்பது நீதியற்ற செயல் என மன்னார் வர்த்தகர்கள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மன்னார் வர்த்தகர்களின் எதிர்ப்பை அடுத்து இன்று மாலை சிவபாலன் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவரை விசாரித்த நீதிபதி 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளார்.

# தமிழ் வர்த்தகர் இனந்தெரியாதோரால் கடத்தல்

கடந்த 18ம் திகதி கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டில் இருந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் ஓட்டோ ஒன்றில் வந்த சிலரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் கொண்டு செல்லப்பட்ட இவர் வெள்ளவத்தைப் பகுதியிலேயே உள்ள ஹம்டன் லேனில் வைத்து வான் ஒன்றிற்கு மாற்றி ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், கொழும்பில் கடந்த சுமார் ஒரு மாத காலமாக ஓய்ந்திருந்த தமிழர் கைது மீண்டும் கடந்த சில தினங்களாக அதிகரிக்கத் தொடங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திங்களன்று கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட தமிழர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உண்ணாவிரதக் கைதி உடல்நிலை பாதிப்பு

களுத்துறையில், 'விடுதலை செய் அல்லது விசாரணை செய்' எனக் கோரி, சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கைதிகளில் ஒருவராகிய வவுனியாவைச் சேர்நத பெரியசாமி சொக்கலிங்கம் என்பவர் உடல் நிலை பாதிக்கப்பட்டதனால், ஞாயிறன்று வெலிக்கடையில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இவரைத் தவிர ஏனைய 53 பேரும் தொடர்ந்து தமது உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

---

மேற்படி தாக்குதலை சிறீலங்கா இராணுவ தலைமையகமும் ஒத்துக்கொண்டுள்ளது.

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியா...

னூர்தி புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பி சென்றுள்ளது.

புலிகளால் அழிக்கப்பட்ட இவ் எம்.ஐ24 உலங்குவானூர்தி 'பறக்கும் யுத்த தாங்கி' என இராணுவ வல்லுனர்களால் வர்ணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# துயர் துடைக்க கரம் கொடுப்போம்

## தொண்டர்களுக்கான அழைப்பு

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகம் பட்டினியுடனும் - நோயுடனும் போராடும் தன் உறவுகளின் துயர் துடைத்து அவர்களை அரவணைக்க 'துயர் துடைப்பு நாட்களை' எதிர்வரும் ஜூன் மாதத்தில் பிரகடனப்படுத்தியுள்ளது**

**இப் பாரிய மனிதாபிமான பணியில் பங்கேற்க பல்லாயிரம் தொண்டர்களை உரிமையுடன் அழைக்கின்றோம்.**

**உங்கள் மனித நேயத்தையும் - உறவுகளின் மேல் உள்ள உரிமையையும் மனதில் நிறுத்தி உங்கள் நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களுடன் தொடர்புகொள்ளவும்**

TRO
P.O. Box 4254, Knox city,
VIC - 3152, Australia.
Tel: 61 39 88 83 899

★

O.R.T - France
26 Rue du Département,
75018 Paris, France.
Tel/Fax - 01 40 38 30 74

★

P.O. Box 4742
Sofienberg
0506 Oslo, Norway.
Tel/Fax - 22-717537

★

861, Brodview Ave
Toronto - Ontario,
M4K 2P9, Canada.
Tel - 416 / 466 - 9624
Fax - 416 / 406 - 4755

Tal Str. 15,
6020 Emmenbrucke,
Switzerland.
Tel/Fax - 041 260 83 98

★

K. Chinnaththurai,
Schiermonnikoog Str. 44,
1825 NB
Alkmaar, Netherland.

★

Via Dante
218/A
90141 Palermo, Italy.
Tel: 91 68 24 056

★

E. Anantharajah
Hompech str. 16
41189 Monchengladbach,
Germany.
Tel - 021 66 58 508

79, Hoe Street,
Walthamstow,
London E17 4SA,
U.K.
Tel- 0181-520 5876
Fax- 0171-403 16 53

★

57 Old Town Road,
Cumberland,
MD 21502,
U.S.A.
Tel: 1 301 59 53 705

★

G. Ananthan
Brorsons VJE-51, 2-TV
7400 Herning, Denmark.
Tel - 97 - 21 46 88
Fax - 97 - 21 76 49

*– ஐரோப்பியப் பணியகம்*

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியாவில்...

துறை கூறியுள்ளதாகவும் இது குறித்த மேலதிகவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இப்படி இருக்க யாழ் குடாவிற்குள் இக் குழுக்களின் ஆயுத ரீதியான அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாயும், சிறீலங்கா இராணுவம் செயற்படுவது போலவே இக் குழுக்களும் சில பகுதிகளில் செயற்படுவதாகவும் அப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின் இலக்கு...

இதேவேளை ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைகளை தலைமை ஏற்கும் தளபதிகள் பயன்படுத்தும் விமானப் படைத்தளம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளதால் இது தொடர்பாக ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று சிறீலங்கா அரசினால் நியமிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவ அமைச்சர் ரத்வத்தை ஜெயசிக்குறுய் போர்முனைக்கு விஜயம் செய்வதற்கு இவ் விமானப்படைத் தளத்தை தெடர்ச்சியாக பயன்படுத்திவருவதும் குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இந்துக்கள்...

விஸ்வ ஹிந்து பரீஷின் ஐரோப்பிய இணைப்பாளர் திரு உபாத்தியாயா இந்துக்கள் தாக்கப்படும் போது அனைவரும் ஒன்றுதிரண்டு போராட வேண்டும் என்றும் இதற்காக தமது அமைப்பு உழைக்கும் எனவும் தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மீண்டும் கிபீர்...

பொதுமக்கள் உடல்சிதறி பலியாகியுள்ளனர். மேலும் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு கிபீர் விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுக்களால் பல குடிசைகளும் எரிந்து சாம்பராகியுள்ளன. கொல்லப்பட்டவர்களில் தாயும் மகனும் அடங்குகின்றனர்.

குண்டு வீச்சுக்கள் நடாத்தப்பட்டு முடிந்த சொற்ப நேரத்தில் இப்பகுதியை நோக்கி எறிகணை வீச்சுக்களையும் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் வி. விஜயலட்சுமி(34), வி. றஜீவன்(7), தி.பராசக்தி (55) ஆகியோரும் காயமடைந்தவர்களில் வி. தர்சினி (13), வி. தர்ஷிகா(11),வி. தர்சன்(12), பாஸ்கரன் வேலுப்பிள்ளை, கமலா, மேகலா, ரோகிணிதேவி ஆகியோரும் அடங்குகின்றனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கனகராயன்...

இருந்த போதிலும் விடுதலைப் புலிகள் மிகவும் காத்திருந்து நுட்பமாக இப் பகுதிக்குள் ஊடுருவி இத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

Bombay - 3,900 Frs.
Delhi - 3,900 Frs.
Bangkok - 3,400 Frs.
Colombo - 3,800 Frs.
Singapour - 3,670 Frs.

Madras - 4,300 Frs.
Londres - 790 Frs.
New york - 2,300 Frs.
Montreal - 2,800 Frs.
Oslo - 2,010 Frs.
Toronto - 2,800 Frs.
Nepal - 4,820 Frs.

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37

# தமிழீழச் செய்தித் தொகுப்பு

## ஒட்டமாவடி அதிகாரி வீட்டுக்கு கைக்குண்டு வீசிய படையினர்

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அதிகாரி ஒருவரின் வாழைச்சேனை இல்லத்திற்கு சிறிலங்கா படையினர் \கைக்குண்டு வீச்சினை நடாத்தியுள்ளனர். கடந்த 22-ம் திகதி இரவு இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இந்த அதிகாரி சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு வாழைச்சேனை காகித ஆலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை சிறீலங்காவின் தபால் தொலை தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா அவர்களின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டார்.

ஆனால் இச் செய்கையினால் ஆத்திரடைந்த படையினர் அவரது வாழைச்சேனை இல்லத்திற்குச் சென்று அங்கு கைக்குண்டுகளை வீசியுள்ளனர். கைக்குண்டுகள் வீசப்பட்ட சமயம் அந்த அதிகாரி வீட்டில் இல்லாதமையால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

## யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம்

தமக்கு இடர்ப்படி வழங்க வேண்டுமெனக் கோரி யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ் வேலை நிறுத்தத்தில் விரிவுரைப் பகுதியை தவிர்ந்த சுமார் 500 ஊழியர்கள் குதித்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம் (அம்பாறை) ஆகிய பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற இடர்ப்படி கொடுப்பனவுகள் தமக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கோரும் இவ் ஊழியர்களின் போராட்டத்திற்கு பல்கலைக் கழகத்தின் ஏனைய தொழிற் சங்க பிரிவுகளும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## மன்னார் பகுதியில் வாந்திபேதி அபாயம்

மன்னார் பகுதியில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளது. இதுவரை பொதுமக்கள் வைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் 11 வயதுச் சிறுவனாவார்.

மன்னார் பகுதியில் உள்ள அகதி முகாம்களில் பெருமளவான மக்கள் சுகாதார சீர்கேடுகளுடன் வசித்து வருவதனால் இந்த முகாம்களில் வாந்திபேதி பரவுமானால் பெரும் உயிரிழப்புகள் ஏற்படுமென்பதை சுட்டிக்காட்டியுள்ள மன்னார் வைத்திய அதிகாரி திரு. கதிர்காமநாதன், இந்த நோயின் பரம்பலை கட்டுப்படுத்தக்கூடிய மருந்து வகைகளின் தட்டுப்பாட்டினையும் எடுத்துக் கூறியுள்ளார்.

ஏற்கனவே வவுனியா பகுதியிலும் வாந்திபேதி அபாயம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## எறிகணை வீச்சில் அன்னை பலி

சிறீலங்கா படையினர் நடாத்திய கண்மூடித்தனமான எறிகணை வீச்சிற்கு வன்னி வட்டக்காடு பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் அன்னை ஒருவர் துடிதுடித்து பலியாகியுள்ளார்.

கடந்த 24-ம் திகதி இரவு 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இவ் எறிகணை வீச்சானது வன்னி விளாங்குளம், அம்பலபுரம் வட்டக்காடு ஆகிய பகுதியிலுள்ள குடிமக்கள் குடியிருப்புகளை இலக்காக வைத்தே நடாத்தப்பட்டுள்ளது.

இவ் எறிகணை வீச்சில் பலியான அன்னை பாக்கிய லட்சுமி (30) எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

- ★ யாழ். செயலகத்தின் ஒய்வூதிய கிளையில் பல கோவைகள் காணாமற் போயுள்ளதால், பல ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை.
- ★ திருமலை ரோட்டரிக் கழகம் வலது குறைந்தோருக்கான காணிப் பயிற்சிநெறி, மரவேலை பயிற்சி நெறி என்பவற்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.
- ★ சர்வதேச செஞ்சிலுவை சங்கக் கப்பலான 'யாவா' திருமலையிலிருந்து வட பகுதிக்கான தனது சேவையினை மீண்டும் ஆரம்பித்துள்ளது.
- ★ திருக்கோவில் * பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக, கரையோரத்தில் குடியிருந்த மக்களின் குடியிருப்புக்களுக்குள் கடல் நீர் புகுந்து பெருஞ் சேதத்தினை விளைவித்துள்ளது.
- ★ நல்லூர் பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கென வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மேற்படி குடும்பங்கள் பெரும் இன்னலடைந்து வருகின்றன. இவர்களுக்கான உணவு விநியோகத்தை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.
- ★ திருமணத் தகராறு காரணமாக திருக்கோயில் பிரதேசத்திலுள்ள தாண்டியடி கிராமத்தில் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இக் கொலையைப் புரிந்தவர் முன்னர் இப்பகுதியில் இருந்த அதிரடிப் படை முகாமில் சமையல் வேலை செய்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
- ★ மட்டக்களப்பு புன்னைச்சோலை அருள்மிகு பத்திரகாளியம்மன் கோவிலின் வருடாந்த தீ மிதிப்பு உற்சவம் கடந்த 26 ஆந் திகதி நடைபெற்றுள்ளது.
- ★ நவாலியூர் சுவாமி விஸ்வநாதக் குருக்களுக்கு காரைநகர் புளியங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் பொற்கிழி வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.
- ★ கனடா நாட்டில் தவில் - நாதஸ்வர கச்சேரிகளை நிகழ்த்துவதற்காக வடபகுதி பிரபல தவில் நாதஸ்வர மேதைகள் அங்கு சென்றுள்ளனர்.
- ★ மடுப்பகுதி சென்று திரும்பிக்கொண்டிருந்த செஞ்சிலுவைச் சங்க வாகனச் சாரதியான பத்மநாபன் என்பவர் படையினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## திருமலையில் தீவிர சிங்கள குடியேற்றம்

திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வசித்து வந்த கிராமங்களில் தற்போது சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதாக திருமலை செய்திகள் தெரிவிக்கின்றன.

திருமலை மாவட்ட அரச அதிபர் மேற்பார்வையில் நடாத்தப்படும் இக் குடியேற்ற நிர்மாண வேலைகளுக்கு சிறீலங்கா படையினர் முனைப்போடு பல உதவிகளை செய்து வருகின்றனர். ஏற்கனவே திருமலை கண்டி வீதியிலுள்ள கப்பல் துறை, வைரவரூற்று ஆகிய பிரதேசங்களில் இவ்வாறான குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இவ்வாறான குடியேற்றங்களுக்கு இராணுவ, பொலிஸ் ஊர்காவற்படையினரின் பாதுகாப்புகளும் வழங்கப்படுகின்றன.

இப் பகுதிகளுக்கு அருகாமையில் தமிழ் மக்கள் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் இப் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை நடாத்தவும் அரச உயர் மட்டத்தில் திட்டமிடப்பட்டு வருகிறது.

1940-ம் ஆண்டு சிங்கள அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட இக் குடியேற்றத் திட்ட ஏற்பாடுகள் காரணமாக திருமலை, அம்பாறைப் பகுதியில் உள்ள ஏராளமான தமிழ் குடியிருப்புகள் அழிக்கப்பட்டு அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களும் துரத்தியடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முழங்காவிலில் விளையாட்டு போட்டி

பூனகரி - முழங்காவில் பகுதியிலுள்ள 18 ஆரம்ப பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த 27-ம் திகதி முழங்காவில் மாவீரர் விளையாட்டுத்திடலில் நடைபெற்றுள்ளது. பூனகரி - முழங்காவில் அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்து நடாத்திய இப் போட்டியில் ஏராளமான மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

## மண்டைதீவு மக்களுக்கு கடற்படையின் அச்சுறுத்தல்

மண்டைதீவு பகுதியில் வசித்த மக்களை மீண்டும் அப் பகுதிக்குள் அனுமதிக்க சிறீலங்கா கடற்படை மறுப்புத் தெரிவித்துள்ளது.

முன்னர் சிறீலங்கா இராணுவத்தின் பொறுப்பிலிருந்த மண்டைதீவு பகுதி இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடற்படையிடம் கையளிக்கட்டது. இப்பிரதேசத்தை பொறுப்பேற்ற கடற்படையினர் அப்பகுதியில் மீன் பிடிப்பதற்கோ அல்லது மக்கள் மீளக் குடியேறுவதற்கோ அனுமதி மறுத்துள்ளதுடன், இப் பகுதிக்குள் தமது அனுமதியின்றி யாரும் நுழையக்கூடாதெனவும் எச்சரித்துள்ளனர்.

## இரு இளைஞர் கைது

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குவீதி, மூளாய் தெற்கு ஆகிய இடங்களில் வைத்து இரு இளைஞர்களை சிறீலங்கா படையினர் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட எம். ஜெயக்குமார், பீ. ஜெயராசா ஆகிய இருவரும் தற்போது இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இக் கைதுகள் கடந்த 14-ம் திகதி இடம்பெற்றுள்ளன.

## சிறீலங்கா சுதந்திர கட்சி யாழ். செயலாளர் சுட்டுக்கொலை

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் ஓஸ்வால்ட் கடந்த 24-ம் திகதி குருநகரிலுள்ள அவரது இல்லத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இரவு எட்டு மணியளவில் இவரது இல்லத்திற்கு பிரவேசித்த அடையாளம் தெரியாத ஆயுத பாணிகள் ஓஸ்வால்ட் மீது இரு தடவை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

ஓஸ்வால்ட் உடனடியாக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் சிறிது நேரத்தில் மரணமடைந்துவிட்டார். இவரது மரணத்தைத் தொடர்ந்து குருநகர் பகுதியில் இராணுவத்தினர் கடுமையான தேடுதலை மேற்கொண்டனர்.

## மடு தேவாலயம் நோக்கி வழிபாட்டுப் பேரணி

தமிழ் மக்களுடைய, விடுதலைப் போருக்கு பலம் சேர்க்குமாறுகோரி, வழிபாட்டு பேரணி ஒன்றினை மடு திருப்பதியில் 30-ம் திகதி நடாத்த இப்பகுதியில் வசிக்கும் கத்தோலிக்க, இந்து மக்கள் முடிவு செய்துள்ளனர்.

காலை 0.30 மணியளவில் வவுனிக்குளம் வேளாங்கன்னி ஆலய வளாக முன்றலிலிருந்து ஆரம்பமாகும் இந்த வழிபாட்டு பேரணி, மடுத்திருப்பதியை நோக்கி சென்று அங்கு நடைபெறும் பிரார்த்தனை கூட்டத்துடன் முடிவுறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்த வழிபாட்டுப் பேரணியில் கலந்துகொள்ளும் கத்தோலிக்க, இந்து மக்கள், அன்னை மேரியிடம் சிறீலங்கா அரசினால் தமக்கேற்பட்டுள்ள அவல வாழ்வினை துதிப்பாடல்களாகவும், ஜெபங்களாகவும் எடுத்தோதவுள்ளனர்.

# மாகாணசபைத் தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா ?

சிறீலங்காவில் தென் மேற்குப் பருவப் பெயர்ச்சி மழைக்காலம் கடந்தவாரம் ஆரம்பித்தவேளை அரசியல் பருவகால சவால்கள், எதிர்ச்சவால்கள் ஆகியன முன்னெடுக்கும் காலமாற்றமும் ஆரம்பித்துவிட்டது. இந்த சவால்கள், எதிர்ச்சவால்கள் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் நடைபெறும் ஒரு கௌரவப் போராட்டமாகவும் வெடித்துள்ளது. மகாகாணசபைத் தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவையே இந்த சவால்களுக்குள் அகப்பட்டுக்கொண்டன.

மீண்டும் 'வேதாளம் முருங்கை மரத்தில்' ஏறிய கதையாக மாகாண சபைத் தேர்தல்களையே நடத்துவோம் என கூறியுள்ளது. ஆனால் இது நிலையான ஒரு முடிவா என்பது இன்றும் குழப்பமாகவே இருக்கிறது. ஐ.தே.கட்சி நிலைமையை எடுத்துக்கொண்டால், ஒரு இக்கட்டான நிலையையே அது இன்று எதிர்கொண்டுள்ளது.

விஜயபாலமெண்டிஸ் விவகாரத்தால் கட்சி இரண்டாகப் பிளவுபடும் சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ள இந்தவேளையில், அரசு தம்மை மேலும் குழப்பவே



சிறீலங்காவில் தற்பொழுது நிலவும் பாதுகாப்பு ஸ்திரமின்மையைக் காரணம்காட்டி மாகாண சபைத் தேர்தல்களை பிற்போட ஒத்துழைக்குமாறு அரசு, ஐக்கிய தேசியக் கட்சியிடம் விடுத்த கோரிக்கைக்கு அக்கட்சியின் தலைமைப்பீடம் ஒரு பொறியை வைத்து பதிலை அளித்தது. அரசு ஜனாதிபதித் தேர்தலை முன்னெடுக்க சம்மதப்படுமாயின், ஐ. தே. கட்சி மாகாண சபைத் தேர்தல்களை பிற்போட ஒத்துழைக்கும் என்பதே அப்பதிலாகும்.

உண்மையில் பாதுகாப்புக் காரணங்களை மேற்கோள் காட்டி தேர்தலை நடாத்த முடியாத • சூழ்நிலை இருப்பதாக அரசு கூறியதற்கு ஐ.தே.கட்சி இவ்வாறு முரணானபதில் ஒன்றினை அளித்தது மிகவும் குழப்பகரமாகவே இருந்தது. தேர்தல் எதுவாகினும் பாதுகாப்புப் பிரச்சினை பொதுவானது என்ற நிலையை விடுத்து ஐ.தே. கட்சியோ மாகாணசபைத் தேர்தல்களுக்குப் பதிலாக ஜனாதிபதித் தேர்தலை வைக்குமாறு கோரியத்தானது, உண்மையிலே அரசிற்கு சினத்தைத் தோற்றுவித்துள்ளது. அதனால்தான் அது ஐ.தே.கட்சியிடம் அடிபணியாது

## கட்சித் தாவலுக்குத் தயாராக?

தேர்தல் பொறிகளை வைத்துள்ளதென்பதும், ஐ.தே.க.அரசியல் பிரமுகர்கள் ஒரு சாராரின் கருத்தாகும்.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அரசு தேர்தலை நடாத்தப் பின்நிற்கிறது எனில் எவ்வாறு சார்க் மாநாட்டுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்கப்போகிறது என்ற கருத்தும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழாமல் இல்லை.

ஜனாதிபதி ஆட்சி முறைமையை சிறீலங்காவில் இருந்து துரத்துவோம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சியைப் பிடித்த சந்திரிகா அரசு, இன்று ஜனாதிபதி தேர்தலை நடாத்த வேண்டுமாயின் அதற்கு முன்பாக கொண்டு வரவேண்டிய அரசியல் அமைப்புத் திருத்தத்தை செய்வதற்காக ஐ.தே.க.வின் துணையை எதிர்பார்க்க வேண்டும். ஐ.தே.க.வும் அரசின் இந்தக் கண்ணோட்டத்தை புரிந்துகொள்ளாத அளவுக்கு முட்டாள் கட்சியல்ல. அதனால்தான் சில 'முண்டியடிப்பு' விளையாட்டுக்களை அது மேற்கொள்ள முனைந்துள்ளது.

அரசு என்னதான் வீராப்பாக மாகாணசபைத் தேர்தல்களை நடாத்திக் காட்டுவோம் என அறிவித்தாலும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை சுட்டிக்காட்டிய சில விடயங்கள் அந்த 'எண்ணத்திற்கு' சில தடைகளைப் போட்டுள்ளது. வன்னிப் போர் நிலவரம் இன்றுள்ள நிலையில் தேர்தல் ஒன்றிற்காக பாதுகாப்புப் படையினரையோ, அன்றி பொலிசாரையோ ஈடுபடுத்த முடியாது என ஒரு யதார்த்த வாதத்தினை அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்தவாரம் ரத்வத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் விடயத்தில் ஐ.தே.கட்சி எடுக்கும் நடவடிக்கைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி கடந்த வாரம் சந்திரிகா சில மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசனை செய்துள்ளார். அமைச்சர் திசாநாயக்காவின் சகோதரரின் திருமண விழாவிற்குச் சென்ற சந்திரிகா குழுவினர், திருமண விழாவிலேயே ஒரு குட்டி இராஜதந்திரக் கூட்டத்தை நடாத்தியுள்ளனர்.

அரசின் நிலை இவ்வாறிருக்க, ஐ.தே.கட்சியின் நிலையோ இப்பொழுது மிகவும் முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. விஜய பாலமெண்டிஸ் மீதான தற்காலிக தடையை ரணில் சாரார் அறிவித்ததைத் தொடர்ந்து, கட்சி இரு பிரிவுகளாக பிளவுபடும் நிலை தோன்றியுள்ளது.

விஜயபாலமெண்டிசுக்கு ஆதரவாக ஒரு குழுவும், அவருக்கு எதிராக இன்னொரு குழுவும் இந்த இரண்டு குழுவிலும் சாராமல் மதில் மேல் பூனைகளாக மூன்றாவது குழுவும் கட்சியில் தற்பொழுது உருவாகியுள்ளன. மெண்டிஸ் மீதான தற்காலிகத் தடை கொண்டுவரப்பட்டபோதிலும் கலாநிதி. ஸ்ரான்லி கல்பகே தலைமையிலான ஒரு குழு அதனை எதிர்த்துள்ளது. அதே நேரம் முன்னாள் அமைச்சர்களான ஏ.சி.எஸ். ஹமீத், எம்.ஏச். முகமட், பெஸ்ரஸ் பெரேரா, நந்தாமெத்தியூ, எ.எம்.எஸ். அதிகாரி, சுசில் முனசிங்க, அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் மதில்மேல் பூனைகளாக

**பேம்பி**

தம்மைக் காட்டிக்கொண்டனர்.

இதிலே அநுரா பண்டாரநாயக்காவின் நிலை குறித்து ஐ.தே.கட்சியிடையே சந்தேகப் பார்வையொன்று எழுந்துள்ளது. ஐ.தே.கட்சியிலிருந்து விலகி சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் அநுரா இணைந்து கொள்ளப் போவதான கிசுகிசுக்கள் கூட கடந்தவாரம் கொழும்பில் பரவலாக உலாவியது. இந்தக் கிசுகிசுக்களுக்கு ஒரு தோற்றுவாய் இல்லாமல் இல்லை. கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீத்துடன் சுமார் 2 மணித்தியாலங்களாக பேச்சுவார்த்தை நடாத்திய அநுரா, மறுநாளே ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துள்ளார்.

தனது பிள்ளைகள் எல்லோரும் மீண்டும் ஒன்றாக இணைய வேண்டும் என்ற சிறீமாவோ பண்டாரநாயக்காவின் விருப்பப்படிதான் இந்த சந்திப்பு நிகழ்ந்தது என்ற கருத்தும், இந்த இணைவுக்கு சூத்திரதாரியாக முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் செயற்படுவதாகவும் ஐ.தே. கட்சி வட்டாரங்களில் கதை அடிபட்டன. ஆனால் இக் கருத்துக்களை ஹமீத், 'இது ஒரு அப்பட்டமான பொய்' என மறுத்துரைத்துள்ளார். ஆனாலும், கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன என்ற கூற்றை அவர் மறுத்துரைக்காமல் ஒரு ஜனநாயகக் கட்சிக்குள் கருத்து முரண்பாடு நிலவுவதும், . அதற்குத் தீர்வு காண்பதும் இயல்பானது என்ற வழுவலான பதிலையும் அளித்துள்ளார். உண்மையில் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி அநுரா, ஹமீத் ஆகியோர் உள்ளிட்டதாக ஐ.தே. கட்சி பிரமுகர்களுக்கு பொறி வைத்துள்ளதா? அதில் இவர்கள் சிக்குவார்களா? என்பது என்னும் ஓரிரு வாரங்களில் எப்படியும் வெளிப்படத் தானே வேண்டும்.


**ஸ்ரீவன் வாகன சேவை**



*உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது*

**தொலைபேசி இலக்கம்:**
**06 11 36 94 44 / 01 64 97 98 53**

Pub


## குசும்புச் சீத்தர் செப்பல்கள்

சிங்கக்கொடியார் குடிமக்கள் இலண்டனிலை தாங்களும் ஒரு துடுப்பாட்டவிழா வைச்சவையெல்லோ? அந்த விழாவிலை சில்வா தம்பதியினர் பரப்பின கடையிலை கட்டித் தூக்கியிருந்த செவ்விள நீர்க் குலையளிலை மையல்கொண்ட ஒண்டிரண்டு வெள்ளையள் அதை வாங்கப்போக, அவ்வழி சென்ற எங்கடை ஒருத்தர் ஆங்கிலத்திலை சொன்ன 'மெய்வாசகங்களை' கேட்டு அவை அந்த இடத்தை விட்டே கழண்டிட்டினமாம். அவர் சொன்னது என்ன தெரியுமே?

கலவரங்கள் நடக்கேக்க உந்த இளநியள் வெட்டுற கத்தியாலைதான் எங்கடை சனத்தின்ரை தலையளையும் உவையள் சீவினவை எண்டதுதானாம்.

• • •

யாழ். மாநகர காவலுக்கு புதிசாய் தெரிவானவர் சிவமான பாலனார் தான் தெரிவானதை பத்திரிகையாளருக்கு செவ்வி பாலனார், உயிரோடை போராடுற ஒராளுக்கு இரத்தம் எவ்வளவு முக்கியமோ, அது போலத்தான் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வும் அவசியமென வார்த்தையளை உதிர்த்திருக்கிறாராம். 'முதன் முதலா பேட்டி குடுக்கேக்கை இரத்தத்தை ஏன் உவமையைச் சொன்னீர்' எண்டு குழப்பணிப் பெரிசுகள் பாலனாரை செல்லமாயும் கோவிச்சவையாம்.

• • •

ஊருக்கெல்லாம் என்னவோ கவலையெண்டா யாழ்ப்பாண அரச முகவருக்கு இப்பத்தையக் கவலை என்ன தெரியுமோ? தனக்கு அரசாங்கம் தந்த ஊர்தியை கொழும்பிலிருந்து வாற அதிகாரிகள் சிலர் இலவசச் சவாரிக்கு இரவல் கேட்கினம் எண்டதாம்.

பிச்சை எடுக்குமாம் பெருமாள் அதைத் தட்டிப் பறிக்குமாம் அனுமார்[கள்] என்னுறது முகவர் விசயத்திலை சரியாக்கும்.

• • •

மறவர் படையின்ரை கருமையானவர்களுடைய தினம் நெருங்க நெருங்க தென் வாவி நகரிலை உள்ள அரண்களிலை இருக்கிறவைக்கு சுடுதண்ணிப்போத்தல், மிதிவண்டிக்கு காத்தடிக்கிற கருவி எல்லாம் அதுவாக தென்படுகிறதாலை, சனத்துக்கு சோதனை மேல் சோதனை போதுமடாசாமி நிலைமையாம்!!

• • •

முன்னாள் மாகாணசபைக்காரர் தியாகிகள் தினம் எண்ட தலைப்பிலை சின்னதாக ஒரு 'துண்டு' விட்டிருக்கினம். மறவர் படையை எக்கச்சக்கமாக வசை பாடியிருக்கிற அந்த துண்டிலை தியாகிகள் என்கிறதுக்கு புதிசாய் வியாக்கியானமும் இருந்ததுங்கோ. அந்நிய வீட்டு சண்டியர் மாரோடை சேர்ந்து சனத்தைக் கொல்லுறதை... இல்லாட்டி.. ...கொண்டதை இந்தத் 'தியாகத் துண்டு' விட்டவையள் மறந்து போச்சினமாக்கும்.

என்ன இருந்தாலும் 'உங்களுக்கு தமிழீழம் தேவையெண்டால் எங்களுக்கு வாக்களியுங்கள்' எண்டு சுவரிலை 'அந்தக் காலத்திலை' பெரீ....சா ஒட்டினவை எல்லே அவை?

• • •

வெளிநாட்டு புதின விரும்பியளுக்காக ஒரு விசயம்சொல்லுறன் கப்பெண்டு பிடிச்சுக்கொள்ளுங்கோ; உலகத்தின்ரை அதிசயமாய் பெருமதில் உள்ள நாட்டுக்கு உலகப் பொலிசுமாமா தன்ரை குடும்பத்தோடை விஜயித்தவரெல்லோ. அங்கை,அவர் ஒரு அருங்காட்சியகத்திற்கு விஜயம் செய்த பிறகு தனது வருகையின்ரை நினைவாக ஒரு பொம்மை வாங்க போனவராம். கடைக்காரரும் உலக பொலிசு மாமா தானே எண்டு பொம்மை விலையிலை விட்டுக்கொடுக்கேல்லையாம். இரண்டுபேரும் நல்லா பேரம் பேசினவையாம். 'எப்படியோ 225 டொலர் விலை சொன்ன பொம்மையை 45 டொலருக்கு வேண்டியிட்டன்' எண்டு சந்தோஷம் பொங்க கூடியிருந்தவைக்கு உலக பொலிசுமாமா சொன்னாராம். சிங்கக்கொடித் தலை நகரிலை ஆங்கில பத்திரிகைக்காரர் ஒருவருடைய வீட்டிலை மேல் சுடுகலன்கள் தாக்குதல் நடாத்திய விசயத்தை பத்திரிகை அறிக்கையாத் தயாரிச்சவைக்கு, அதையும் தணிக்கைக்கு அனுப்பவேணுமோ எண்டு குழப்பமாப் போச்சாம். ஏனெண்டா இராணுவத்தினரின்ரை நடவடிக்கையள் பற்றிய செய்திகள் எல்லாம் தணிக்கை மேசைக்கு வரவேணுமெண்டது அரச கட்டளையெல்லே!

• • •

மின்சார தொடருந்து புகைவிட்ட கதையை சுட்டிக்காட்டினதுக்காக சித்தனிலை புகைஞ்சவைக்காக; எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் மெய்ப் பொருள் காண்பது அறிவு [காணீர்]

## யாழ். குடாவில்
# மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

யாழ். குடாநாட்டில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் சிறீலங்காவிற்கான வதிவிட பிரதிநிதி சிவண்ட் மட்சீன் தெரிவித்துள்ளார்.

'மிதிவெடி அகற்றும் திட்டம்' என்ற பெயருடன் கடந்த 22-ம் திகதி முதல் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பகுதிகள் என அடையாளம் காணப்பட்ட பகுதிகள் நில உரிமையாளர் உட்பட எவரும் நுழைய முடியாத பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றினைச் சுற்றி பாதுகாப்பு வேலிக்ளும் அமைக்கும் திட்டமே ஆரம்பத்தில் செய்யப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இத் திட்டத்தில் பிரிட்டனைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் பணியாற்றி வருகிறார். இவரைத் தொடர்ந்து சர்வதேச நிபுணர்கள் பலரும் இணைந்து கொள்வார்கள். அத்துடன் மிகவும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட எட்டு மோப்ப நாய்களும் பிரிட்டனில் இருந்து வரவழைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இம் மிதிவெடிகளை அகற்றும் பணிகளுக்காக மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்களை யு.என்.டி.பி. வழங்கியுள்ளது.

இதேவேளை இராணுவ பாதுகாப்பு காரணங்களுக்காக இராணுவ பாதுகாப்பு வலயங்களில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்ற சிறீலங்கா படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளமை தெரிந்ததே.

## யாழ். பொதுச் செயலகத்தில் தரகர்கள்

யாழ். பொதுச் செயலகத்தில் பத்திரங்களை பெறச் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட வண்ணம் உள்ளனர். பிறப்பு அத்தாட்சி பத்திரம் போன்ற பல்வேறு பத்திரங்களை பெறுவதற்காக செல்லும் பொதுமக்களிடம் விரைவாக பத்திரங்களை பெற்றுத்தரலாம் எனக் கூறி பணம் பறிக்கும் தரகர்கள் 'தோன்றியுள்ளதாக' தெரியவருகிறது.

மக்களிடம் பணத்தை வாங்கி, தமது செல்வாக்கை பயன்படுத்தி அலுவல்களை முடித்து தருவதாகக் கூறும் இவர்கள், ஒரேநாளில் உடனடியாக பெறுவதாயின் மிக அதிகமான பணத்தை பொதுமக்களிடம் பெறுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கணிசமான அளவு அங்கு வேலை செய்பவர்களுக்கும் இலஞ்சமாக வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## தமிழக மீனவர் மீது தாக்குதல் ஒருவர் படுகாயம்

தமிழக மீனவர் மீது சிறீலங்கா கடற்படையினர் மீண்டும் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதில் ஒரு மீனவர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 25-ம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு கச்சதீவிற்கு அருகிலுள்ள கடற்பரப்பில் இவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தவேளை அப்பகுதிக்கு வந்த சிறீலங்கா கடற்படையினர் அவர்களின் படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக மீனவர் ஒருவரின் நான்கு விரல்கள் துண்டிக்கப்பட்டதுடன், மீன்பிடிக்கும் படகும் சேதமடைந்துள்ளது.

கடற்படையினர் அப்பகுதியை விட்டுச் சென்றதும், அங்கு விரைந்த ஏனைய தமிழக மீனவர்கள் காயமடைந்த மீனவரை பலத்த சிரமத்துடன் மீட்டுச் சென்றுள்ளனர்.

## மன்னாரில் சாம்-7?

தரையில் இருந்து வானுக்கு ஏவி தாக்குதல் நடாத்தும் சக்தி வாய்ந்த சாம்-7 ரக ஏவுகணை ஒன்றை மன்னாரில் தாம் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய நாட்டு தயாரிப்பான இவ் ஏவுகணைகள் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான ஒன்றையே தாம் கைப்பற்றியுள்ளதாகவும், அவ் ஏவுகணை கொழும்பு கொண்டு வரப்பட்டு அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை படையினரின் இத் தகவல் குறித்து செய்தி வெளியிட்டுள்ள கொழும்பு பத்திரிகை ஒன்று, விடுதலைப் புலிகள் இவ்வாறான பெறுமதி மிக்க ஆயுதங்களை படையினர் கண்ணில் படும்படியாகவா வைத்துவிட்டு சென்றுள்ளனர்? என கேள்வி எழுப்பியுள்ளது.

## உங்கள் கதவுகளை தட்டுவோம்

வீதியோரங்களில், வயல் வெளிகளில், அகப்பட்ட அகதிகள் முகாம்களில் உணவுக்கும், உடைக்கும் மருந்துக்கும் தவிக்கும் எம் உறவுகளின் கண்ணீர் துடைக்க உங்களிடம் வருகின்றோம்!

பலநூறு திட்டங்களுடனும் சுமக்க முடியாத சுமையுடனும் உங்கள் உறவுகளின் நாளாந்த வாழ்விற்கு வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பை சுமந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலகம் பூராவும் உங்கள் கதவுகளைத்' தட்டுகின்றது.

கடந்த வருடம் நீங்கள் எம்முடன் பகிர்ந்துகொண்ட சுமைகள், பல இலட்சம் தமிழ் மக்களை வன்னியிலும் வாகரையிலும் பாதுகாக்க உதவியது.

இவ்வருடம், நீங்கள் உங்கள் வருடாந்த உழைப்பின் ஒரு துளியை உணர்வுடன் வழங்குங்கள்; அது எம் மழலைகளின் பசிபோக்கும், முதியோரின் நோய் போக்கும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழிகாட்ட உதவும்.

வாருங்கள்; எம்முடன் சேர்ந்து வாருங்கள்; ஒவ்வொரு தமிழனும் தன் வாழ்விடத்தில் சுயமாக வாழ ஆரம்பிக்கும் அந்த நாட்கள் வரும்வரை அவர்களின் துயர்துடைப்புப் பணியில் இணையுங்கள்!

**யூலை 5 முதல் யூலை 19 வரை உள்ள நாட்களில்**

உங்கள் வீட்டுக் கதவுகளை எமது தொண்டர்கள் தட்டுவார்கள்.

உரிமையுடன் உங்களிடம் தேவைகளைக் கூறுவர்.

நீங்கள் உங்கள் கருத்துக்களை, அபிப்பிராயங்களை அவர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள்.

தேவைகளின் நியாயம் பற்றி ஆழ சிந்தியுங்கள்

உங்கள் கடமை பற்றி முடிவெடுங்கள்.

எம் தொண்டர்களின் கரங்களில் உங்கள் நிதிப் பங்களிப்பை வழங்கி அதற்கான பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்கும் தொகை பத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருநேர உணவின் தொகையாக இருக்கட்டும். நீங்கள் தீர்மானிக்கும் பணி ஒரு குடிலையாயினும் பாதிக்கப்பட்ட ஒரு தமிழ்க் குடும்பத்திற்கு வழங்குவதாக அமையட்டும்.

- அது நிச்சயம் உங்கள் வருடாந்த உழைப்பில் ஒரு சிறு துளியாய் இருந்தாலும் எம் வருடாந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் சக்தியாய் இருக்கும் என உணர்ந்து வாரி வழங்குங்கள்.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்*
*பிரெஞ்சுக்கிளை*

## மல்லாவியில் பாரிய பேரணி ஐ.நா. - செஞ்சிலுவைச் சங்கத்திற்கு முறையீட்டு மனு

சிறீலங்கா அரசின் தமிழின நடவடிக்கைகளையும், மேற்குலக நாடுகள் சிறீலங்கா அரசிற்கு நிதி வழங்குவதையும் கண்டித்து மல்லாவியில் மாபெரும் பேரணி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட இப் பேரணியில் சிறீலங்கா அரசிற்கெதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன், அரசின் காட்டுமிராண்டித் தனமான இராணுவ நடவடிக்கைகள், பொருளாதார தடைகள் ஆகியவற்றை கண்டிக்கும் பதாகைகளும், காவிச் செல்லப்பட்டுள்ளன.

ஊர்வலத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கான முறையீட்டு மனுவொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

இம் முறையீட்டு மனுவில் வன்னியில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் பல அவலங்களும், இராணுவ நடவடிக்கைகளின் கொடுமைகளும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவற்றை தடுக்கவேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.


தென் செய்தி

ஆசிரியர்: பழ. நெடுமாறன்

★ உலக நாடுகளில் வாழும் தமிழர் பற்றிய செய்திகளின் தொகுப்பு
★ சூடு தணியாத தமிழீழப் போர்க்களச் செய்திகள்
★ பிற தமிழ் இதழ்களில் வெளிவராத முற்றிலும் புதுமையான செய்திகள்
★ தமிழர்களின் இலக்கியம் கலை – பண்பாட்டுச் செய்திகள்
★ மேலும், பல தகவல்களுடன் ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் 1, 15 நாட்களில் வெளியாகிறது.

உலக தமிழர்கள் உடனுக்குடன்
'தென் செய்தி' படிக்கலாம்
இன்டர்நெட் இணையத்தில் காணலாம்.

**Internet Address: http://wwww.thenseidi.com**

குறிப்பு: உங்கள் நண்பர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் இதைத் தெரிவிக்க வேண்டுகிறோம்.


## மட்டு. இரட்டைக் குளத்தில் அதிரடிப்படை மீது தாக்குதல்

மட்டக்களப்பு இரட்டைக் குளம் பகுதியில் சிறீலங்கா அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலொன்றினை நடாத்தியுள்ளனர்.

கடந்தவாரம் நடைபெற்ற இத்தாக்குதலின்போது அதிரடிப் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்ததான உறுதியான செய்திகள் எதுவும் தெரியவராத போதிலும், மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நயினாதீவு செல்லும் பக்தர்களுக்கு விசேட பாஸ்

யாழ். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

வருடாந்த உற்சவத்திற்குச் செல்ல விரும்புபவர்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட இராணுவ முகாமில் பதிவுசெய்து தங்கள் அடையாள அட்டைகளைக் கொடுக்க வேண்டும்.

அங்கு இவர்களது விபரங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தபட்ட பின்னர் இவர்களுக்கு விசேட பாஸ் நயினாதீவிற்கு சென்றுவர வழங்கப்படும்.

ஆலய விழாக்களில் கலந்து கொண்டு விட்டு திரும்பி வரும் இவர்கள் மீண்டும் இராணுவ முகாமிற்குச் சென்று தங்கள் பாசை ஒப்படைத்துவிட்டு தங்கள் அடையாள அட்டைகளை மீளப்பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ் உற்சவத்தில் கலந்துகொள்ளச் செல்லும் பக்தர்கள் பலர் போக்குவரத்து வசதி, படகுச் சேவை இன்மையால் வேதனையுடன் திரும்பியுள்ளனர். போக்குவரத்து வசதி கிடைத்து சென்ற பலர் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து நயினாதீவு ஆலயம் வரை பத்திற்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகளில் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே செல்லமுடிந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் கப்பம் கேட்டு இளவயதினர் கைது யாழ்.குடாவில் உண்ணாவிரத போராட்டம்

வவுனியா நகரில் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து இயங்கிவரும் தமிழ் குழுக்கள் இள வயதினரை கைது செய்து வருகின்றனர். அவர்களை விடுவிப்பதாயின் பெற்றோர்கள் குறிப்பிடப்பட்ட தொகையை வழங்க வேண்டும் எனக் கூறி பொதுமக்களிடமிருந்து பெருந் தொகை பணத்தை பறிமுதல் செய்து வருவதாகவும் வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன. இக் குழுக்கள் வன்னிக்கு உணவுப் பொருட்களைக்கொண்டு செல்லும் 'லொறி'களிடமிருந்து பல்லாயிரக்கணக்கான ரூபாய் கப்பமாக கட்டிய பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதித்து வந்தனர்.

தற்போது இத்தொகையை மேலும் பல மடங்கு அதிகரித்துள்ளமையால், விற்பனை விலையை மிக அதிகமாக கூட்ட வேண்டி வரும் என்று கருதிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பல தமது சேவையை இடைநிறுத்தி உள்ளன. இதனால் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல். எவ். குழுக்களின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் கடந்த வெள்ளியன்று உண்ணாவிரத போராட்டம் இடம்பெற்றுள்ளது. மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தப்பட்ட இப் போராட்டத்தில் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

சிறீலங்காப் படைகளால் யாழ்.குடா ஆக்கிரமிக்கப்பட்ட பின் 1996-ல் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ள 600-ற்கு மேற்பட்டவர்களின் நிலைமை பற்றி அரசாங்கம் தகுந்த பதில் அளிக்க வேண்டும். களுத்துறைச் சிறைச்சாலையில் விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விசாரணை செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும். முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் சிறீலங்கா விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு தாக்குதலில் 25 பொதுமக்கள் கொல்லப்பட்டும், 50 பேர் படுகாயம் அடைந்தமையையும் கண்டித்தே இப் போராட்டம் நடாத்தப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

# ஜே.வி.பி முக்கிய உறுப்பினர் கொடூரக் கொலை

*1988 — 89-ம் ஆண்டு காலப் பகுதியில் சிறீலங்காவின் தென் பகுதியில் ஜே.வி.பி (ஜனதா விமுக்தி பெரமுனை) இயக்கத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்து சென்றவர்களில் முக்கியமானவரெனக் கருதப்படும் ஹெட்டியாரச்சி மர்தேனியா என்பவர் கடந்த 25-ம் திகதி தமைல்வில பகுதியில் துப்பாக்கியால் சுடப்பட்டும், வாளினால் வெட்டப்பட்டும் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*சிறீலங்கா அதிரடிப்படையினரின் இரகசியக் கொலைக் குழு ஒன்றினாலேயே இவர் கொடூரமாக கொல்லப்பட்டதாக தென்பகுதி செய்திகள் தெரிவிக்கின்றன.*

*பல ஆண்டு காலமாக தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட இவர் மீது, வெல்லவாய பொலிஸ் நிலைய தாக்குதல், பொலிசார் பலரை கொன்றது உட்பட்டதான பல குற்றச்சாட்டுகள் சிறீலங்கா அரசினால் ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ளன.*

*வீதியால் இவர் சென்று கொண்டிருந்தவேளை திடீரென இவரைச் சூழ்ந்த 20 இற்கும் மேற்பட்ட ஆயுதபாணிகளே இவர் மீது தாக்குதலை நடாத்தி இக்கொலையை புரிந்துள்ளனர்.*

*இவரது மனைவியும் பிள்ளைகளும் இனந்தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் ஏற்கனவே கொடூரமாக கொல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

# சட்டவிரோதமாக நாட்டிலிருந்து வெளியேறினால் 2 இலட்சம் அபராதம் – 5 வருடங்கள் சிறை

## – சிறீலங்கா அறிவிப்பு –

*சிறீலங்காவை விட்டு முறையான அனுமதியின்றி வெளியேறுவோருக்கும், அவர்களுக்கு உதவும் பயண முகவர்களுக்கும் கடுமையான தண்டனையை சிறீலங்கா அரசு தனது குடிவரவு - குடியகல்வு சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டமொன்றினூடாக அறிவித்துள்ளது.*

*புதிய தண்டனையின் படி சட்டவிரோதமாக சிறீலங்காவிலிருந்து வெளியேறுபவர் ஒருவருக்கோ அல்லது போலி விசாக்கள் மூலம் நுழைய முயன்று வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படுபவர்களுக்கோ இரண்டு இலட்சம் ரூபா அபராதம் தொடக்கம் 5 வருடங்கள் வரையான சிறைத் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சட்ட விரோதமான முறையில் சிறீலங்கா நாட்டவர் பலர் தமது நாடுகளுக்குள் பிரவேசிக்கின்றனர் என பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்டதான பல நாடுகள் அரசிடம் முறையிட்டுள்ளதைத் தொடர்ந்தே இச் சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.*

*புதிய சட்டத்தின்படி இவ்வாறான குற்றச் செயல்களில் கைதானவர்களுக்கு 'பிணை வழங்கும் அனுமதியை மறுக்கும்' அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.*

# கொழும்பு தமிழர் பணி குழு மீது புலனாய்வுத்துறை கண்காணிப்பு

கொழும்பு தமிழர் பணி குழு (அகோரிக்) மீது சிறீலங்கா புலனாய்வுத் துறையின் கண்காணிப்பில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 19-ம் திகதி கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் இக்குழுவின் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றவேளை, அங்கு வந்த புலனாய்வுத் துறை அதிகாரிகள் கூட்டத்திற்கு வந்த தமிழ் பிரமுகர்கள் மீது ஒளியிழைப் பதிவு மேற்கொண்டுள்ளனர். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் மண்டபவாசலில் ஒளிப்பதிவு சாதனத்துடன் நின்ற இந்த அதிகாரிகள் கூட்டத்திற்கு வருவோரை தனித்தனியாக பதிவு செய்ததுடன், கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களையும் ஒலிப்பதிவு செய்துள்ளனர்.

புலனாய்வுத் துறையினரின் இந்நடவடிக்கையை கடுமையாக கண்டித்த தமிழர் நடவடிக்கை குழுவினர், இதுபற்றி சிறீலங்கா பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்ட போது அவர் இவ் விடயம் பற்றி தனக்கு எதுவுமே தெரியாதெனவும் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுத் துறையினரின் இந் நடவடிக்கையினால் கொழும்பு தமிழர் பிரமுகர்களினிடையே பாதுகாப்பு குறித்த அச்சம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா
இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்
ஈழநிலா

தொடர்புகட்கு:
இயக்குநர்
S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669

# நடைபாதை குறிப்புகள்

## மரியாதையா? அவமரியாதையா?

கடந்தவார இறுதியில் பாரிஸ் நகரில் ஒரு விழா நடந்தது. தேசப் பற்றாளர்களான அந்த விழா ஏற்பாட்டாளர்கள், எமது தாயக விடுதலைக்காய் உயிர் நீத்த மாவீரர்களுக்கும், மக்களுக்கும் மரியாதை வணக்கம் செலுத்தும் நிகழ்வுடன் அந்த விழாவை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்த விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதற்காக மேடைக்கு வந்தவர்- முதல் நிகழ்வாக மரியாதை வணக்க நிகழ்வு இடம்பெறும் என்று அறிவித்தார்.

அந்த விழாவுக்கு வந்திருந்த அனைவரும் எழுந்து நின்று அந்த மரியாதை வணக்க நிகழ்வில் பங்கெடுத்துக் கொண்டனர்.

ஆனால் 'மரியாதை வணக்கம் செலுத்துவோம்' என்று அறிவிப்புச் செய்தவர் தனது தலையில் அணிந்திருந்த தொப்பியை கழற்றாது நின்றது மிகப்பெரிய நெருடலாகவும், அந்த விழாவுக்கு வந்த மரியாதை வணக்கம் செலுத்திய அனைவரையும் அவமதிப்பது போலவும், எல்லாவற்றுக்கும் மேலாக எவர்களுக்காக அந்த மரியாதை வணக்க நிகழ்வு நடந்ததோ அவர்களையே அவமதிப்பது போலவும் இருந்தது.

ஒரு சண்டையில் எதிரிப் படையில் ஒருவன் இறந்துவிட்டாலும், தலையில் உள்ள தொப்பியை கழற்றி இறந்தவனுக்கு மரியாதை செலுத்துவது உலக நியதி. தலையில் தொப்பி அணிந்து கொண்டு எவரும் மரியாதை வணக்கம் செலுத்துவதில்லை.

இது எந்த விதத்திலும் சமாதானம் கூறமுடியாத -நியாயம் கற்பிக்க முடியாத ஒரு பெரிய தவறாகும்.

★ ★ ★

## அம்மாவா ஹ...ம்மாவா?

கடந்த வாரம் பாரிசில் இடம்பெற்ற சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களில் சிலர் - மந்திரங்களை தமிழில் சொல்வது பற்றியும், தமிழ் வழிபாடு பற்றியும் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். தங்களுடைய கருத்துக்கு ஆதாரமாக 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்' என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தை ஆதாரம் காட்டியிருந்தனர். இறைவனை மக்கள் தங்கள் தாய் மொழியில்தான் வழிபடவேண்டும் என்று அவர்கள் வாதிட்டது, அங்கு வந்திருந்த ஒரு பக்தருக்குப் பிடிக்கவில்லை. இவர்களுக்கு மந்திரங்களைப் பற்றி என்ன தெரியும்- வேதங்கள் உபநிடதங்களின் மகத்துவம் பற்றி என்ன தெரியும்? தமிழில் மந்திரங்களைச் சொல்ல முடியாது - அதைச் சொல்வதற்குரிய 'ஒலி' தமிழில் கிடையாது - 'ஓம்' என்பதை தமிழில் சொல்வதற்கும் சமஸ்கிருதத்தில் சொல்வதற்கும் எவ்வளவு ஒலி வித்தியாசம். ஒவ்வொரு எழுத்துக்கும் அழுத்தம்கொடுத்து உச்சரிக்கும் 'சிறப்புப் பண்பு' சமஸ்கிருதத்துக்கு 'மட்டுமே' உண்டு. தமிழில் மந்திரங்களைச் சொன்னால் அம்மா வணக்கம் என்று சாதாரணமாக சொல்வது போல் பிரயோசனம் இல்லாத ஒன்றாகவே இருக்கும் என்று வெளுத்துவாங்கிவிட்டார்.

இனிமேல் அம்மா என்ற அழகிய தமிழ் சொல்லை அம்மா என்று அழைக்காதீர்கள். அப்படிச்சொன்னால், அம்மாவுக்குக் கேட்காது - ஹம்மா.... ஹம்மா....ஹ....ஹ!! என்று அழுத்திச் சொல்லுங்கள். -அப்போதுதான் உங்கள் அம்மா உங்களைக் கவனிப்பார்.

- நாடோடி

ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

Pub

# கைதுசெய்யப்படுவோர் சித்திரவதை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும்

## ஐ.நா. அமைப்பு சிறீலங்கா அரசை வலியுறுத்தல்

கடந்த ஜூன் 26-ம் திகதியை சித்திரவதைக்கு எதிரான நாளாகப் பிரகடனப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை அரசாங்கத்தைக் கோரியிருந்தது. கடந்த பதினைந்து வருடங்களாகத் தொடர்ந்து வரும் இனப் போராட்டம் காரணமாக வகைதொகையற்ற கைது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் காலவரையறையின்றி தடுத்து வைத்தல், சித்திரவதைகள், காணாமல் போதல் போன்றவற்றை தமிழ் மக்கள் அனுபவித்து வந்த போதிலும் சர்வதேச கவனம் தற்போதுதான் ஈர்க்கப்பட்டுள்ளது.

அனைத்துலக மனித உரிமைப்பட்டயம் உருவாக்கப்பட்டு பொன்விழா கொண்டாடப்பட்டு வரும் இன்றைய சூழலில் கூட மனித உரிமைகள் என்பது வெறும் ஏட்டளவில் தான் இருக்கிறது என்பதுடன், அடக்கப்படும் மக்களுக்கு அது எட்டாக் கனியே என்ற எண்ணமே வலுப்பெற்று வருகிறது.

மிகவும் சொற்ப அளவிலான ஆளும்வர்க்கம் பாட்டாளி மக்களை அடக்கி ஆட்சி அதிகாரத்தை தக்கவைக்கவும் சிறுபான்மை இனங்களின் உரிமைப்போராட்டத்தை அடக்கவும் மனித உரிமை மீறல்கள் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள்

எமது நாட்டைப் பொறுத்த வரை தமிழ் மக்களது உரிமைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக துளிர்த்த 80 களிலிருந்து மனித உரிமை மீறல்களும் இடம்பெற்று வருகின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்ற விசாரணைகள் முடியும்வரை காலவரையறையின்றி தடுத்து வைக்க அதிகாரம் வழங்கப்பட்டமை, அவசர காலச்சட்டத்தின் கீழ் இறப்பவர்களது சடலங்களை எந்தவித மரணவிசாரணையோ, பிரேத பரிசோதனையோ இல்லாது அழிக்கும் அதிகாரம் பாதுகாப்பு படையினருக்கு கொடுக்கப்பட்டமை மனித உரிமை மீறல்களுக்கு தீனி போட்டன.

### அப்பாவிகள் சித்திரவதை

மேலும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழக்குகளில் முக்கிய சான்றாக கொள்ளவும் வழிவகுத்த காரணத்தினால் தடுப்பு முகாம்களில் அப்பாவிகள் கூட சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட வழிவகுத்தது.

சர்வதேச மன்னிப்புச்சபை உலகளாவிய மனித உரிமை

**அவசர காலச்சட்டத்தின் கீழ் இறப்பவர்களது சடலங்களை எந்தவித மரணவிசாரணையோ, பிரேத பரிசோதனையோ இல்லாது அழிக்கும் அதிகாரம் பாதுகாப்பு படையினருக்கு கொடுக்கப்பட்டமை மனித உரிமை மீறல்களுக்கு தீனிபோட்டன.**

மீறல்கள் தொடர்பாக கடந்த வருட கசப்பான அனுபவங்களைத் திரட்டி வெளியிட்ட அறிக்கையில் சிறீலங்காவின் கள நிலவரங்கள் பற்றியும் பிரஸ்தாபித்துள்ளது. காணாமல் போதல், கைதாவோர் சித்திரவதை துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்படல், கைதாவோர் விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுதல் சிறிலங்காவில் தொடர்ந்து வருவதாக கோடிட்டுக் காட்டியுள்ளது.

**கைதுசெய்யப்படுவோர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதன் காரணமாக உடல், உள ரீதியாக பாதிக்கப்படுவதுடன் உயிராபத்தையும் எதிர்நோக்குவதாகவும் அனைத்துலக மனித உரிமைகள் கழகம் கவலை தெரிவித்துள்ளது.**

### உடல் உள ரீதியாக பாதிப்புகள்

கைதுசெய்யப்படுவோர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதன் காரணமாக உடல், உள ரீதியாக பாதிக்கப்படுவதுடன் உயிராபத்தையும் எதிர்நோக்குவதாகவும் அனைத்துலக மனித உரிமைகள் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

இராணுவம் மற்றும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டவர்கள் உடல், உளரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதை உடனடியாக நிறுத்த சிறீலங்கா அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்தோடு கைது செய்யப்படுபவர்களை நீதிமன்றங்களின் முன் உடனடியாக ஆஜர் செய்து விசாரணைகளைத் துரிதப்படுத்தவேண்டும் என்று சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதாபிமான மற்ற நடவடிக்கைக்கு எதிரான ஐநா அமைப்பு சிறீலங்கா அரசினை வற்புறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை இதனை வரவேற்றதுடன், சிறீலங்கா அரசு 'சித்திரவதையினால் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக்கொண்டு பின்புலத்தில் நின்று செயற்பட்ட சக்திகளை இனங்கண்டு நீதியின் முன்பு நிறுத்தவேண்டும். அத்தோடு தொடர்ந்தும் சித்திரவதைகள் இடம்பெறாது உறுதிப்படுத்துவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறது.

### பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வு செய்ய கோரிக்கை

பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகாலத்தடைச்சட்டம் என்பன மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற சித்திரவதைக்கு எதிரான மாநாட்டில் கலந்து கொண்ட சிறீலங்காப் பிரதிநிதி எம்பிலிப்பிட்டிய மாணவர்கள் படுகொலைச் சம்பவத்தோடு தொடர்புள்ளதாக 6 பொலிசாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் தற்போதைய அரசினால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பல்வேறு சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்பது குறித்து அந்த அதிகாரி எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை.

### சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோர் தொடர்பாக விசாரித்த முன்னாள் மேல்முறையீட்டு நீதிமன்ற தலைவர் கி. பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழு தனது அறிக்கையில் சில சம்பவங்களோடு தொடர்புள்ளதாக பொதுமக்கள் தெரிவித்த பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்களின் பெயர்களைப் பிரஸ்தாபித்துள்ளது. ஆனால் பல மாதங்களாகியும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதேபோல கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்தை விசாரித்த ஓ.ஏ. செனிவிரத்னவின் தலைமையிலான ஆணைக்குழு அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்ட முகாம் பொறுப்பதிகாரி வேலையிலிருந்து நீக்கப்பட்டாரே தவிர நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் சிறீலங்காவிற்கு விஜயம் செய்த ஐநா பிரதிநிதி நியாயே மட்டக்களப்பு, யாழ், மாவட்டத்தில் பலரது கருத்துக்களைக் கேட்டறிந்தார். 'சிறீலங்காவின் வடக்கு' கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோர் தொடர்பாக சிறீலங்கா அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை, படையில் 99 சதவீதமானோர் பெரும்பான்மையினத்தவரே உள்ளனர். குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்காது தப்பிக்க விடுவதாலேயே மனித உரிமை மீறல்கள் இங்கு தொடர்கின்றன என அவர் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

ஐ.நா. காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் ஐ.நா. பிரதிநிதி மட்டக்களப்பு வந்த போது சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி கோ. தங்க வடிவேல் 'குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்படுகிறது. இதனால் தமிழை தாய்மொழியாகக் கொண்ட சந்தேக நபர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சந்தேக நபர்களை தமிழில் கூறுவதை மூன்றாவது நபரொருவர் மொழிபெயர்க்கவே உயர் பொலிஸ் அதிகாரி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்கிறார். இதனால் என்ன பதிவு செய்யப்பட்டிருக்கிதென்பது தெரியாமலே ஒப்பமிடும் நிலைமை உள்ளது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.'

### தாய்மொழியில் பதிவி இல்லாததால் ....

இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தாய் மொழியிலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது, ஆனால் இங்கு தாய்மொழியில் பதிவு செய்யப்படாததால் எந்தளவுக்கு சான்றாக இதனை ஏற்கமுடியுமென்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் வினா எழுப்பினார்.

'சிறீலங்கா அரசு எமது நாட்டில் இடம்பெற்று வரும் சித்திரவதை மற்றும் காணாமல் போதல் போன்றன தொடர்பாக சர்வதேச மட்டத்தில் எழும் ஆதங்கத்திற்காவது மதிப்பளிக்க வேண்டும் குறிப்பாக ஐ.நா. அமையத்தின் அதிருப்திக்கு செவிசாய்க்க வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்திலும், அவசரகால சட்டத்திலும் சித்திரவதைக்கு இடமளிக்கும் ஏற்பாடுகளை நீக்க வேண்டும். நீண்டகாலத்திற்கு விசாரணை இல்லாது தடுத்து வைக்கும் சரத்துக்களை நீக்கி விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விசாரணைகளைத் துரிதப்படுத்தவேண்டும். மரண விசாரணையின்றி, பிரேத பரிசோதனையின்றி சடலங்களை அடக்கம் செய்யும் ஏற்பாடுகள் நீக்கப்படவேண்டும்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தமிழில் பதிவு செய்ய ஆவன செய்யப்படவேண்டும்.

யுத்தமுனையில் நிற்கும் படையினரை அதிருப்திப்படுத்தக் கூடாதென்ற தோரணையில் கண்டும் காணாததுபோல அரசு கண்ணை மூடிக்கொண்டிருக்குமானால் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறலுக்கும் பெயர் போன நாடாக சிறீலங்கா மாறுவதை யாராலும் தடுக்க முடியாது.

**பயங்கரவாத தடைச் சட்டத்திலும், அவசரகால சட்டத்திலும் சித்திரவதைக்கு இடமளிக்கும் ஏற்பாடுகளை நீக்க வேண்டும். நீண்டகாலத்திற்கு விசாரணை இல்லாது தடுத்து வைக்கும் சரத்துக்களை நீக்கி விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விசாரணைகளைத் துரிதப்படுத்தவேண்டும்.**

நன்றி
(வீரகேசரி)


சத்துணவுத்திட்ட நிதிக்காக

**நாட்டிய இசை மாலை**

**காலம்: 14.07.1998**

நேரம்: பிற்பகல் 3 மணி

இடம்: **Salle St Vincent de Paul (MEINAU) 67100 STRASBOURG**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்ஸ்

தொடர்புகளுக்கு: 03 88 84 98 02
03 88 65 92 55

நிகழ்ச்சிகள் யாவும் பிற்பகல் 7 மணியுடன் நிறைவுபெறும். குறிப்பிட்டபடி குறிப்பிட்ட நேரத்துக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.
அனைத்து தமிழ் மக்களையும் ஆதரவு தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

# தி.மு.க.வில் மீளவும் வைகோ இணைவாரா? அ.தி.மு.க. கூட்டணி உடையுமா? தமிழக அரசியலில் கூட்டணிகள் மாறுமா?

தமிழ்நாடு அரசு கலைக்கப்படுமா என்ற பரபரபெல்லாம் இப்போது அடங்கிவிட்டது. அடுத்த அரசியல் கூட்டுகள் எப்படி மாறும் என்பதுதான் இப்போதைய பரபரப்புகள். அதிமுக கூட்டணியில் கருத்தொற்றுமை இல்லையென்பது பகிரங்கமாகி விட்டது. இதில் கூட்டணியைச் சேர்ந்த வைகோவின் ம.தி.மு.க. முரண்பட்ட போக்கை கடைப்பிடித்து வருகின்றது. அ.தி.மு.க. கூட்டணியின் முக்கிய கோரிக்கையாக இருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி தி.மு.க. அரசை கலைக்க வேண்டும் என்பதற்கு மாற்றாக, அப்படி கலைக்கப்படக்கூடாது என்னும் கருத்தை ம.தி.மு.க. வலியுறுத்துகின்றது. இந்நிலையில் தி.மு.க.வுடன் வை.கோ இணைகிறார்



என்ற வதந்தி தமிழக அரசியல் வட்டாரத்தில் உலவத்தொடங்கியது. இதுபற்றி தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது அவர் பதிலெதுவும் கூறாது புன்முறுவல் பூத்தார். இது மேலும் சந்தேகங்களை கிளறிவிட, பத்திரிகையாளர்கள் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவை அணுகி கேள்விகளைத் தொடுத்தனர். அப்போது அவர் கூறியதாவது: இரண்டு துருவங்கள் இணைந்தன என்ற பரபரப்பு ஏற்படுத்தும் செய்திகள் வெளியிடப்படலாம். ஆனால் ம.தி.மு.க. கொடுமையான கொலைப்பழியை எதிர்த்து தர்ம யுத்தம் நடத்தி ஐந்து தொண்டர்கள் தீக்குளித்து மடிந்ததால் உருவான இயக்கம். குறுகிய அரசியல் இலாபம் கருதிச் செயல்படாது. 1993-ல் தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்டபோது அ.தி.மு.க.வுடன் இரகசிய பேரம் பேசப்பட்டதாக் கூறப்பட்ட குற்றச்சாட்டு எப்படி பொய்யானதோ, அதுபோல்தான் தி.மு.க.வுடன் ம.தி.மு.க. இணையும் என்பதும் பொய்யாகும். தி.மு.க. மக்களவை உறுப்பினர் மாறனும் நானும் சந்தித்து பேசியதாக வெளிவந்த செய்தியும் பொய்யானது என்று மறுத்தார்.

ஆயினும் அவரது பேட்டியில் அ.தி.மு.க. கூட்டணிக்கு மாறான கருத்துக்களாக, 'திமுக ஆட்சியை கலைக்கும்படி நான் நெருக்குதல் கொடுக்கவில்லை, அப்படிக் கேட்கவும் மாட்டோம்' என்றும், 'சுப்பிரமணிய சுவாமியின் கருத்துக்கு நான் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால் வாஜ்பாய் அரசு சிறப்பாக செயல்படுகிறது. அவர் மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் ஒவ்வொரு பிரச்சனையிலும் அடி எடுத்து வைக்கின்றார்' என்றும், 'அத்வானி நான் மதிக்கின்ற உயர்ந்த தலைவர்' என்றும் கூறியுள்ளவை, மீளவும் வைகோவின் அரசியல் எதிர்காலம் பற்றிய வதந்திகளை கிளப்பவே உதவியுள்ளன.

## 'அரசைக்கவிழ்க்க காங்கிரஸ் முயற்சிக்காது' காங்கிரஸ் தலைவர்கள் அறிவிப்பு!


மத்தியில் இனிமேலும் ஒரு கூட்டணி ஆட்சிக்கு நாங்கள் தயாராக இல்லை. அத்தகைய முயற்சி எதனையும் காங்கிரஸ் கட்சி எடுக்காது என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பிரணாப் முகர்ஜி கல்கத்தாவில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், மத்தியில் ஆட்சி அமைக்க 272 மக்களவை உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும். ஆனால் காங்கிரசிடம் தற்போது 165 உறுப்பினர்கள்தான் உள்ளனர். ஆதரவாக உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை கூட்டினாலும் போதாமல் இருக்கும். ஆதலால் ஆட்சி அமைக்க நாம் விரும்பவில்லை என்றார்.

இதேவேளையில் அகில இந்திய காங்கிரசின் சிரமைப்புக் குழுத்தலைவர் பி.ஏ. சர்மா மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசை கவிழ்க்கும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபடாது என சென்னையில் அறிவித்தார். ஒருவேளை அரசு தானாக வீழ்ந்தால் தனது பொறுப்பை நிறைவேற்றுவதிலிருந்து காங்கிரஸ் ஒருபோதும் பின்வாங்காது எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், மத்தியில் ஆட்சி அமைக்க நாம் விரும்பவில்லை. நாங்கள் 'ஆட்சி அமைக்க வேண்டும்' என மற்றவர்கள் விரும்பி அதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் கூட்டணிக் கட்சிகள் விதிக்கும் எந்த நிபந்தனையையும் ஏற்க மாட்டோம். அப்படி ஏற்கவேண்டிய அவசியமும் கிடையாது என்றார் அவர்.

## 'தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வேண்டுமானால்...' கர்நாடக அரசு நிபந்தனை!

தமிழ்நாடு தனது தண்ணீர்த் தேவைக்கு கர்நாடக மாநிலத்தையும், ஆந்திர மாநிலத்தையும் சார்ந்துள்ளது. தமிழ் இலக்கியங்கள் புகழ்ந்து பாடும் காவிரி நதியானது, கர்நாடக மாநிலத்திலேயே உற்பத்தியாகி தமிழகத்தின் வழியாக கடலில் கலக்கின்றது. இந்நதி மூலந்தான் தஞ்சாவூர் மாவட்டம் வளம்பெறுகின்றது. ஆனால் கர்நாடக அரசானது மிகப்பெரிய அணைகளைக் கட்டி பெருமளவிலான நீரை தன் மாநிலத்தில் தேங்க வைத்திருப்பதனால், தமிழகத்திற்கு நீர்வரத்து இல்லாமல்போய் பயிர் செய் நிலங்கள் வரண்டு வருகின்றன. இது நீண்டகாலப் பிரச்சினையாக தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது. தற்போது இப்பிரச்சினை காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கிறது. இந்நிலையில் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூருக்கு குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த 'காவிரி 4-வது திட்டம்' அமுல்படுத்த உள்ளது. ரூ. 1200 கோடியிலான இத்திட்டத்திற்கு ஜப்பானிய சர்வதேச பொருளாதார கூட்டுறவு நிதியம் உதவி செயிகிறது. இக்குடிநீர்த்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க வேண்டாமென ஜப்பானிய நிறுவனத்திற்கு, தமிழக அரசு நேரடியாக கடிதம் எழுதியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக்குடிநீர்த்திட்டம் பற்றி இனிமேல் எதுவும் தமிழ்நாடு முதல்வர் பேசக் கூடாது. அப்படி மீறிப்பேசினால் சென்னைக்கு குடிநீர்வழங்கும் தெலுங்கு - கங்கை திட்டத்திற்கு தண்ணீர் விடுவது பற்றி மறுபரிசீலனை செய்வோம் என்று எச்சரித்துள்ளது கர்நாடக அரசு. இத்தெலுங்கு-கங்கைத் திட்டமானது சென்னை நகருக்கு குடிநீர் வாங்குவதற்கான திட்டமாகும். இது ஆந்திரா கர்நாடக மாநிலங்களுடன் சம்பந்தப்பட்டதாகும்.





## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை அதிமுக புறக்கணிப்பு காங்கிரஸ் தூதர்-ஜெயலலிதா சந்திப்பு!

இந்தியாவில் ஆட்சி ஏற்று நூறு நாட்களை முடித்திருக்கும் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசின் ஆயுள் ஊசலாடிக்கொண்டிருப்பது தெரிந்ததே. இந்நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் பாஜக கூட்டணியின் ஒருங்கிணைப்புக்



குழுக் கூட்டம் பிரதமரின் இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தை அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா தனக்கு உடல் நலமில்லை எனக்கூறி அக்கூட்டத்தை புறக்கணித்துவிட்டார். ஆனால் அதிமுக கூட்டணியில் உள்ள வைகோ கலந்துகொண்டார். வாழப்பாடி ராமமூர்த்தி, டாக்டர் ராமதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கு பொறுப்பாளருமான ஆர். கே. தவான் சென்னை வந்துள்ளார். இவர் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியின் தூதுவராக வந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. இவர் ஜெயலலிதாவை சந்திப்பதற்காகவே வந்ததாய் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் ஜெயலலிதாவைச் சந்தித்தாரா? சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன? என்பது பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் ஏற்கெனவே ஜெயலலிதா காங்கிரசுக்கு தூது அனுப்பியபோது பாஜ ஆட்சியை கவிழ்த்துவிட்டு காங்கிரஸ் மாற்று அரசு அமைக்க முன்வந்தால் ஆதரவு அளிப்பேன் என்று உறுதி அளித்திருந்தார். இதற்கு காங்கிரஸ் தரப்பில் திட்டவட்டமான பதில் அளிக்கப்படவில்லை. இது ஜெயலலிதாவுக்கு ஏமாற்றத்தை அளித்தது. இப்போது காங்கிரஸ் அனுப்பி உள்ள தூதர் ஜெயலலிதாவைச் சந்திக்க என்ன திட்டத்துடன் வந்துள்ளார் என்பது அறியப்படவில்லை.

ஆயினும் வருகிற 3-ம் திகதி பாராளுமன்றம் கூடும் வரை அவசரம் கொள்ளத் தேவையில்லை என்று காங்கிரஸ் கருதுவதாக தெரிகின்றது. நிதி மசோதா மீது இன்னமும் வாக்கெடுப்பு நடக்கவில்லை. அது வாக்கெடுப்புக்கு வரும்போது காய்களை நகர்த்த தருணம் பார்த்திருக்கிறது காங்கிரஸ் என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

## 'அணுமின் நிலையங்கள் அமைக்க வாருங்கள்' நேச நாடுகளுக்கு இந்தியா அழைப்பு!

இந்தியாவும் — ரஷ்யாவும் இணைந்து கூட்டுத்தொழில்நுட்பத்தில், கூடங்குளம் அணுமின் நிலையம் அமைக்க உள்ளது தெரிந்ததே. இந்நிலையில் இத்திட்டத்தைப் போன்று பாதுகாப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கூட்டுத்தொழில் நுட்பத்தில் அணுமின் நிலையங்கள் அமைக்க நேச நாடுகள் முன்வந்தால் அதை வரவேற்போம் என்று அணுசக்தி குழுமத்தின் தலவர் டாக்டர் ஆர்.சிதம்பரம் கூறினார்.

அமெரிக்காவில் 100 அணு உலைகளும் பிரான்சில் 50 அணு உலைகளும் உள்ளன. தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு நம் நாட்டில் மிகக் குறைவு. இது உயரவேண்டுமானால் அணுமின் உலைகள் அமைப்பதில் தவறில்லை என்றார் அவர்.

## அயோத்தியில் இருந்த வழிபாட்டுத் தலம் இடிபட்ட மசூதியா? இராமர் கோவிலா? பௌத்த ஆலயமா? கிணறு வெட்ட பூதம் கிளம்புகிறது!

அயோத்தியில் இஸ்லாம் மத வழிபாட்டுத் தலமான பாபர் மசூதி இடிக்கப்பட்ட விவகாரம் தெரிந்ததே. அதில் இராமர் கோயில் இருந்ததென்றும் அக்கோயிலைக் கட்ட மீண்டும் முயற்சிக்கப்படுவதும் கடந்த வாரம் செய்திகளில் இடம் பெற்றிருந்தன.

இப்போது ஜப்பானிய பௌத்த துறவி ஒருவர் 'அயோத்தியில் இராமர் கோயில் இருந்ததில்லை. அங்கு பௌத்த விஹாரம்தான் இருந்தது. என்ற புதிய தகவலை இந்திய குடியரசுத் தலைவர்களுக்கும், பிரதமருக்கும் தொலைநகல் மூலம் தெரிவித்து புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளார்.

வேதாந்தாய நாகர்ஜுன் கராய் சராய் என்ற அவர் கூறியுள்ளதாவது, அயோத்தியில் பௌத்த விஹார் இருந்ததால், இந்த இடத்தில் தங்களது உரிமையை பௌத்த துறவிகள் நிலைநாட்டிக்கொள்ள வேண்டும். அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் தொல்லியல் துறையினர் அகழ்வாய்வு நடத்தி வரலாற்றுச் சான்றுகளை வெளிக்கொணர வேண்டும். அப்போதுதான் அதற்கு ஒரு சுமுக தீர்வு ஏற்படும். அயாத்திக்கு உண்மையில் 'காஹேத்' என்ற பெயர் உண்டு.

அது சமஸ்கிருத புலவரும் பௌத்த துறவியுமான அஸ்வ கோஷ் பிறந்த இடமாகும். அவர்தான் கி.பி. முதல் நூற்றாண்டில் புத்தரின் சரித்திரத்தை எழுதியவர். புத்தருக்கு அயோத்தி மிகவும் பிடித்த இடமாகும். அங்கு அவர் பல ஆண்டுகள் வசித்து வந்தார். ஆனால் பௌத்த ஆலயம் அழிந்த பிறகு மற்றக் கதைகள் அங்கு உருவாகின. சமீபத்திய ஆண்டுகளில் இந்திய தொல்லியல் துறை மூன்று முறை அழகாய்வுகள் நடாத்தியுள்ளன. அப்போது புத்தர், யாகுஷி, யாகுஷாணி, நாகராஜ், நாககன்னி ஆகியோரின் உருவச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதிய சர்ச்சையை கிளப்பியுள்ள இவர், ஏற்கனவே பிகார் மாநிலத்தில் பௌத்த கயவை கண்டறிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க.வில் மீளவும் வைகோ இணைவாரா?



அ.தி.மு.க. கூட்டணி உடையுமா? தமிழக அரசியலில் கூட்டணிகள் மாறுமா?தமிழ்நாடு அரசு கலைக்கப்படுமா என்ற பரபரபெல்லாம் இப்போது அடங்கிவிட்டது. அடுத்த அரசியல் கூட்டுகள் எப்படி மாறும் என்பதுதான் இப்போதைய பரபரப்புகள். அதிமுக கூட்டணியில் கருத்தொற்றுமை இல்லையென்பது பகிரங்கமாகிவிட்டது. இதில் கூட்டணியைச் சேர்ந்த வைகோவின் ம.தி.மு.க. முரண்பட்ட போக்கை கடைப்பிடித்து வருகின்றது. அ.தி.மு.க. கூட்டணியின் முக்கிய கோரிக்கையாக இருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி தி.மு.க. அரசை கலைக்கவேண்டும் என்பதற்கு மாற்றாக, அப்படி கலைக்கப்படக்கூடாது என்னும் கருத்தை ம.தி.மு.க. வலியுறுத்துகின்றது. இந்நிலையில் தி.மு.க.வுடன் வை.கோ இணைகிறார் என்ற வதந்தி தமிழக அரசியல் வட்டாரத்தில் உலவத்தொடங்கியது. இதுபற்றி தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அவர் பதிலெதுவும் கூறாது புன்முறுவல் பூத்தார். இது மேலும் சந்தேகங்களை கிளறிவிட பத்திரிகையாளர்கள் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவை அணுகி கேள்விகளைத் தொடுத்தனர். அப்போது அவர் கூறியதாவது: இரண்டு துருவங்கள் இணைந்தன என்ற பரபரப்பு ஏற்படுத்தும் செய்திகள் வெளியிடப்படலாம். ஆனால் ம.தி.மு.க. கொடுமையான கொலைப்பழியை எதிர்த்து தர்ம யுத்தம் நடத்தி ஐந்து தொண்டர்கள் தீக்குளித்து மடிந்ததால் உருவான இயக்கம். குறுகிய அரசியல் லாபம் கருதிச் செயல்படாது. 1993-ல் தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்டபோது அ.தி.மு.க.வுடன் இரகசிய பேரம் பேசப்பட்டதாக கூறப்பட்ட குற்றச்சாட்டு எப்படி பொய்யானதோ, அதுபோல்தான் தி.மு.க.வுடன் ம.தி.மு.க. இணையும் என்பதும் பொய்யாகும். தி.மு.க. மக்களவை உறுப்பினர் மாறனும் நானும் சந்தித்து பேசியதாக வெளிவந்த செய்தியும் பொய்யானது என்று மறுத்தார்.

ஆயினும் அவரது பேட்டியில் அ.தி.மு.க. கூட்டணிக்கு மாறான கருத்துக்களாக, 'திமுக ஆட்சியை கலைக்கும்படி நான் நெருக்குதல் கொடுக்கவில்லை, அப்படிக் கேட்கவும் மாட்டோம்' என்றும், 'சுப்பிரமணிய சுவாமியின் கருத்துக்கு நான் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால் வாஜ்பாய் அரசு சிறப்பாக செயல்படுகிறது. அவர் மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் ஒவ்வொரு பிரச்சனையிலும் அடி எடுத்து வைக்கின்றார்' என்றும், 'அத்வானி நான் மதிக்கின்ற உயர்ந்த தலைவர்' என்றும் கூறியுள்ளவை மீளவும் வைகோவின் அரசியல் எதிர்காலம் பற்றிய வதந்திகளை கிளப்பவே உதவியுள்ளன.

## லாலு - முலாயம் சிங் பிரிந்தவர்கள் இணைகிறார்கள்

### இந்திய அரசியலில் உருவாகும் புதிய அணி!





லாலு பிரசாத் யாதவ்வின் ராஷ்ட்ரீய ஜனதா தளமும் முலாயம் சிங் யாதவ்வின் சமாஜ்வாதிக் கட்சியும் இணைந்து 'ராஷ்ட்ரீய லோக்தந்திரிக் மோர்ச்சசா' என்ற புதிய முன்னணியை உருவாக்கியுள்ளன. இந்திய பாராளுமன்றத்தில் லாலு பிரசாத் யாதவ்வுக்கு 17 உறுப்பினர்களும், முலாயம் சிங் யாதவ்வுக்கு 20 உறுப்பினர்களும் உள்ளனர். இம் முன்னணி பற்றி பா.ஜ.க. பொதுச் செயலாளர் கூறுகையில், இதுபோல ஏராளமான முன்னணிகள் வந்து போய்விட்டன. எனவே இதைப் பற்றியெல்லாம் கருத்துக் கூறவேண்டிய அவசியமில்லை என்றார். ஆனால் இம் முன்னணியை தி.மு.க. தலைவர் கருணாநிதியும், த.மா.கா தலைவர் மூப்பனாரும் வரவேற்றுள்ளனர்.


## "பாரதிய ஜனதா அரசு கவிழ வேண்டும் மதச் சார்பற்ற அரசு அமைய வேண்டும்"

### இந்தியாவின் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒரே குரலில்!

'பாரதிய ஜனதா அரசைப் பதவியிலிருந்து அகற்ற தனது முழு ஆதரவும் உண்டு' என்று மேற்கு வங்க முதலமைச்சரும் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான ஜோதிபாசு அறிவித்துள்ளார். அவர் மேற்கு வங்கத்தில் இருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

'பா.ஜ.க. தலைமையிலான காட்டுமிராண்டி அரசு மத்தியில் ஆட்சி செய்கிறது. பதவியிலிருந்து அது விரைவில் நீக்கப்படுவது நாட்டுக்கு நல்லது. இதற்காக யார் நடவடிக்கை எடுத்தாலும் என் ஆதரவு உண்டு. அடுத்து ஆட்சிக்கு வருவது காங்கிரஸ் கட்சியேயானாலும் பரவாயில்லை. மற்றப்படி மதச்சார்பற்ற ஜனநாயக அரசுதான் இப்போதைய முக்கிய தேவை. பாரதிய ஜனதா அரசைப் பதவியிலிருந்து அகற்ற லாலு பிரசாத் யாதவ் எடுக்கும் முயற்சி வெற்றிபெற வேண்டும்' எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பரதன், பா.ஜ.க. 100 நாள் ஆட்சி அதன் இயலாமையை தெள்ளத்தெளிவாக படம்பிடித்துக் காட்டிவிட்டது. பா.ஜ.க. கூட்டணி அரசு இனி நீண்ட நாள் நீடிக்காது. யாரும் கவிழ்க்க அவசியமில்லாமல் தானாகவே அது கவிழ்ந்து விடும் என பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். லாலு பிரசாத் யாதவ் - முலாயம் சிங் யாதவ் இணைந்து புதிய அணியை துவக்கி இருப்பதில் தவற இல்லை. மதச்சார்பற்ற சக்திகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு அவசியம் ஆகும் எனவும் தெரிவித்தார்.



நன்றி: நக்கீரன்

## வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ தமிழ்மொழி வளர்ச்சிக்கு முதலாவது தடை, இன்றுவரையில் 100க்கு 40 பேர் எழுத்தறிவற்றவர்களாக வைக்கப்பட்டிருப்பதே ஆகும். தமிழ்நாட்டில் 1947 முதல் ஆட்சிப் பொறுப்பிலிருந்த எல்லாக் கட்சிகளும் இதற்கு பொறுப்பு ஏற்கவேண்டும். கல்வித் துறை அதிகாரிகள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், மேல் நிலை - உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், பாடநூல் தேர்வுக் குழுவினர் என்போர் பயிற்று மொழி-ஆட்சி மொழி பற்றிக் கருத்துக் கூறவும், கருத்தை உருவாக்கவும் நல்ல தகுதி பெற்றவர்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலோர் தமிழில் புலமையும் திறமையும் உண்மையான பற்றுதலும் இல்லாதவர்கள். எனவே தமிழ் வளர்ச்சிக்கான இவர்களின் பங்களிப்பு மிகவும் சுருங்கிவிட்டது.

*'சிந்தனையயாளன்' இதழின் ஆசிரியர்*
*வே. ஆனைமுத்து ஜூன் இதழின் கட்டுரை ஒன்றில்.*

❀ ❀ ❀

☺ ஆதிக்க சாதியினரின் இழிச்சொல்லால், பழிப்பேச்சால், அவமானத்தால் வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால், மனிதாபிமானமற்ற செயல்களால் தலித் மக்களின் வரலாறு இன்னும் காயப்பட்டதாகவே இருக்கிறது. அடிப்படையில் இவர்களது வாழ்க்கையே ஏறக்குறைய தமிழ் சினிமா தோன்றியதிலிருந்து இன்றுவரை, தலித் மக்களை சித்தரிக்கும் முறை மாறாமலிருப்பதுதான் ஆச்சரியம். இந்த சித்தரிப்பை கொஞ்சமாவது மாற்ற வேண்டுமென்று யாருமே தமிழ்த் திரைப்பட வரலாற்றில் இதுவரை முயற்சி எடுக்கவில்லை என்பதும் வருத்தத்திற்குரியது.

*கணையாழி ஜூன் இதழில்*
*அ. இருதயராஜ் எழுதிய கட்டுரையில்*

❀ ❀ ❀

☺ தமிழ் சினிமா பையப்பைய நடைபயின்ற 1937-40 களிடையே வருடத்திற்கு 37-38 படங்களை வெளியிட்டு வந்தது. கடந்த ஆண்டு 'ஸ்டிரைக்' நடந்தபோது 76 படங்கள் வெளியானது. இந்த ஆண்டில் ஆறுமாதமாகியும் வெளியாகி இருக்கிற படங்கள் 33தான்!

டிசம்பருக்குள் ஒரு 15 படங்கள் வெளியானாலே ஆச்சரியம்.

படவுலகில் பஞ்சம் ஏற்பட்டதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும், அர்த்தமுள்ள காரணங்களாகச் சொல்படுவது ஆறேழுதான்.

நகர்ப்புறம் முதல் நாட்டுப்புறம் வரை மக்களைக் கவரக்கூடிய ஒரே மீடியா சினிமாதான் என்ற நீண்டகால நம்பிக்கையை தகர்த்து விட்டது தொலைக்காட்சிப்பெட்டி!

*'தள்ளாடும் தமிழ் சினிமா'*
*நக்கீரன் இதழ் கட்டுரை 19.06.98.*

❀ ❀ ❀

☺ நான் 200 சதவீதம் இந்தியன். இந்து மதத்தில் தீவிர நம்பிக்கை கொண்டவன். நமக்கு மறுபிறப்பு கிடைத்தால் மீண்டும் நடிகனாகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.சினிமா உலகில் மேலும் மேலும் வெற்றிகள் பெற்று சாதனை புரிய விரும்புகின்றேன்.

*நடிகர் சிவாஜி கணேசன் கூறியுள்ளதாக ராணியில்.*

❀ ❀ ❀

☺ இந்திய ஏவுகணை தொழில்நுட்பத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் அப்துல்கலாம் தீவிர சைவப்பிரியர். எந்த விழாவில் கலந்து கொண்டாலும் சரி அசைவத்தை தொடவே மாட்டார். 'ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை' என்று இவரிடம் கேட்டால் 'நான் திருமணம் செய்திருந்தால் நாட்டுக்கு இவ்வளவு பெரிய சேவை செய்து இருப்பேனா என்பது சந்தேகம் தான்' என்கிறார்.

*ராணி 21.06.98 இதழில்*

❀ ❀ ❀

ஏன்
வடநாட்டின் குளிருக்கு
கால்சராயும் பூட்சோடும் பூசாரி.
மோட்டார் போட்டாகிவிட்டது
பெருமாள் கோயில் தேருக்கு.
திருப்பதிக்கு போக முடியாவிட்டால்
தி.நகர் கிளையில் காணிக்கை செலுத்தலாம்
மூணுநாள் விரதம் ஐயப்பனுக்கு போதும்
அரே ராமாவில்
ஆங்கிலேய அர்ச்சகர்
இந்தோனேசிய கோயிலில்
செருப்பு போட்டுக் கொள்ளலாமாம்.
கணேசனுக்கும்
கோழிக்கறி படையல்.
சட்டம் எழுதியாயிற்று
எல்லாச் சாதியும்
கோயிலுக்குள் வர!
என்னாடு போனாலும்
தென்னாடுடைய சிவனுக்கு
மாதவிலக்குள்ள பெண்கள் மட்டும்
ஆவதே இல்லை

*'கணையாழி' இதழில் எழுத்தாளர் சுஜாதா*
*அறிமுகம் செய்துள்ள கனிமொழியின் கவிதை*

❀ ❀ ❀




## வடகொரியாவின் நீர்மூழ்கியில் மாலுமிகளின் சடலங்கள்

தென்கொரிய கடற் பிராந்தியத்தில் கடந்த வியாழனன்று கண்டுபிடிக்கப்பட்ட ஓர் நீர்மூழ்கி கடற்படையினரால் கட்டி இழுக்கப்பட்டு துறைமுகத்திற்குள் கொண்டுவரப்பட்டது. இதனை கடற்படையினர் திறந்த போது உள்ளே 9 வடகொரியர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டனர். இது பற்றி தென்கொரியாவின் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டிருந்தது.

தென்கொரியக் கடற் பகுதியில் கடந்த திங்களன்று மீன்பிடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களது வலையில் விசித்திரமான ஏதோ ஒன்று சிக்கியதாகவும், மிகவும் பாரிய ஒன்றாக அது இருந்தபடியால் கடற்படையின் உதவி கோரப்பட்டது. இதன்பின் அது ஒரு நீர்மூழ்கி என அடையாளம் காணப்பட்டு கடற்படையினரால் கட்டி இழுத்து துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன் உள் தளத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 5 வடகொரிய கடற்படையினரும் 4 உளவாளிகள் எனக் கருதப்படுபவர்களும் இறந்த நிலையில் காணப்பட்டனர்.

வடகொரியாவின் இந் நீர்மூழ்கி தென் கொரியாவில் இயங்கி வந்த உளவாளிகளை ஏற்றிக்கொண்டு சென்றவேளை விபத்தில் சிக்கியிருக்கலாம் என்றும் தென்கொரிய கடற்படையிடம் தாம் உயிருடன் பிடிபடக் கூடாது என்ற நோக்கில் இறுதி நேரத்தில் தங்களைத்



தாங்களே சுட்டுக்கொண்டு இவர்கள் இறந்துபோயிருக்கலாம் என்றும் தென்கொரியத் தரப்பில் கூறப்படுகிறது.

இதே வேளை வடகொரியா பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தனது நீர் முழ்கிகளில் ஒன்று காணாமல் போயுள்ளதாயும் அதனைத் தேடும் பணி நடந்துகொண்டிருப்பதாயும் அறிவித்துள்ளது.

### ஆப்கானிஸ்தான்


## அமைதி திரும்புவதானால் ஆயுத விநியோகம் நிறுத்தப்படவேண்டும்

### – ஐ.நா. பொதுச்செயலாளர்

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்துவரும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் யுத்தத்தில் ஈடுபடும் பகுதியினருக்கு அயல் நாடுகள் வழங்கி வரும் ஆயுத விநியோகத்தை உடனடியாக நிறுத்தவேண்டும் என ஐ.நா.வின் பொதுச் செயலாளர் கோபி அனான் அவர்கள் அறிக்கையொன்றின் மூலம் கடந்த வியாழனன்று தெரிவித்துள்ளார்.

ஐ.நா. அதிகாரிகளுக்கும் ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளருக்கும் இடையே பெண்கள் கல்வி, உடல் நலம் போன்ற விடயங்கள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் ஆப்கானிஸ்தானில் பெண்கள் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான சிறுபாடசாலைகள் தலிபான் ஆட்சியாளர்களால் இழுத்துமூடப்பட்டன. இரு தரப்பினருக்குமிடையான பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்து பிரயாணிகள் ஐ.நா. விமானத்தில் ஏறிக்கொண்டிருந்த வேளை எதிர்த்தரப்பினர் ஏவிய எறிகணைகள் நகரின் பல பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. இதன்போது சிலர் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்தை ஐ.நா சபை வன்மையாகக் கண்டித்தது. கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தானில் போரில் ஈடுபடும் இரு தரப்பினரும் கலந்துகொண்ட மாநாடு ஒன்று நடைபெற்றது. ஆனாலும் ஒருவார காலத்தில் உடன்பாடுகள் எதுவும் ஏற்படாத நிலையில் மாநாடு முடிவடைந்தது.

ஆப்கானிஸ்தானில் 85% மான பகுதியை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் தலிபான் அமைப்பினர் தமக்கான ஆயுத விநியோகத்தை பாகிஸ்தானிலும், சவுதிஅரேபியாவில் இருந்தும் பெற்றுக்கொள்கின்றனர். அதேபோல் அவர்களுக்கு எதிராக வடபகுதியில் நிலைகொண்டுள்ள முன்னாள் ஆட்சியாளர்கள், ரஷ்யா மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் இருந்தது தமது விநியோகங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் சம்பந்தப்பட்ட நாடுகளோ தாம்



ஆப்கானிஸ்தானுக்கு எந்த வித ஆயுத விநியோகங்களையும் மேற்கொள்ளவில்லை என மறுத்துவருகின்றன.

ஆப்கானிஸ்தானின் இன்றைய நிலைக்கு இந்நாட்டின் பிரச்சினைக்குள் தலையிட்டுள்ள வெளிநாடுகளே காரணம். அவர்கள் ஆயுதங்களையோ அல்லது வேறுவிதமான உதவிகளையோ சண்டையில் ஈடுபட்டுள்ள பகுதியினருக்கு வழங்குகின்றனர்.

இது நிறுத்தப்பட்டால் மாத்திரமே ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்பட வழியேற்படும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கூறியுள்ளார். எதிர்வரும் ஜூலை மாதத்தில் ஆப்கானிஸ்தானின் அண்டைய நாடுகளான ஈரான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளும் ரஷ்யாவும், அமெரிக்காவும் ஐ.நா.வின் மேற்பார்வையில் நியூயோர்க்கில் கூட உள்ளன.

இம்மாநாட்டில் ஆப்கானிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தமது முயற்சி குறித்து இவர்கள் ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எதியோப்பியா - எரித்திரியா

## ஐ.நா.வின் சமாதான முயற்சிக்கு வரவேற்பு

எதியோப்பியாவுக்கும், எரித்திரியாவுக்குமிடையே நடந்து வரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஐ.நா. பாதுகாப்புச்சபை ஈடுபட்டுள்ளது. பாதுகாப்புச் சபையின் இவ் அறிவித்தலை இரண்டு நாடுகளும் வரவேற்றுள்ளன. ஐ.நா. பாதுகாப்புச்சபை மேற்கொண்டுள்ள இந்த முயற்சிக்கு எமது ஆதரவு எப்போதும் உண்டு என எரித்திரியாவின் ஜனாதிபதி ஆலோசகர் கூறியுள்ளார். கடந்த மே மாதம் 6-ம் திகதி எரித்திரியாவும், எதியோப்பியாவும் எல்லைப் பகுதியில் ஆரம்பித்த மோதல் சுமார் 7 வாரங்களாகத் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

இம் மோதல்களினால் இரு பகுதிகளிலும் பலநூறு மக்கள் கொல்லப்பட்டு, சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இந்நிலையில் இம்மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஆபிரிக்க 'ஒற்றுமைக்கான அமைப்பு' நாடுகளின் தலைவர்கள் முயன்று வந்தனர். ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் நால்வருடன் அமெரிக்க அதிகாரிகளும் எரித்திரிய, எதியோப்பிய தலைநகர்களில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது எதியோப்பிய அரசு எரித்திரியா தான் கைப்பற்றிய எல்லைப் பகுதியில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியது. ஆனால் எரித்திரியா அப்பிரதேசம் தங்களது என்பதில் தொடர்ந்தும் பிடிவாதமாகவே இருந்துவந்தது. தற்போது ஐ.நா. பாதுகாப்புச் சபை இப் பிரச்சினையில் தலையிட்டுள்ளது. இரு தரப்பினரும் உடனடியான போர்நிறுத்தத்திற்கு வரவேண்டும் என்றும் விமானத் தாக்குதல்களை நிறுத்தவேண்டும் என்றும் கோரியுள்ளதுடன், ஆபிரிக்க ஒற்றுமைக்கான அமைப்பின் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டிருந்தது. இதன்பின் ஐ.நா.வின் செயலாளர் நாயகம் கோபி அனான் அவர்கள் இப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க தான் ஆவல் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இவர் எதியோப்பியா, எரித்திரியா போன்ற நாடுகளுக்கு கடந்த மேமாதம் அதாவது இரு நாடுகளுக்கிடையேயான மோதல்கள் ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன்னர் சென்று வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இறுதியான போர் நிறுத்த முயற்சியில் கொங்கோ ஜனநாயகக் குடியரசின் தலைவர் லோறன் கபிலா ஈடுபட்டுள்ளார். இவர் கடந்த வெள்ளியன்று இவ்விருநாடுகளின் தலைநகர்களிலும் முக்கிய தலைவர்களை சந்தித்தார்.

## பேர்லின் 48 – 49 உணவு வழங்கல் நினைவுநாள் கொண்டாடப்பட்டது

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஜேர்மனி நேச நாட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டது. 1948-ம் ஆண்டின் இறுதியின் பேர்லின் பகுதியில் இருந்து நேசநாட்டுப் படைகளின் மேற்கத்தைய படைப் பிரிவுகளை அங்கிருந்து அகற்றும் முயற்சிகளை சோவியத்யூனியன் மேற்கொண்டது. இதன் ஒருபடியாக 1948-ம் ஆண்டு ஜூன் 24-ம் திகதி மேற்கு பேர்லின் பகுதிக்கான தரைவழி, நீர்வழித் தொடர்புகளை சோவியத் யூனியன் துண்டித்தது. இதன் மூலம் இரண்டு மில்லியன் மேற்கு பேர்லின் மக்கள் உணவின்றியும் வேறு வழித் தொடர்புகள் ஏதுமின்றியும் தனிமைப் படுத்தப் பட்டனர்.

இந் நிலையில் சரியாக இரண்டு நாட்களின் பின் நேச நாடுகளின் மூன்று விமானப் படை விமானங்கள் மேற்கு பேர்லின்மேல் உணவையும், நிலக்கரியையும் போட்டன. சோவியத் யூனியனின் தடைகளுக்கு மத்தியில் சுமார் பதினைந்து மாதங்கள் இவ்விதமான விமான மூலமான உணவு விநியோகங்கள் தொடர்ந்தன.

இறுதியாக சோவியத் யூனியன் தனது நிலையிலிருந்து இறங்கி தரைவழியான தொடர்பினை 1949-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் திறந்தது. உலகப் போரின் முடிவில் பட்டினியாலும், குளிராலும் பாதிக்கப்பட்டிருந்த மேற்கு பேர்லின் மக்க



ளுக்கு வழங்கப்பட்ட இவ் உணவு விநியோகமானது அன்று அம் மக்களை சாவிலிருந்து பாதுகாத்தது.

இதன் ஐம்பதாம் ஆண்டு நினைவுநாள் கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பேர்லினுக்கு உணவு கொண்டு சென்ற அதே விமானம் இம்முறை அங்கு வாழ் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்களை கொண்டுசென்றன.

பேர்லினுக்கான உணவு வழங்கலின்போது அதில் ஈடுபட்ட ஓர் விமானி தற்போது 77 வயதிலும் மீண்டும் கடந்த வார இறுதியில் பேர்லினுக்கு மேலாக விமானத்தில் பறந்து இனிப்புக்களை கீழே போட்டார். உண்மையில் இந்நினைவுநாள் கடந்த வெள்ளி என இருந்த போதும், கடந்த மாதம் 13-ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன் பேர்லினுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போதும் கொண்டாடப்பட்டது.

இது தவிர பேர்லினின் பல பகுதிகளிலும் இசை நிகழ்ச்சிகள் உட்பட பல விழாக்கள் இவ் வாரம் நடத்தப்படவுள்ளன.

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு ஐ.நா. நஷ்டஈடு கோருகிறது

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை கடந்த வெள்ளியன்று கூடியபோது, இரண்டு வருடங்களுக்குமுன் லெபனானில் அமைந்திருந்த தங்களது அகதி முகாமும் படைத்தளமும் தாக்கப்பட்டதற்கு இஸ்ரேலிடம் நஷ்டஈடு கோரியுள்ளது.

தென் லெபனானின் கானா பகுதியில் அமைந்திருந்த பாலஸ்தீன மக்கள் தங்கியிருந்த அகதி முகாம் இஸ்ரேலிய இராணுவத்தின் எறிகணை, விமானத் தாக்குதல்களுக்கு (1996-ம் ஆண்டு ஏப்ரல் 18-ல்) உள்ளாகியது. இதன் போது நூறுக்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர்.

சேதத்திற்காகவும், மக்களுக்கான இழப்பீடாகவும் ஐ.நா பொதுச் சபை 2.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை இஸ்ரேலிய அரசு செலுத்த வேண்டும் எனக் கோரியது. லெபனானில் தங்கியிருக்கும் ஐ.நாவின் இடைக்காலப் படைக்கு நிதி வழங்கும் விவாதம் நடந்தபோது, கானா முகாம் பிரச்சினையும் கிளப்பப்பட்டது. கானா முகாமில் ஐ.நா. சபையின் பி.ஜி. படைப்பிரிவின் தலைமையகம் அமைந்திருந்தது. இதனை நன்றாக இஸ்ரேலிய அரசு அறிந்திருந்தது. ஹிஸ்புல்லா கெரிலாக்களுக்கு எதிராக இஸ்ரேலிய அரசு தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தது.




இஸ்ரேலின் இந்த நடவடிக்கை அன்று சர்வதேச ரீதியில் கண்டனத்திற்குள்ளாகியிருந்தது. இந்த நடவடிக்கையினால் தனது முகாமிற்கு ஏற்பட்ட

இவ்வேளை அப்பகுதியில் வசித்த லெபனான் மக்களும் பெருந்தொகையில் இடம் பெயர்ந்து இம் முகாமிற்குள் தஞ்சமடைந்திருந்தனர். இஸ்ரேல் நடத்திய இத் தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டும், பலர் படுகாயமடைந்தனர்.

ஐ.நாவின் இவ் விவாத வாக்கெடுப்பின்போது 109 வாக்குக்கள் சார்பாகவும் அமெரிக்காவும் இஸ்ரேலும் எதிர்த்தும் வாக்களித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக்- இந்தியாவில் அமெரிக்க தூதுக்குழு

அமெரிக்காவின் செனற் சபையின் உயர் குழுவொன்று குறுகிய சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு



விஜயம் செய்துள்ளது. இதில் செனட்டர் சாம்பிறோன்பக் மற்றும் செனட்டர் சார்ல்றொப் போன்றோர்கள் அடங்குகிறார்கள். இவ் விஜயத்தின் முதற் கட்டமாக இவ்விருவரும் இந்திய பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் உட்பட முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். இப் பேச்சுக்களின்போது இந்தியா அண்மையில் மேற்கொண்ட அணுப் பரிசோதனைகளும், அதன் விளைவாக அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடைகளும் இந்தியாவை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பது பற்றியும், எதிர்காலத்தில் இந்திய அமெரிக்க உறவுகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அரச தலைவர்களுடன் பேச்சுக்களை முடித்த அமெரிக்க அதிகாரிகள் முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் தீட்சித்தையும் சந்தித்தனர்.

இச் சந்திப்பின் பின் தீட்சித் அமெரிக்க தூதுக் குழுவினர் இந்தியாவின் பொறுப்பான தன்மை பற்றியும், அதன் கட்டுப்பாடு குறித்தும் திருப்தியைத் தெரிவித்தனர். அதேவேளை இந்தியா ஆயுத குறைப்பு மற்றும் அணுஆயுத தவிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

இத்தூதுக் குழு அங்கிருந்து பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து, பாகிஸ்தானிய தலைநகர் இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கோஹார் அயூப்கான், மற்றும் முக்கிய தலைவர்களுடன் பேச்சுக்களை நடாத்தியது. இதேவேளை இக் பாகிஸ்தானிய அதிபர் நவாஸ் ஷெரிப் உடனும், நிதி அமைச்சர் சார்த்தாஜ் அசீஸ் உடனும் பேச்சுக்களை மேற்கொள்ளும். பாகிஸ்தான் நடாத்திய அணுப் பரிசோதனையின் பின், அமெரிக்காவுடனான உறவுகள் சிக்கல் நிலையை அடைந்துள்ளன.

பாகிஸ்தானுக்கான பிரதான நிதியோக நாடாக அமெரிக்



காவே இருந்துவந்துள்ளது. தற்போதைய பொருளாதார தடையினால் பாகிஸ்தான் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது.

இந் நெருக்கடிகளை எவ்வகையில் தீர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றியும், தென்னாசியாவின் பாதுகாப்பு நிலவரம் பற்றியும் இத் தூதுக்குழுவினர் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் தொடரும் கலவரங்கள்

பாகிஸ்தானின் துறைமுக நகரும் பொருளாதார தலை நகரமுமான கராச்சியில் அண்மைக்காலமாக கலவரங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இக் கலவரங்களில் இதுவரை நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் என பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறையினர் அறிவித்துள்ளனர்.

இக் கலவரங்களின் புதிய வடிவமாக கடந்த ஞாயிறன்று பிரதான வீதிகளில் துப்பாக்கிச் சமர்களில் இளைஞர் குழுவினர் ஈடுபட்டனர். இம் மோதல்களின் இறுதியில் ஞாயிறு மாலை மட்டும் ஏழு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அநேகமான உடல்கள் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இக்குழு மோதல்களுக்கு MQM எனப்படும் ஓர் கோஷ்டியினரே காரணம் என அறியப்படுகிறது. MQM எனும் இவ் அமைப்பானது 1947-ம் ஆண்டு இந்தியா —பாகிஸ்தான் பிரிவடைந்தபோது இந்தியாவில் இருந்து வெளியேறி பாகிஸ்தானில் குடியேறிய முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஓர் அமைப்பாகும். இதன் அரசியல் பிரிவிலிருந்து ஓர் பிரிவினர் வெளியேறி மற்று மோர் அமைப்பை அண்மையில் ஏற்படுத்திக்கொண்டனர். தற்போதைய கலவரங்கள் இப் பிரிவுக் குழுவினரிடையே ஏற்படும் மோதல்களேயென சொல்லப்படுகிறது.


# ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி - 1998

**கலைஞர்களே !**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேர வேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:** *தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)*


# புதிய நைஜீரிய தலைவர் - எதிர்க் கட்சிகள் சந்திப்பு

அண்மையில் பதவியேற்ற புதிய நைஜீரியத் தலைவர் அப்துல்சலாம் அபுபக்கர் கடந்த சனியன்று அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சிக் கூட்டணியான தேசிய ஜனநாயக கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்தார்.

இச் சந்திப்பின்போது எதிர்



கால நைஜீரியாவின் அரசியல் நிலைப்பாடு குறித்து ஆராயப்பட்டது. கடந்த 8-ம் திகதி மாரடைப்பால் காலமான முன்னாள் தலைவர் சானி அபாச்சா இவ் எதிர்க்கட்சிக் கூட்டணியினர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் எனக் குற்றம் சாட்டியதுடன், ஏராளமான எதிர்க்கட்சித் தலைவர்களை கைது செய்து சிறையில் தள்ளினார்.

இக் காலத்தில் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் வேறு நாடுகளுக்குள் தஞ்சங்கோரியிருந்தனர். தற்போது பதவியேற்றுள்ள புதிய தலைவர் நாட்டில் பல மாறுதல்களை ஏற்படுத்தப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். 1993-ம் ஆண்டு அந்நாட்டில் தேர்தல் நடந்தபோது, அத் தேர்தலில் அரசியல் தலைவர் மசூத் அபியோளா வெற்றி பெற்றிருந்தார். ஆனால் அன்றைய இராணுவ தலைவரால் இத் தேர்தல் ரத்துச்செய்யப்பட்டு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. அப்போது மசூத் அபியோளா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

கடந்தவருட இறுதியில் அன்றைய அரச தலைவர் சானி அபாச்சா, வெகு விரைவில் நைஜீரியாவில் ஜனநாயக முறையிலான தேர்தல் இடம்பெறும் என்றும் இதன் பின் ஆட்சி மக்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

பிற்காலத்தில் அவரது நடவடிக்கைகளும் அதைச் சார்ந்தே அமைந்திருந்தன. புதிய அரசுத் தலைவரால் கடந்தவாரம் 17 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

தற்போது எதிர்க்கட்சிகளுடன் இவர் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து வெகு விரைவிலே மசூத் அபியோளாவும் விடுதலை செய்யப்படுவார் என அறியப்படுகிறது.

ஆபிரிக்காவில் மிகுந்த எண்ணெய் வளத்தையும் 104 மில்லியன் சனத் தொகையையும் கொண்ட நைஜீரியா, 1960-ம் ஆண்டு விடுதலை அடைந்தது முதல் 10 வருடங்கள் தவிர்ந்த மற்றைய காலங்கள் முழுதும் இராணுவ ஆட்சிக்குள்ளேயே இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெகுவிரைவில்



# கப்டன் 'கஜன்' அரங்கில்

### ஈழமுரசு வழங்கும் மாபெரும் நாடகவிழா

# 'நாடகப் போட்டி 1998'

*12.07.1998 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி*

**இடம்: JUGENDZENTRUM - Pape Str-1, 45147 Essen.**

## *நிகழ்ச்சி நிரல்*

- ★ அமைதி வணக்கம்
- ★ மங்கல விளக்கேற்றல்
- ★ தலைமையுரை
- ★ கருத்துரை
- ★ எழுச்சி நடனங்கள் [கலைபண்பாட்டுக் கழகம் - ஜேர்மனி]
- ★ அறிவிப்பாளர் அரங்கம்

**போட்டியில் கலந்து கொள்ளும் நாடகங்கள்**

1. லூட்ஸ் வெக்ஸ் பேர்க்க' முல்லை ஜெயா குழுவினர் வழங்கும் 'சலனம்' – இயக்கம்: செ. ஜெயராஜா
2. பிறேமன் தமிழ் கலை மன்றம் வழங்கும் 'சுமைகள்' – இயக்கம்: நாச்சிமார்கோவிலடி இராஜன்
3. டோட்முன்ட் ஓயாத அலைகள் நாடக மன்றம் வழங்கும் **'விடிவை நோக்கி'** – இயக்கம்: குரும்பையூர் S.S கதிர்
4. ஓபகௌஸன் கலைப்பெருமன்றம் வழங்கும் **'வேர்'** – இயக்கம்: க. முருகதாசன்
5. எசன் தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் வழங்கும் **'வெண்பனிக்கோலங்கள்'** – இயக்கம். R. பாலசுந்தரம்
6. கிறீபீல்ட் தமிழ் கலை மன்றம் வழங்கும் **'ஊமைக் காயங்கள்'** – இயக்கம் திரு. செல்லக்கிளி

- ★ தொகுப்புரை
- ★ நன்றியுரை

**கலைஞர்கள், ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது 'ஈழமுரசு'**

Pub. Gra.



# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

# அனைத்துலக துயர்துடைப்பு நாட்கள்

## இலண்டனில் ஜூலை 5-ம் திகதி முதல்




மேலதிக விபரங்கட்கு: தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 79, Hoe Street, London E17. Tel: 0181-520 5876

Pub. Gra.



ஈழமுரசு
Eelamurasu Weekly

*"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"*

# குடியகல்வு சட்டத் திருத்தம்

1948ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட குடிவரவு-குடியகல்வுச் சட்டம் 10 இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கிய இனவாத வரலாற்றைக் கொண்டது. தற்போதுள்ள சிறீலங்கா பாராளுமன்றத்தில் அதே சட்டத்திற்கு புதிய திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

அதாவது சட்டவிரோதமாக நாட்டை விட்டுச் செல்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவிலிருந்து 2 இலட்சம் ரூபா அபராதமும் 1 வருடம் முதல் 5 வருட சிறைத் தண்டனையும் விதிக்கும் விதத்தில் இந்தச் சட்டத்திற்கு புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இந்த விடயத்தில் சிறீலங்கா அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று வெளிநாட்டு தூதரகங்கள் முறையிட்டதன் அடிப்படையிலேயே இச் சட்டம் கொண்டுவரப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த சட்டத் திருத்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, வெளிநாடுகள் புகலிடம் வழங்குவதில் தளர்வுப் போக்கை கடைப்பிடிப்பதே, சட்டவிரோதமாக நாட்டை விட்டு அதிகமானோர் வெளியேறுவதற்கு காரணமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மனிதன் தன்னுடைய நாட்டில், தனக்கிருக்கக்கூடிய அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு தடை ஏற்படும் போது, அந்த அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொள்கின்ற செயற்பாட்டின் காரணமாக, அந்நாட்டின் அரச படைகளினாலோ, அல்லது அவற்றின் அனுசரணையுடன் இயங்குகின்ற குழுக்களினாலோ தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது தன்னுடைய நாட்டை விட்டு வெளியேறி இன்னொரு நாட்டில் அரசியல் தஞ்சம் கோரிப் பெறுவதற்கு உரித்துடையவன் என்று அகதிகளுக்கான ஐ.நா. சாசனம் குறிப்பிடுகின்றது.

சிறீலங்காவைப் போல் ஒரு இனத்தின் மீது திட்டமிடப்பட்ட அடிப்படையில் யுத்தம் நடாத்தப்படுகின்ற ஒரு நாட்டில், அந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர் சட்டபூர்வமான முறையில் வெளியேறுவதென்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

உண்மையான ஜனநாயக ஆட்சி முறைமையும், சமூக நிலைமையும் நிலவுகின்ற ஒரு நாட்டிலிருந்து குற்றவியல் நோக்கங்களுக்காக ஒருவர் சட்டபூர்வமற்ற முறையில் வெளியேறுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதிலும், அதற்கான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், உள்நாட்டு யுத்தம் நடைபெறுகின்ற ஒரு நாட்டில் அந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது உயிரைக் காப்பற்றிக் கொள்ள அந்த நாட்டை விட்டு வெளியேற முற்படும் போது இவ்வாறான ஒரு சட்டம் அவரைக் கைதுசெய்து அவரது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த வழி வகுக்கும். இது அடிப்படையில் மிக மோசமான ஒரு பாசிசச் சட்டமாக அமையும்.

உதாரணமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மட்டுமல்லாது கடல் மார்க்கமாக தமிழகத்திற்கு புகலிடம் தேடிச் செல்லும் அப்பாவித் தமிழர்களைக் கூட கைதுசெய்யவும் விசாரணையின்றி சிறையில் அடைக்கவும் இந்தச் சட்டத்தை சிறீலங்கா அரசு பயன்படுத்தும் அபாயம் உள்ளது.




சண்டையில் செத்துப்போனவர்கள் குடும்பத்துக்கும், காயம்பட்டவர்களுக்கும் உதவ நிதியம் அமைக்கப் போகிறார்களாம்.!

'செய்யட்டும்! இந்தப் பிச்சைக் காசுக்காக இன்னும் பலர் கையைக் காலை உடைக்கக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்க்காமல் இருப்பவர்களைக் காப்பாற்ற உடனடியாக ஏதாவது செய்தால் நல்லது!

நன்றி: 'தினக்குரல்'

# கூத்தணியாகிவிட்ட கூட்டணி

**ஒரு பார்வை**

முதியவர் சிவசிதம்பரம் காலத்திற்கு காலம் விடுக்கும் முன்னுக்கு பின் முரணான அறிக்கைகள் கூத்தணியாகிப் போன கூட்டணியின் 'பொறுக்கித்தனத்திற்கு' உதாரணம் ஆகிவிட்டது.

தமிழ் மக்களை ஏமாற்றவேண்டும், அதேவேளை சந்திரிகா அரசை காப்பாற்ற வேண்டும்; சிறீலங்கா படைகளை ஆத்திரமூட்டக்கூடாது அதேவேளை தமது சகாக்களான ஈபிடிபி, ஈபிஆர்எல்எவ், புளொட் போன்று சென்றியில் நின்று காட்டிக்கொடுப்பவர் என்ற பெயர் தம்மீது விழக்கூடாது; இவ்வாறு பல்வேறுபட்ட நிபந்தனைகளுடன் கொழும்பில் உயிர் வாழும் ஒரு ஒட்டுண்ணியாக கூட்டணி தன்னைத்தானே தரமிறக்கிக்கொண்டுவிட்டது.

இன்றைய கூட்டணியின் தலைவர்களான நீலன் திருச்செல்வமும், சம்பந்தர், ஆனந்தசங்கரியும் பகிரங்கமாக சந்திரிகா அரசை ஆதரிப்பவர்கள். இவர்கள் கூட்டணியை வெறும் கூத்தணியாக வைத்திருக்கவேண்டும் என்பதில் பகிரங்கமான விருப்பத்தை கொண்டிருப்பவர்கள். நீலன் திருச்செல்வம் ஒரு கொழும்புக் கனவான். தமிழ் மக்களின் பிரதிநிதியாக விகிதாசார, பிரதித்துவ முறையை பாவித்து தன்னைத் தானே நியமித்துகொண்டவர்.

ஆனந்தசங்கரி கூட்டணியின் ரத்வத்தையாக (ஜெனரலாக) விளங்குபவர். கிருஷாந்தி கொலை வழக்கில்அரசைக் காப்பாற்ற முனைந்தவர் என கொழும்பு தமிழர் நடவடிக்கை குழுவால் 'பகிரங்கமாக' குற்றம்சாட்டப்பட்டவர். இந்த கும்பலின் மறுபுறம், ஜோசப் பரராஜசிங்கம் போன்றோர் நிற்கின்றனர். அரசபடைகளின் மனித உரிமை மீறல்களை பகிரங்கமாகக் கண்டித்து அறிக்கைகள் விடும் இவர், தனது தொகுதியை (மக்களை) ஓரளவேனும் பிரதிநிதித்துவப் படுத்த முனைபவர்.

இந்த அரசியல் - கபட - சுயநல நோக்குகளிடையே த.வி.கூ. சிக்கிக் கிடக்கின்றது. 1977 இல் தமிழ்மக்கள் ஆதரித்து வாக்களித்த 'தமிழீழம்' என்ற அரசியல் இலட்சியத்தை இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் தீர்க்கமான தலைமையின் கீழ் முன்னெடுத்துச் செல்வதால், த.வி.கூட்டணியின் தேவை 'இல்லாது' போய்விட்டது. அதன் தலைவர்களின் பதவிக்கும் - பாதுகாப்புக்கும் - புகழுக்கும் மட்டுமே இயங்க வேண்டிய கட்டாயம் கூட்டணிக்கு ஏற்பட்டுவிட்டது. இக்குறுகிய தமது தேவைக்காக, ஒரு புனித இலட்சியத்தை களங்கப்படுத்த முற்பட்ட போதுதான், அது துரோகம் என முத்திரை குத்தப்பட்டது.

இந்தக் கூட்டணியின் எதிர்காலம் மிகத் தெளிவானது. தற்போது தலைவர்களாக கொழும்பில் வாழும் சிலர், தமது தேவைகள் பூர்த்தியடைந்தது என எண்ணி ஒதுங்கும்போது, கூட்டணி 'கலைக்கப்பட்டு'விடும். ஏனெனில் அடுத்த தலைமுறை தலைவர்களும் எதுவித மக்கள் ஆதரவும் கிடையாது.

மேலும் கூர்மையடையும் சிங்கள இனவாதம், படிப்படியாக இந்த கூத்தணியின் சேவைகளை சந்தேகங்களுடன் பார்க்கத் தொடங்கியுள்ளது. வெளிநாட்டு அரசுகளுக்கு புலி எதிர்ப்பு பிரச்சாரம் செய்யும் பணியையும், தமது போர் நடவடிக்கைகளுக்கு ஜனநாயக முலாம் பூசும் பணியையும் மட்டும்தான் கூட்டணி செய்ய வேண்டும் என சிங்கள இனவாதம் எதிர்பார்க்கிறது. நீலன், சம்பந்தர், ஆனந்தசங்கரி குழு இதனை விசுவாசமாகச் செய்து வருகிறது. மறுபுறம் யோசப் பரராஜசிங்கம் தரப்பினர் எழுப்பும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் அரசை சற்று சங்கடப்படுத்துகின்றன. எனினும் இன்று அவ் விமர்சனங்களுடன் தம்மால் வாழலாம் என அரசு கருதுகின்றது. தமது அரசு செய்யும் இன அடக்கு முறை படுகொலைகளை காத்திரமாக தடுத்து நிறுத்த கூட்டணி முயலாது என சந்திரிகா - ரத்வத்தை கூட்டணி நம்புவதால், இச் சமரசம் உயிர்வாழ்கின்றது. இதனை மீறி யோசப் பரராஜசிங்கம் தலைமையில் உறுதியான அரச எதிர்ப்பு உறுதியாக கூட்டணியால் எழுமானால் அவர்களை கட்டி அடக்க நீலன் - சம்பந்தர் குழு பாவிக்கப்படும். இல்லாவிட்டால் டக்ளஸ் - சித்தார்த்தன் அணி சேவைக்கு அழைக்கப்படுவர். 'சிங்களவர்களை முட்டாள்கள்' என கூறும் பழைய யாழ்ப்பாண அடைமொழி, 'முட்டாள் தனமானது' என்பதை கூத்தணி மிகுந்த விசுவாசத்துடன் நிரூபித்து வருகின்றது. இல்லாவிட்டால் திருமலையில் இடம்பெறும் சிங்கள குடியேற்றத்திட்ட அடாவடித்தனத்தையும், முல்லைத்தீவு குண்டுவீச்சையும், களுத்துறை உண்ணாவிரதத்தையும் கவனிக்காமல் புதிய யாழ், மாநகரசபை உறுப்பினர்களுக்கு கூட்டணி பதவி பிரமாணம் எடுக்க வைக்குமா?

**- ராஜா**

# சித்திரவதைக்கு எதிரான சட்டங்களால் அதை கட்டுப்படுத்த முடிந்ததா?

அரசியலமைப்பின் 11-வது சரத்தானது 'எந்த ஒரு மனிதனும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதத் தன்மையற்ற கீழ்த்தரமாக நடத்தப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ கூடாது' என்கின்றது. இவ்வாறு நடத்தப்பட்டால் மக்களுக்குரிய பாதுகாப்புக்கள் எவை என்பது பற்றியும் அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேசமயம் சில பல காரணங்களுக்கு அடிப்படை உரிமைகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்தவும் அரசியல் அமைப்பில் இடம் இருப்பதால், அவற்றைத் துணையாகக்கொண்டு சிறீலங்கா அரசானது, அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டங்கள் போன்றவற்றை இயற்றி மக்களின் மனித உரிமைகளை மீறும் செயற்பாட்டிற்கு வழிவகுக்கின்றன. இச் சட்டங்கள் மூலம், நிருவாகத்தினரும், சட்ட ஒழுங்கை அமுல்படுத்துபவர்களும் தமக்கு இருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி அத்துமீறுகின்ற செயல்களைப் புரிகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான சாசனத்தில் சிறீலங்கா 1994 இல் கையொப்பம் இட்டது மட்டுமல்லாமல், சிறீலங்கா அரசானது தனது கடப்பாட்டை நிறைவேற்றுகின்றோம் என்ற அடிப்படையில் 1994 நவம்பர் 23 இல் சித்திரவதைக்கெதிரான சட்டத்தையும் இயற்றியிருந்தது.

ஆனால் சிறீலங்கா அரசானது ஐக்கிய நாடுகள் சபையில் இந்தச் சித்திரவதைக்கு எதிரான சாசனத்திலுள்ள கடப்பாடுகளையோ அல்லது சிறீலங்கா அரசியல் அமைப்பு மற்றும் சித்திரவதைக்கெதிரான சட்டத்திலுள்ள ஷரத்துக்களையோ மதிப்பதாகத் தெரியவில்லை. இவையெல்லாவற்றையும் மீறும் செயல்கள் தான் இடம்பெறுகின்றன.

சித்திரவதைகளால் கொல்லப்பட்டுள்ளோர் ஆயிரக்கணக்கில் உள்ளனர். சட்டங்கள் இயற்றுவதன் மூலம் எதையும் சரிப்படுத்த முடியாது. அவற்றை அமுல் படுத்துவதில் அரசு உண்மையான அக்கறையோடு செயற்படவில்லை.

இன்றும் சித்திரவதைகள் தொடர்கின்றன. ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் சித்திரவதைக்குட்பட்டு இன்று நிரந்தரமான உடல் கோளாறுகள் மற்றும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சித்திரவதைகளால் உயிர்போன ஆயிரக்கணக்கானோரை விட அதிர்ஷ்டவசமாக அதிலிருந்து தப்பியவர்கள் உடல் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றும் எந்தக் காரணமும் இன்றி தமிழராய் பிறந்த ஒரே காரணத்துக்காக இராணுவ முகாம்கள், காவல் நிலையங்கள், தடுப்பு முகாம்களில் சித்திரவதைப்படுகிறார்கள். அவர்களின் ஓலம் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. தினமும் எமது அலுவலகத்தில் இது தொடர்பாக புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

பெற்றோல் ஊற்றியபையால் முகத்தை மூடிக்கட்டுவது, பைப், கட்டைகளால் அடிப்பது, தலையில் ஓடுகளை வைத்து உடைப்பது, தலையில் அடிப்பது, சிகரெட்டால் சுடுவது, பிளேட்டால் வெட்டுவது, அணுடம்பைக் கசக்குவது, லாச்சியில் வைத்துப் பூட்டுவது, குறட்டால் இழுப்பது, சிகரெட்டால் சுடுவது, மேலும் ஆண்களின் மார்பு நுனியை குறட்டால் இழுப்பது, மின்சாரம் பாய்ச்சுவது போன்ற பல்வேறுபட்ட சித்திரவதைகள் தொடர்கின்றன. இந்த இளைஞர் சமுதாயத்தை நிரந்தரமாக ஊனமாக்குகின்ற செயல்களாகத்தான் இவை இருக்கின்றன. இவை இன்றும் தொடர்கின்றன.

அண்மையில் ஐ.நாடுகள் சபையின் சித்திரவதைக்கெதிரான குழுக் கூட்டத்தில் சிறீலங்கா அரசானது இவற்றை ஒத்துக்கொண்டு இவற்றை தடுக்கும் நடவடிக்கைகள் எடுப்போம் என்று கூறியிருந்தும், இதுவரை எதுவித நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

**மகேஸ்வரி வேலாயுதம்**
(மனித கௌரவத்திற்கான அமைப்பின் செயலாளர்)

# 1997 இன் மிகச் சிறந்த ஐரோப்பியப் படம் Full Monty:

இங்கிலாந்தின் ஷெஃப்பீல்ட் (*Seffeld*) நகரம், தொழில் மயமான செல்வம் கொழித்த நகரம். எங்கெங்கும் வளம். கடைகள், சினிமா கொட்டகைகள், ஹோட்டல்கள், ஐவுளிக்கடைகள், பூங்காக்கள். எங்கு நோக்கினும் மக்கள் வெள்ளம். வண்ண வண்ண விளக்குகள். இரவில் வானில் 'ஹோ' வென மிதக்கும் இரைச்சல். 25 ஆண்டுகளின் 'மூன்பு ஷெஃப்பீல்ட் நகரம் இப்படித்தான் இருந்தது.

இன்று நிலைமை மாறிவிட்டது. ஷெஃப்பீல்ட் நகரத்தின் வளத்துக்கும்; வாங்கும் சக்திக்கும் காரணமாக இருந்தது அங்கு வான்ளாவி எழுந்து நின்ற வார்ப்பிரும்பு, உருக்கு தொழிற்சாலை. கடந்த 25 ஆண்டுகளில் மார்கரட் தட்சர் மற்றும் கன்ஸர்வேடிவ் கட்சியின் ஆட்சியில், பெரும்பாலான நிலக்கரிச் சுரங்கங்களும், வார்ப்பிரும்பு ஆலைகளும் மூடப்பட்டு விட்டன. ஐரோப்பிய சந்தையோடு போட்டிபோட முடியாத சூழல் ஒரு புறம். இலாபம் மட்டுமே சமூக மதிப்பீடாகக் கொண்ட பெருமுதலாளித்துவ தனியார் மயமாக்கல் மறுபுறம். ஷெஃப்பீல்ட் உருக்காலை மூடப்பட்டது. வேலை இல்லாத திண்டாட்டம்,

**இவர்கள் ஐவரும் அடிக்கடி வேலையில்லாத் தொழிலாளர்களுக்கான வேலை தேடும் அலுவலகத்தில் சந்திக்கிறார்கள். வேலை கிடைக்காதென நிச்சயமாகத் தெரிந்த சூழலில் தமது எதிர்காலம் குறித்து இவர்கள் திட்டமிடுகிறார்கள்.**

நகரத்தின் தெருக்கள் பிச்சைக்காரர்களின் துயர் சிந்தியபடி இருக்கிறது.

உருக்காலை மூடியதாலும், வேலை இல்லாத் திண்டாட்டத்தினாலும் அதிகம் பாதிக்கப்பட்டது பிரிட்டிஷ் ஆண்கள்தான். பெண்கள் இவ்வேலைக்கு போகவில்லை, அல்லது வேலைக்கு அமர்த்தப்படவில்லை. ஆகவே நகரத்தின் குறைந்த கூலி தரும் பிற வேலைகளுக்கு பெண்கள் போனரார்கள். அல்லது வழக்கம் போலவே வீட்டில் இருந்தார்கள். வேலைக்குப் போகும் பெண்களுக்கு பொழுதுபோக்கும் தேவையாக இருந்தது. ஆண்கள், வேலை தேடும் நிலையத்தின் (*Job club*) சங்கங்களுக்குப் போய், சிகரெட் குடித்துக் கொண்டிருந்தார்கள். பெண்கள் மது விடுதிகளுக்கும், இரவில் சிலவேளை ஆண்கள் துணி உரிந்து நடனமாடும் (*Strip tease-male*) காட்சிக்குப் போயிருந்து குதூகலமாக சத்தமிட்டுக் களிக்கவும்செய்தார்கள்.

கதை இந்தப் பின்னணியில் தான் ஆரம்பிக்கிறது. கதை ஐந்து ஆண்களுடையதும் ஒரு பள்ளிச் சிறுவனுடையதுமாக இருக்கிறது. அதாவது, இரண்டு தலைமுறை பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க ஆண்களுடையதாக கதை நிகழ்கிறது. ஐந்து ஆண்கள். ஐந்து வகையிலான ஆண்கள் ஐந்து பேருமே வேலைதேடி ஊர் சுற்றித் திரிகிறார்கள். ஒருவருக்கு 50 வயது இருக்கும். மற்ற நால்வரும் சம வயதினர் என்று கொள்ளலாம். கெச்சலான உருவம் கொண்ட ஒருவர். அவர் பிரிட்டனின் புகழ் வாய்ந்த நடிகர். கென்லோச்சின் கார்லாஸ் ஸோங் படத்தில் பஸ் டிரைவராக நடித்தவர். ராபர்ட், அவரே கதையின் பிரதான பாத்திரமாகவும் வருகிறார். அவரது மனைவி அவரை விவாகரத்து செய்து விட்டவர். அவரது மனைவி ஒரு துணி ஆலையில் சூப்பவைஸராக பணியாற்றுகிறார். இவர்களுக்கு ஒரு மகனும் உண்டு. தகப்பனோடு தங்கியிருக்கும் பள்ளி செல்லும் சிறுவன். பள்ளி செல்லும் நேரம் தவிர சதா தகப்பனோடு தெருவில் அலையும் சிறுவன். இவர்களின் நண்பன் பெருத்த சரீரம் படைத்தவன். பூங்காக்களில் இவர்கள் மூவரும் விழுந்துகிடப்பார்கள்.

இவர்களுக்கு, வேறு — மூன்று வேலை இல்லாத நண்பர்களும் கிடைக்கிறார்கள். ஐம்பது வயதான பெரியவர். இவர் நிர்வாகியாகி அலுவலக உத்தியோகஸ்தராக இருந்தவர். கடனுக்கு வீடு வாங்கி கட்ட முடியாது தவிக்கிறவர். வேலை கிடைக்குமெனும் நம்பிக்கையில் நேர்முகத் தேர்வுக்கு சென்றுகொண்டிருப்பவர். மனைவி மீது மிகுந்த நேசம் கொண்டிருப்பவர்.

பிற இருவரில் ஒருவர் கறுப்பு இனத்தைச் சேர்ந்தவர்; மத்திய தர வயதினர். நன்றாக நடனமாடத் தெரிந்தவர். இன்னொருவருக்கு உருக்கு தொழிலை விட்டால் வேறு என்ன வேலை தெரியும் என்ற கேள்விக்கு 'புணர்கிற' வேலை மட்டுமே தெரியும் என்று சொல்கிறவர். இவர்கள் ஐவரும் அடிக்கடி வேலையில்லாத் தொழிலாளர்களுக்கான வேலை தேடும் அலுவலகத்தில் சந்திக்கிறார்கள். வேலை கிடைக்காதென நிச்சயமாகத் தெரிந்த சூழலில் தமது எதிர்காலம் குறித்து இவர்கள் திட்டமிடுகிறார்கள்.

சம்பாத்தியத்திற்கு என்ன செய்யலாம்? துணியை உரிந்து போட்டுவிட்டு தெருவில் ஓட வேண்டிய நிலை வந்துவிடும் போலிருக்கிறதே?

அந்நகரத்தில் உடனடியாக பெரிய முதலீடு இல்லாமல் செய்யக்கூடிய காசு வரும் தொழில் என்ன என்று யோசித்துப்பார்க்கிறார்கள். பின்பக்க சுவர் ஏறிக் குதித்து பெண்கள் கிளப்புக்குள் சென்று பார்க்கிறார்கள். ஏகக் கூட்டம், ஒரேகுதூகலம். பெரும் சப்தம். பெண்கள் உற்சாகமாகக் கூக்குரலிடுகிறார்கள். மேடையில் ஆண்கள் நடனமாடியபடி ஒவ்வொரு உடையாகக் கழற்றி எறியும் போதும் கூச்சல் உச்சத்திற்கு போகிறது. வருமானம் வருகிற இந்த தொழிலைச் செய்வது என்று ஐவரும் தீர்மானிக்கிறார்கள். தீர்மானித்துவிட்டால் மட்டும் போதுமா? எங்கே நடனத்தை நிகழ்த்திக் காட்டுவது,

நடனத்தை நிகழ்த்தும் விடுதி உரிமையாளரைக் கேட்கிறார்கள். கெச்சலான ஆட்கள். ஒல்லியான, குண்டான மத்தியதர வயது ஆட்கள். ஒருவர் 50 வயதுக்குமேல், இவர்களைப்பார்க்க யார் வருவார்கள்? நக்கலாகச் சிரித்துவிட்டு தூரப்போங்கள் என்று சொல்லிவிடுகிறார், விடுதி சொந்தக்காரர்.

ஆனாலும் முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. ஐம்பது வயதானவரின் வீட்டில் ஒத்திகையை வைத்துக்கொள்கிறார்கள். மனைவிக்கு தெரியாமல் இது நடக்கிறது. பிரதானமான நிகழ்ச்சியை கைவிடப்பட்ட ஒரு குடோனில் வைத்துக்கொள்கிறார்கள். நிகழ்ச்சி சம்பந்தமான நோட்டீஸ்களை கைகளால் எழுதி தூண்களிலும், விளக்குக் கம்பங்களிலும் ஒட்டுகிறார்கள். சில பெண்கள் இவர்களைப் பார்த்து நக்கலாகச் சிரித்துவிட்டுப் போகிறார்கள்.

அரங்கேற்றத்திற்கான நாள் வருகிறது. வயதான பெண்கள் சில பேர் பார்வையாளர்களாக வந்திருக்கிறார்கள். காப்பி, ஜூஸ் சகிதம் வீட்டிலிருந்து கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டு சிரிப்புடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் கறுப்பு நிறம் உள்ள முதிய மனுஷிகள். குறைந்த காசு கொடுத்து பார்க்கக் கூடிய துணி உரியும் நடனத்திற்கு வந்த, குறைந்த காசுள்ள மனுஷிகள்.

நடனம் தொடங்குகிறது. துணியை ஒவ்வொன்றாக உரியத் தொடங்குகிறார்கள். சிறுவன் டேப்ரிகார்டரில் பதிவு செய்யப்பட்ட இசையை முறுக்கி விடுகிறான். கைவிடப்பட்ட கட்டடத்திலிருந்து ஒலிக்கும் இசையை மோப்பம் பிடித்துக் கொண்டு பொலிஸ்காரர்கள் வந்துவிடுகிறார்கள். சிறுவன் உட்பட ஐந்து ஆண்களும் கைது செய்யப்படுகிறார்கள்.

பொது இடத்தில் ஆபாசமாக நடந்து கொண்டார்கள் என்பது குற்றச்சாட்டு. இவர்கள் இவ்வாறு நடந்துகொள்வது அரசாங்கத்திற்குக் கேவலம் என்று சமூக நல அலுவலகத்திலிருந்து ஒரு அதிகாரி வந்திருந்து இவர்களை விடுவித்து கொண்டு போகிறார். சிறுவனை, பொறுப்பற்ற தகப்பன் என ஏசி விட்டு, அவன் தாய் மீட்டுக்கொண்டு போகிறாள்.



இந்த ஆபாசக் காரியம் ஷெஃப்பீல்ட் நகரமெங்கும் தெரிந்துவிட்டது. அன்றைய தினப்பத்திரிகைகள் அனைத்திலும் தலைப்புச் செய்தியாக இந்த துணி உரியும் ஆண் நடனக்காரர்கள் படங்களுடன் இடம் பெறுகிறார்கள்.

சில்லறைக் கடைகள், பெரிய கடைகள், பத்திரிகைக் கடைகள், தெருக்கள் என எங்கும் எல்லாவற்றிலும் இவர்களைப் பற்றியே பேச்சு. ஷெஃப்பீல்ட் நகரத்தின் இன்றைய நிலவரப்படி பிரபலமானவர்களும் கதாநாயகர்களும் இந்த ஐந்து ஆண்கள்தான்.

சம்பந்தப்பட்ட எல்லா ஆண்களுக்கும் தமது சொந்த வாழ்க்கையில் இந்தப் பிரச்சினை பாதிப்பு செய்கிறது. சிறுவனை தாய் நிரந்தரமாக தன்னுடன் அழைத்துக்கொள்கிறாள். சிறுவனைப் பார்க்க தந்தைக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஐம்பது வயதுக்காரரின் வீடு, கடன் கட்ட முடியாததால் திரும்பவும் கடன் தந்த வங்கி எடுத்துக் கொள்கிறது. அவரை அவரது மனைவி வீட்டைவிட்டு வெளியேற்றுகிறாள். குண்டு ஆளின் மனைவி அவனது உள்ளாடையைப் பார்த்துவிட்டு, தன் கணவன் வேறொரு பெண்ணுடன் உறவு கொண்டிருப்பதாகப் பிரச்சினை உருவாகிறது. ஐந்து பேருடைய வாழ்வும் துக்கத்திலும் நம்பிக்கையீனத்திலும் வீழ்கிறது. இந்த நம்பிக்கையீனமும் துக்கமுமே மறுபடியும் ஒன்றாகச் சேர்க்கிறது.

நகரத்தில் மிகப் பிரபலமாகிவிட்ட இந்த ஆண் கவர்ச்சி நடனக்காரர்களை, விடுதியின் உரிமையாளர் தேடிவந்து நடனமாடும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். நகரத்தின் மிகப் பிரபலமான ஆண்களுக்கு ஏகக் கிராக்கியெனவும், கூட்டம் 'ஹவுஸ்புல்'லாக வரும் என்றும் சந்தோஷமாகக் கூறுகிறார்.

மீறுபடியும் ஐவரும் ஒன்று சேருகிறார்கள். சிறுவனும் வருகிறான். இது அவர்களது ஜீவிதப் பிரச்சினை. தன்மானப் பிரச்சினை. அங்கீகாரம் சம்பந்தமான பிரச்சினை. அரங்கம் இருட்டாகிறது. பெண்கள் கூச்சலிடத் தொடங்கிவிட்டார்கள். மேடையின் பின் இசை ஒலிக்கத் துவங்கிவிட்டது. ஆண்கள் ஒவ்வொருவராக மேடைக்கு வருகிறார்கள். உற்சாகச் சீழ்க்கையொலி பரவுகிறது. துணிகள் பார்வையாளரை நோக்கி உரிந்து வீசப்படுகிறது. கூக்குரல்! சந்தோஷம்!! ஆண்களின் உடம்பை நுகர்ந்து கீச்சிடும் பெண்கள்.

ஐந்து ஆண்களின் நிர்வாண உடல்களின் பின்புறம் நமக்குத் தெரிய, சந்தோஷமான பெண்கள் முகமும் நமக்குத் தெரிய படம் உறைகிறது. படம் முடிகிறது. நம் மனதுக்குள் அப்போது மேலோட்டமாக வியாபித்த உணர்ச்சி நகைச்சுவைதான். ஆனால் அந்த நகைச்சுவையின் பின் வேலையில்லா திண்டாட்டத்தின் கொடுமைகள் பற்றிய துக்கமும், அரசின் பொறுப்பின்மை குறித்த கோபமும் தான் அடியாளத்தில் புதைந்திருக்கிறது.

இப்படம் பிரிட்டிஷ் திரைப்பட வரலாற்றில் முன்னைய வசூல் சாதனைகள் அனைத்தையும் முறியடித்த படமாக இருக்கிறது. ஜூராஸிக் பார்க், மென் இன் பிளாக் (*Men in Black*) போன்றவையே முன்னைய வசூல் சாதனைப் படங்கள். *Full Monty* படம் மிகக் குறைந்த அளவில் தயாரிக்கப்பட்ட இயல்பான நடிகர்கள் பங்கு கொண்ட எளிமையான படம்.

ஐரோப்பிய விமர்சகர்களால், 1997 ஆம் ஆண்டு வெளியான படங்களில் மிகச்சிறந்த ஐரோப்பியப் படமாக இப்படம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. படத்தின் பிரதானக் கதை, ஒரு ஐரோப்பிய சமூகப் பிரச்சினையின் நெருக்கடியை மையமாகக் கொண்டது. **ஐரோப்பிய மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் 'வாழ்வு அனுபவத்தை' அடிப்படையாகக்**

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

**சிறுவனைப் பார்க்க தந்தைக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. ஐம்பது வயதுக்காரரின் வீடு, கடன் கட்ட முடியாததால் திரும்பவும் கடன் தந்த வங்கி எடுத்துக் கொள்கிறது. அவரை அவரது மனைவி வீட்டைவிட்டு வெளியேற்றுகிறாள்.**

யமுனா ராஜேந்திரன்



சிறு கதை

# யாருக்காக?

'சரிதான் போடி! உன்னை ஒரு நாய்கூடச் சீண்டிப் பார்க்காது!' என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலிப்பது போல் இருந்தது. மனம்... ரணமானது. வாழ்க்கை அத்தியாயத்தில் இப்படியும் கூட அமையுமா? திருப்பம்! அதுவும் இப்படியா?

இளமையின் வேகத்தில எஸ்.ஆர்.பி. கூட முடிக்காமல் பதினாறு, பதினேழு வயதில் காதலோடு உறவாடி, திருமணம் செய்து கொள்கின்ற பெண்கள் கூட, ஏதோ ஒரு வகையில் சந்தோஷமாகத்தான் வாழ்கிறார்கள். அதைவிட இவள் நிலைமை என்னவென்பது?

முப்பது வயது வரையிலும் அடக்கம், பண்பு, பணிவு, இவற்றையே உலகமாக எண்ணி வாழ்ந்தவளுக்கா இந்தநிலை ஏற்படவேண்டும்? திருமணம் ஆகாமல் இருந்திருந்தால், திருமணம் ஆகவில்லையே என்ற ஒரே ஒரு கவலை மட்டும்தான் இருந்திருக்கும். திருமணம் இப்படி.... ஆகிவிட்டதால் அந்தக் கவலைகள் பலவாகி இன்று வாழ்க்கையே கவலையாகிவிடும் போது.... இலேசான மனம் எண்ணமாய் விம்மிக்கனக்கிறது.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்றுதான் இவ்வளவு நாளும் நினைத்திருந்தாள்.

ஆனால், அவள் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டது என்பதை இப்போதுதான் முதன் முதலாக உணர்ந்தாள். அன்றே உணர்ந்திருந்தால்...? இன்று வருத்தப்படவேண்டிய அவசியம் இருந்திருக்காது. சே... எல்லாம் கனவுபோலவே நடந்து முடிந்து விட்டது தன் திருமணம் இப்படியாகும் என்று நினைக்காதவள், அவள்தான் கண்மணி!

பெற்றோர்கள் பார்த்து முடித்து வைத்த திருமணம்தான்! அவளின் முழுசம்மதத்தோடுதான் திருமணம் நடந்தது. 'நம்பிக்கைத் துரோகம்'... என்னமாய் வாழ்க்கையை நாசப்படுத்தி சென்றுவிட்டது? நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

நிச்சயதார்த்தம்-பரிசம் என்றெல்லாம்கூட கண்சிமிட்டிமுடியும் வேகத்தில் முடிந்தது. இதை முடித்து வைத்துவிட்டு வியாபார விஷயமாக அண்டை நாடு போனவன் போனவன்தான்.

வெளியூரில் இருந்தாலும் கண்மணிக்குப் போன்போடத் தவறமாட்டான். காதல் மணம் சொட்ட சொட்ட கடிதம் எழுதவும் தவறமாட்டான் அந்த மன்மதன்! அவள் மேல் அவனுக்கு அத்தனை ஆசையா?

'ஏம்பா அமுதன்! அந்தக் கண்மணி பொண்ணை நிச்சயம் பண்ணி மூணு வருஷமாவப் போவுது. நீ ஒண்ணும் சொல்லாம இருக்கே?' இது அவன் தந்தை அவனிடம் தொலைபேசியில் கேட்ட கேள்வி.

'அதுக்கென்ன இப்ப அவசரம்? இங்கே என் வியாபாரத்தை கவனிக்கவே நேரம் போதல. இந்த நிலையிலே கல்யாணத்தை வேறு பண்ணிக்கணுமா?' இது அவன்.

'கண்மணி நம்ப வீட்டுக்கு வாழவரப்போற பொண்ணுப்பா! பொண்ணை வேறு நிச்சயம் பண்ணிட்டு வந்துட்டோம். இங்க வந்து அவ கழுத்துல மூணு முடிச்சு போட்டுட்டுப் போககூடவா உனக்கு கஷ்டமா இருக்கு?'

'அப்பா! எனக்கு மலேசியா வர இப்ப நேரமில்லையே' அமுதன் தன் தந்தையிடம் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் அவை. அவன் தந்தையும் கைலாசம் சென்றுவிட்டார். அதனால் மீண்டும் ஒரு வருடம் திருமண தள்ளி வைப்பு நடந்தது.

தந்தையின் ஈமச் சடங்கில் கலந்துகொள்ள வந்தவன் மீண்டும் தலைத்திவசத்தன்று வந்தான். வலையில் சிக்கிய மானை வெறுமனே விட்டுவிட எந்த வேடனும் நினைத்ததில்லை. வெளியூரிலிருந்து வந்தவனை ஒரே பிடியாகப் பிடித்து விசாரித்தனர் பெண்வீட்டார்.

'ஏண்டாப்பா! ஒரு பெண்ணை நிச்சயம் பண்ணி இத்தனை வருஷமாச்சி! திருமணம் செய்றதா உத்தேசமில்லையா?'

'எனக்குத்தான் நேரமில்லைனு சொல்றேன்'

'பதிவுத் திருமணமாவது பண்ணிக்கக் கூடாதா?'

'உங்க பொண்ணை அப்படியா விட்டிட்டு ஓடிப்போய் விடுவேன்னு பயப்படுறீங்க?' அவன்தான் அப்படிக்கேட்டான்.

'அதுக்கில்லப்பா! திருமண சட்டத்தைச் சொல்லுறோம்!'

'சட்டமாவது மண்ணாவது! பதிவுத் திருமணம் எல்லாம் செய்யவேண்டாம்' என்றான் அவன்.

'அமுதன்! உன் கையை, காலாய் நினைச்சி கேட்கிறேன். அந்தக் கண்மணி பொண்ணை நம்ப பொண்ணுனு ஊர் அறிய நிச்சயம் பண்ணிட்டோம். அந்தப் பொண்ணு கழுத்தில மூணு முடிச்சி போடப்பா' என்றார் அவன் தாயார்.

'உங்களுக்கு மருமகள் வேணும். அவ்வளவுதானே?' என்றான்.

'ஆமாப்பா' அவன்தாய் 'சரி உங்க விருப்பப்படியே கலியாணம் பண்ணிக்கிறேன். ஆனால் பெண்ணை என்கூட அழைச்சிட்டுப் போகமாட்டேன்.' என்றான் அமுதன்.

கண்மணியைத் திருமணம் செய்தாலே போதும் என நினைத்து இருவீட்டாரும் அதற்கு ஒப்புதல் அளித்தனர். திருமணம் முடிந்து குறைந்தது ஓரிரு வாரமாவது இங்கே இருப்பான் என நினைத்தவர்கள் எண்ணத்தில் மண்ணைத் தூவினான். திருமணமான மறுநாளே....

அவன் அவசரம் இங்குள்ளவர்களுக்குப் புரியவில்லையா? அல்லது இங்குள்ளவர்களின் அவசரம் எவனுக்கு புரியவில்லையா?

ரெ.ஜெயலட்சுமி

கண்மணி தனித்துவிட்டாள், மாமியார் அவள் இவர்கள் இருவரும்தான் அந்தக் குடும்ப உறுப்பினர்கள்.

எத்தனையோ இரவுகள் கழிந்துவிட்டன. ஆனால், அவள் இன்னும் முதலிரவையே சந்திக்காதவள். கழுத்தில் மூன்று முடிச்சு விழுந்துவிட்டது. ஆனால் இன்னும் கன்னி கழியாதவள். அவளைப் பொறுத்தவரையில் புகுந்த வீட்டில் கண்மணி ஒரு வேலைக்காரியாகவே நடத்தப்பட்டாள். காலையில் நான்கு மணிக்கு எழுந்துவிட்டு வேலைகள் உட்பட காப்பிக்கடை வைத்து நடத்தும் தன் மாமியாருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யவேண்டும்.

தினம் தோசை, இட்லி பூரி, மசாலாவடை முதல் (நாசி லெமா, மீ கோரிங், மீ பண்டோங் கொய்தியாவ்**), ரொட்டி சானாய் வரை அவள்தான் சமைத்து வியாபாரம் செய்யவேண்டும். டீ, காப்பி கலக்கமட்டும் வேலையாள்! சாமக்கோழி கூவும் நேரம் இவள் படுக்கைக்குச் செல்வாள்.

எப்போதாவது அவள் கணவன் அவளிடம் தொலைபேசியில் பேசுவாள்.



'எப்பங்க வரப் போறீங்க?' இவள்.

'அதுதான் உனக்குத் துணையாக எங்க அம்மா இருக்காங்களே' அவன்.

'தாலிக்கொடி கோர்த்துப் போடணும். நீங்க இருந்தா சிறப்பாய் இருக்கும்.' என்றாள் கண்மணி.

'தாலியைக் கட்ட சொன்னாங்க கட்டினேன். அதைக் கோர்க்கிறதும், பிரிக்கிறதும் உன்னோட விருப்பம். அதனால தாலியைக் கோர்க்கிற பிரிக்கிற சடங்குக்கெல்லாம் என்னால் வரமுடியாது என்றான்.

'என்னங்க கலியாணம் பண்ணி மறுநாளே போயிட்டீங்க! எல்லாரும் ஒரு மாதிரியாய் சொல்லுறாங்க! எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் வரப்பாருங்கள்'. அவன் வருகையை எதிர்பார்த்து அவள் கூறிய வார்த்தைகள் அவை.

அவன் கூறிய மறுப்பு' மத்தவங்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என்னால இப்ப வர முடியாதுதான்.' இப்படித்தான் இவர்களின் உரையாடல் இருக்கும்.

புதியதாக திருமணமானவர்கள் எவ்வளவு அன்பாக பேசி பழக வேண்டும்! இப்படியா? திருமணத்தின் அவசியத்தை புரிந்து தெளியாதனவாக இருக்கிறானே என்று வருத்தப்பட்டாள் கண்மணி.

தலைத்தீபாவளி வந்தது. எப்படியெல்லாமோ கொண்டாடவேண்டிய தீபாவளி அவள் கொண்டாட முடியாமலேயே போய்விட்டது.

இடையில் ஒருநாள் போன் போட்டாள். 'விமான ரிக்கற் எடுத்து அனுப்புகிறேன். அடுத்த மாசம் குறிப்பிட்ட நாளில் இங்க வந்து சேர்ந்திடு. கணவனோடு வாழப்போற ஆசையில் அவளும் சரியென்றாள். அப்படியாவது தனது வாழ்வு மலர்ந்து மணம் வீசாதா? என்ற நப்பாசையில் தாலி கட்டின ஒரே காரணத்திற்காக அவள் அவனை நம்பினாள்.

ஆனால், அவள் பெற்றோர்கள் அமுதனை முழுமையாக நம்பவில்லை. மகள் கண்மணி அவன் பேச்சை நம்பி தனியாக வெளியூர் செல்வதை விரும்பவில்லை. அதனால் அவள் பயணம் தடைப்பட்டது. ஒருநாள் அவனே வீடுவந்து சேர்ந்தான். அவனிடம் அவள்,

'ஏங்க! சட்டப்படி பதிவுத் திருமணம் என்னும் செய்யாமல் இருக்கிறோமே!

'அதுதான் சம்பிரதாயப்படி கலியாணம் பண்ணியாச்சே!'

மீண்டும் அவள் 'சட்டப்படி...'

'என்மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?' அதிற்கில்லேங்க!' மௌனம் நிலவியது.

இப்படித்தான் முகம் கொடுத்துகூட கண்மணியிடம் பேசமாட்டான்.

'என்னங்க கல்யாணமாகி ஏழு மாதமாகப் போகுது' என்றாள் கண்மணி.

'அதுக்கென்ன இப்ப! வாரிசு இல்லைனு பார்க்கிறியா?' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டான்.

'அது பத்தி சொல்ல வரலீங்க'

'நீ அதைத்தான் நினைக்கிறேனு நான் சொல்லறேன் கண்மணி! வர வர உன்னோட எனக்கு பெருந் தொல்லையா இருக்கு. இங்கபாரு கண்மணி! குழந்தையை பெத்துக்கிட்டு வாழநினைக்கிற ஆசையை இப்போது பொசுக்கிடு.'

'என்னங்க சொல்லறீங்க?' அவள் ஆவேசப்பட்டாள்.

'ஆமா! குழந்தை குட்டி என்ற வார்த்தைக்கே இங்கு இடமில்லை. இன்னொன்றையும் சொல்லறேன் கேட்டுக்கொள். உன்கூட புருஷனா வாழவே எனக்கு விருப்பமில்ல!' அவள் இடிந்து போனாள்.

'அப்படினா ஏன் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?' என்று நிதானத்தோடுதான் வினாவினான்.

'எங்க அப்பா கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தினாரு. அதனால பண்ணிக்கிட்டேன்.'

'இதை சொல்ல உங்களுக்கு வெட்கமா இல்லை? கல்யாணத்துக்கு முன் ஆசை ஆசையாக போன்ல காதல் வசனம் பேசனீங்களே! வரி வரியாக ஆசை வார்த்தைகளை கொட்டி காதல் கடிதம் எழுதினீங்களே!, இதற்கெல்லாம் என்ன சொல்லப் போறீங்க?

'நிச்சயம் பண்ணின பாவத்துக்காக எழுதினேன்'.

'அடப்பாவி! மாசு படாத என் மனசை இப்படி அலைக்கழிக்க வைச்சிட்டீங்களே! தெய்வம் உங்களை சும்மா விடாதுங்க! நம்பிக்கை துரோகி!'

'அடி சரிதான் போடி! இவ பெரிய அழகினு நெனப்பு! முப்பது வய்சாகியும் கல்யாணம் பண்ணாமல் இருந்தவளைப் பாவப்பட்டுத் தாலிபாக்கியம் கொடுத்தேன் பாரு என்னைச் சொல்லணும்!'

'முப்பது வயசாகி உங்ககிட்ட தாலி பாக்கியம் பெற்றதைவிட ஐம்பது வயசாகியும் தாலி பாக்கியம் இல்லாமலே இருந்திருந்தால் கூட சந்தோஷமாகவே இருந்திருப்பேன். ஒருநாளாவது தாலி கட்டின கணவனா என்னிடம் நீங்க நடந்திருப்பீங்களா? நீங்க ஓர் ஆம்பளையா?

'சரிதான் போடி! உன்னை ஒரு நாய் கூட சீண்டிப் பார்க்காதடி! இன்னும் ஒண்ணு சொல்லறேன். நல்லாக் கேட்டுக்கொள்! எனக்குக் கல்யாணமாகி மனைவியும் இரண்டு குழந்தைகளும் ஊரில இருக்காங்க!' என்று சர்வ சாதாரணமாகவே அவளிடம் தெரிவித்தான்.

'சே.... நீங்களும் ஒரு மனுசனா இந்த நாயை விட நீங்க எவ்வளவோ கீழ்த்தரமானவர்னு நான் சொல்லறேன். அதற்கு உள்ள நன்றி உணர்வு, கூட உங்களுக்கு இல்லேனு நினைக்கும் போது, நீங்க எவ்வளவு மட்டமானவர்னு

[தொடர்ச்சி 20-ம் பக்கம்]



# புல்லாங்குழல் இசையில் 30 ஆண்டுகளாக சாதனை படைக்கும் டி.கே.நவநீதம்மாள்

இன்று இசைக் கருவிகள் யாவற்றையுமே பெண்கள் ஆர்வமுடன் பழகிக்கொள்கிறார்கள் என்றாலும் நாதசுரம், புல்லாங்குழல் போன்றவற்றில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. ஒரு சிலர் புல்லாங்குழல் இசைக்கப் பழகினாலும் மேடைக் கச்சேரி செய்யுமளவிற்கு முன்வருவதில்லை. ஆனால் இவர்களிற்கெல்லாம் விதிவிலக்காக புல்லாங்குழல் இசையில் 30 வருடங்களாகச் சாதனை படைத்து வருகிறார் திருவிடைமருதூரிலுள்ள நவநீதம்.

இவருக்கு பெற்றோரால் 5 வயதிலேயே பரதநாட்டியம் பயிலத் தயார்படுத்தப்பட்ட போதும், இவரின் மனமோ புல்லாங்குழலிலேயே இலயித்திருந்தது. பின்பு புல்லாங்குழல் இசைக்கப் பழகிய நவநீதம், தன் 9-வது வயதிலேயே அரங்கேற்றமும் நிகழ்த்திவிட்டார்.

அரங்கேற்றம் நிகழ்த்தப்பட்ட அன்றே 3 கட்டையில் (சுருதி) கூட்டி புல்லாங்குழல் இசைத்து, எல்லோரையும் வியக்கவைத்ததால் 9 பவுண் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார். நவநீதத்தின் அன்றைய ஆரம்பமே சிறப்பாக அமைந்ததால், இன்றுவரை 1000-ற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை வழங்கிய இவருக்கு குழலிசை அரசி, வேய்ங்குழல் அரசி என்ற பட்டங்களும், 1970-ல் கலைமாமணி விருதும் கிடைத்தமை குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.



## பாதுகாப்பான தாய்மையை, உறுதிப்படுத்தும் நிறுவனத்தின் 'பெண்களும் பிரவசமும்' பற்றிய வருடாந்த அறிக்கை

1. வருடம் ஒன்றிற்கு மகப்பேற்றின்போது இறக்கும் பெண்கள் 5,85,000 தொகையினர். இதில் 99% வளர்முக நாட்டிலும் 1% வளர்ச்சியடைந்த நாட்டிலும் இடம்பெறுகிறது.
2. மகப்பேற்று காரணமாக 1 வருடத்தில் நோய்க்கும் காயங்களிற்கும் ஆளாகும் பெண்கள் (50,000,000) 50 மில்லியன்கள்.
3. சாதாரணமாக 100,000 பிரசவம் நடந்தால் அதில் 500 பேர் இறக்கிறார்கள். அதிலும் வளர்முக நாடுகளில் இது 18 மடங்கால் உயர்வாக இருக்கிறது.
4. வருடம் ஒன்றிற்கு இடம்பெறும் கருச்சிதைவு 50 மில்லியன்கள். இதில் பாதுகாப்பற்ற கருச்சிதைவால் ஏற்படும் மரணம் 80,000 தொடக்கம் 100,000 வரையாகும்.
5. ஒரு நாளில் இடம்பெறும் பாதுகாப்பற்ற கருச்சிதைவு 55,000. இதில் 200 பேர் இறந்து விடுகின்றனர்.
6. இத்தகைய பிரசவகால மரணங்களை அதிகப்படுத்துவதாக இருப்பது போதிய மருத்துவ வசதியின்மை, இளம் வயதிலும் தாய்மை அடைதல் (13–19 வயது). சரியாக பயிற்றுவிக்கப்படாத மகப்பேற்று உதவியாளர்கள் முன்னிலையில் பிரசவம் நிகழ்தல், பாதுகாப்பற்ற கருச் சிதைவு போன்றனவாகும்.
7. மகப்பேற்றின் போதான மரணங்களைக் குறைப்பவையாக இருப்பது ஒப்பீட்டு ரீதியில் பெண்களிற்கான சிறந்த நிலை, கூடிய அதிகாரம், நிறைவான கல்வி, பிந்திய திருமணங்கள், சரியான முறையில் குடும்பத்தைத் திட்டமிடல் சிறந்த கருத்தடைச் சாதனங்களை பயன்படுத்தல் என்பனவாகும்.

# பிரான்சின் விடுதலைக்கு உழைத்த மெக்சிக்கோ பெண்மணி *Josephine Baker*

சாதாரணமாக ஒரு நாட்டின் சுதந்திரத்திற்காக ஒருவர் உயிர் உடல் அனைத்தையும் அர்ப்பணித்துப் போராட முன்வருவாரெனில் அவர் நிச்சயமாக அந்த நாட்டின் சொந்தப் பிரஜையாகவே இருப்பார். இதை மீறி வேறொரு நாட்டின் விடுதலைக்காக இன்னொரு நாட்டுப் பெண் போராடியிருக்கிறார் என்பது போற்றுதற்குரியதோர் விடயம்தான். இவ்வாறான போற்றற்குரிய செயலை பிரான்சின் விடுதலைக்காக ஆற்றியவர் *Josephine Baker* என்ற என்ற மெக்சிக்கோ பெண்மணி.

தான் பிறந்த நாட்டைத் தாண்டி பிறிதொரு நாட்டின் நலன்மேல் ஏன் இவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்ற எல்லோரது கேள்விக்கும் அவரது இறந்தகால வாழ்வே பதிலாக அமைகிறது.

1906-ம் ஆண்டு மெக்சிக்கோவில் பிறந்த *Josephine Baker*, ஒரு நாடோடிக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தை வீதிவீதியாக நின்று பாட்டுப்பாட, இவரது தாயார் அப் பாடலுக்கு நடனமாடி சம்பாதிக்கும் சிறு தொகை தான் அவர்களது வருமானம்.

இத்தகைய ஒரு வறிய குடும்பத்தில் முதல் குழந்தையாக *Josephine* பிறந்ததும் அவர் தகப்பனால் கைவிடப்பட்டு விட்டார். காரணம், குழந்தை பிறந்த நிலையில் எப்படி இனி இவர் தாயால் நடனமாடி பணம் சம்பாதிக்க முடியுமென்ற கோபமும் வெறுப்பும்தான். இவ்வாறு கணவனால் கைவிடப்பட்ட *Josephine* இனது தாயும் மறுபடியும் திருமணம் செய்து கொள்ளவே, இன்னும் இவர்களது குடும்பத்தில் 3 குழந்தைகள் அதிகமாகியது மட்டுமன்றி, வறுமையும் அகோரத் தாண்டவமாடியது.

இதைக்கண்ட இவரது தாய், *Josephine* ஐ 8 வயதிலேயே வசதியான ஒரு வீட்டில் வேலைக்கமர்த்திவிட்டார். அங்கு வேலைக்கு சென்றதும் முன்னையதிலும் பார்க்க அவர் மேலும் துன்பப்பட்டார். காரணம், அவர் வேலை செய்யும் இடத்தில் காலை 5 மணிக்கு எழுந்தால் நித்திரை செய்யும் வரை ஓயாத வேலை. அது மட்டுமல்லாது அவ் வீட்டிலுள்ள மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு நாயின் கூட்டிலும் வீட்டின் தாழ்வாரங்களிலும் தான் இருக்க அனுமதிக்கப்பட்டார்.

ஒரு நாள் அவர்களின் உடையைத் துவைக்க அதிக சவர்க்காரம் பாவித்தற்காக, கொதிக்கும் நீரில் கையை வைத்து தண்டனையை அனுபவிக்க நேர்ந்ததும் மீண்டும் தாயிடமே வந்து சேர்ந்தார். அங்கு வந்தும்கூட மகிழ்வான நிலைமை இல்லாதமையால், தன் 13-வது வயதிலேயே திருமணம் செய்து கொண்டார் ஜோசபின்.

ஆனால் துரதிர்ஷடமாக அவர் கணவனோ உடற்சுகத்தை இவரிடமிருந்து பெறத்தான் ஆவலாக இருந்தாரே தவிர, இவரின் சுகதுக்கங்களில் பங்கு கொள்ள முன்வரவில்லை. இதனால் இவர் மணவாழ்வும் பிரிவிலேயே முடிந்தது.



இத்தகைய ஒரு நிலையில் தான் மெக்சிக்கோ வீதிகளில் பாட்டுப் பாடித் திரியும் ஒரு இசைக் குழுவின் நட்பு அவருக்குக் கிடைத்தது. இவர்களினூடாகத் தான் 1925-ம் ஆண்டு பிரான்சில் காலடி எடுத்து வைத்தார். அவர் பிரான்சிற்கு வந்ததும் இவர் செய்ததொழில் இரவு விடுதிகளில் நடனமாடுவதுதான். ஆரம்பத்தில் பெரியளவில் இவரை யாருக்கும் தெரியாது. ஆனால் சிறிது காலத்திலேயே பிரான்சிலுள்ள அனைத்துப் பொருட்களுக்குமே இவர் பெயரையே போடுமளவிற்கு உயர்ந்த புகழைச் சம்பாதித்தது மட்டுமல்லாது, நிறைந்த பணமும் இவர் வசம் குவிந்தது.

இதன் காரணமாக ஏராளமான நண்பர்களை தன்வசம் கொண்ட *Josephine* தொடர்ச்சியாக விவாகங்களைச் செய்வதும், விவாகரத்தைப் பெறுவதுமாக வாழ்க்கையின் துயரமான பகுதிகளையே அதிகமாகக் காணத் தொடங்கினார்.

அப்பொழுதுதான் பிரான்ஸ் பூராவும் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தமக்கெதிராக போர் தொடுக்கும் ஜெர்மன் நாட்டின் அரசியல் திட்டங்களை உளவு பார்த்துத் தகவல்களை சேகரித்து தமக்குவழங்க 'நாட்டுப் பற்றுமிக்க உளவுப் பிரிவினர்' வேண்டும் என்று. இதை அறிந்த அவர் தன்னை இவ்வளவுதூரம் புகழடைய வைத்த பிரான்சிற்கு நன்றிக் கடன் செலுத்த எண்ணி, அவ் உளவுப்படையில் இணைந்து கொண்டார்.

அதன் பின் தன் தொழிலை உதவியாகக் கொண்டு முழுமையான மனதோடு பிரான்ஸ் நாட்டு விடுதலைக்கு உழைக்க ஆரம்பித்தார் இவர். இவரின் திறமையான தொழிற்பாட்டால் ஏராளமான ஜெர்மனிய அரசின் திட்டங்கள் பிரான்சிற்கு மறைவாக வந்தடைந்தன. அது மட்டுமல்லாது இங்கு இருந்த தேசத் துரோகிகளும் பிடிபட ஆரம்பித்தனர். இவர் வாழ்ந்த காலப் பகுதியில் பிரான்சை ஆண்ட Gaulle, இவரின் திறமைகளைக் கண்டு தன் நம்பிக்கைக்குரிய ஆளாக இவரைக் கணிப்பிட்டு ஏராளமான பொறுப்புக்களை இவர் வசம் ஒப்படைத்தார். இவர் காலப் பகுதியில் ஜெர்மனி பிரான்சை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ளவே ஜோசபின் நாட்டை விட்டு வெளியேறினார்.

இவ்வாறு வெளியில் இருந்தும் உலகெங்கும் Gaulle ற்கும், பிரான்சிற்கும் ஆதரவான பிரச்சாரங்களை பரப்பத்தொடங்கினார். சிறிது காலத்தில் ஜெர்மனியிடமிருந்து மீண்டும் பிரான்ஸ் Gaulle கைக்கு வந்ததும், மீண்டும் பிரான்சிற்கு வந்த அவர், தன் நிகழ்ச்சிகளின் மூலம் ஏராளமான பணத்தைச் சேகரித்து யுத்தத்தால் அழிந்த வைத்தியசாலைகள், பாடசாலைகளை மீள இயங்கவைக்க உதவத் தொடங்கினார். இதற்காக இவரின் சேவையைப் பாராட்டி பிரான்ஸ் அரசாங்கம் இவருக்கு சிறந்த தேசப்பற்றாளர் விருதை வழங்கி கௌரவித்தது.


இதன் பின் இவர் அக்கறை, ஆதரவில்லாத குழந்தைகள் மேல் பரவியது. தன்னோடு 12 குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்க்கத் தொடங்கிய இவருக்கு உதவிக்கென வந்தவர்கள் பெரும் துரோகத்தை விளைவித்தனர். இதன் பலன்! எவ்வளவோ சொத்துக்களை உடமையாகக் கொண்டிருந்த இவர், 1/2 மில்லியன் டொலர் பணத்திற்கு கடனாளியாகி தன் சொத்துக்களையெல்லாம் விற்க வேண்டியதாகிவிட்டது.

இவரின் இந் நிலையைக் கண்ட பிரிட்டிஷ் மகாராணி, தன்செலவிலேயே மீண்டும் ஒரு வீட்டை இவருக்கும் இவர் வளர்க்கும் குழந்தைகளிற்கும் பரிசாகக் கொடுக்கவே, மீண்டும் இவர் நல்லதொரு நிலைக்கு வந்தடைந்தார்.

இதன் பின் தன் நடன வாழ்க்கையின் 50-வது ஆண்டை மிகச் சிறப்பாகக் கொண்டாடிய இவர் 3-ம் நாள் மாரடைப்பு நோயால் மரணமடைந்து விட்டார். இவரின் இறுதிக்கிரிகைகள் உலகெங்கிலுமுள்ள மக்களிற்கு தொலைக்காட்சி, வானொலி மூலம் தெரியப்படுத்தப்பட்டது மட்டுமல்லாது 24 நாட்டுத் தேசியக் கொடிகளால் போர்த்தப்பட்டு, ராஜ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. மேலும் இவரின் சேவைக்கு மதிப்பளிப்பதாகவே இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பார்வதி— என்ன லட்சுமி சரியாக யோசித்துக் கொண்டிருக்கிறாய்?
லட்சுமி— அது ஒன்றுமில்லை என்ர மகளுக்கு பார்த்திருக்கிற 2 பெண்களில் ஒருத்தி மூல நட்சத்திரம். நல்ல மூலத்தை நீதுகட இருக்கிறாள். மற்றவ பரணி நட்சத்திரமாம் நானொருக்குத் தானிலையே ஆள்கிற மென் இருக்காம். அதுதான் இவர்களில் யாரைச் செய்வதென்று விளங்கவில்லை.
பார்வதி— ஏன் இன்னமும் செய்யான். பின்னை என்ன எங்கட தலைமுறைதான் இந்த பதுமையோனையெல்லாம் பார்த்து இருந்து போய் கிடக்குதுகள் என்றால், இப்ப உள்ள இளைய தலைமுறைப் பெண்களாவது நல்லபடி வாழ நாங்கள் உதவி செய்ய வேண்டாமே? இல்லாட்டி அதுகளும் நாளைக்கு ஆதியங்களையத்தான் அரவணைக்க வேணும்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி துசித்தா கணேசபூபன், செல்வி திவ்யா ஆறுமுகவடிவேல்** ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




# உங்கள் கைவண்ணம்



**செல்வன் அரவிந்தன் யோகேந்திரராஜா**

**வயது - 07** (27.01.91)

**இடம்:** 5070 Frick, Switzerland

**பொழுது போக்கு:**
படம் வரைவது, சைக்கிள் ஓடுவது

ஒற்றுமையே வெற்றிக்கு வழி

ஒரு நாள் வேடன் ஒருவன் தோட்டத்தில் வலையொன்றை விரித்தான். பின்பு வலையின் மேல் சிறிதளவு தானியங்களைப் போட்டு விட்டு ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டான். சிறிது நேரத்தின் பின் புறாக்கூட்டம் ஒன்று அங்கு வந்தது. வேடன் போட்டிருந்த தானியங்களைச் சாப்பிட்டது. அப்போது அவற்றின் கால்கள் வலையில் சிக்குப்பட்டது. உடனே ஒளிந்திருந்த வேடன் புறாக்களைப் பிடிப்பதற்காக ஓடி வந்தான். அப்போது புறாக்கள் எல்லாம் சேர்ந்து வலையைக் கால்களால் தூக்கிக் கொண்டு மேலே பறந்து சென்றன. வேடன் ஏமாற்றத்துடன் சென்றான். எல்லாப் புறாக்களும் ஒற்றுமையாக நடந்து கொண்டதால் உயிர் தப்பிக் கொண்டன. நாமும் ஒற்றுமையாக வாழ்வோம்.

நன்றி

- யோ. அரவிந்தன்.

# அறிந்து கொள்ளுங்கள்

## 1. பூமி



பூமியின் புறப் பரப்பளவானது -51 கோடியே 1 இலட்சத்து 500 சதுர கிலோமீற்றர்.

நீரின் பரப்பளவு-36 கோடியே 11 இலட்சத்து 49 ஆயிரத்து 800 கோடி சதுர கிலோமீற்றர்

நிலத்தின் பரப்பளவு-14 கோடியே 89 இலட்சத்து 50 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர்.


நில நடுக்கோட்டின் சுற்றளவு-40,067 கிலோ மீற்றர்.

துருவங்கள் வழிச்சுற்றளவு -40,000 கிலோமீற்றர்

நில நடுக்கோட்டின் விட்டம் -12,754 கிலோ மீற்றர்

பூமி-சூரியன் இடைவெளித்தூரம் -149,707,000 கிலோ மீற்றர்.

## 2. மின்குமிழ்



மின் குமிழ் எப்படி எரிகின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? மின் குமிழுக்குள் இருக்கும் ஒரு உலோக இழை சூடாவதன் காரணமாகத்தான் எமக்கு வெளிச்சம் கிடைக்கிறது. இந்த உலோக இழைக்கு 'Tungston Fila Ment' என்று பெயர். எவ்வளவு சூடு ஏறினாலும் இந்த உலோக இழை உருகுவதில்லை. அமெரிக்காவைச் சேர்ந்த லாங்முர் என்பவர் 1915-ம் ஆண்டில் இதனைக் கண்டுபிடித்தார்.

# கட்டுரை முற்றம்

## புறா



வீட்டில் வளர்க்கக்கூடிய பறவை என்றாலே நம் நினைவில் வருபவை கோழியும் புறாவும்தான். புறாக்கள் அழகான, மென்மையான உடல் அமைப்புக் கொண்டவை. கூட்டமாக பறந்த வந்து உண்ணும் பழக்கமுடையவை. பழங்காலத்தில் தபால்களை அனுப்பவும். செய்திகளைப் பரிமாறிக்கொள்ளவும் புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. புறாக்கள் வேகமாக பறக்கக்கூடியவை. பல வகைகளிலும் பல வர்ணங்களிலும் புறாக்கள் காணப்படுகின்றன. துருவப் பிரதேசங்களைத் தவிர உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் புறாக்கள் வாழ்கின்றன. மற்ற பறவைகளுக்கு இல்லாத சிறப்பு புறாக்களுக்கு உண்டு. பொதுவாகப் பறவைகள் நீரை அலகால் உறிஞ்சி மேல் நோக்கி குடிக்கும். ஆனால் புறாக்கள் நீரை அப்படியே ஒரே மூச்சில் நாம் குளிர்பானத்தை 'ஸ்ரோ' போட்டுக் குடிப்பது போலவே உறிஞ்சிக் குடித்துவிடுகின்றன.

புறாக்கள் விதைகள், பருப்பு, கனிகளை தன் தீனிப் பையில் சேமித்து வைத்துக் கொள்கின்றன. உணவு தேவைப்படும் போது அதில் ஒரு பாகத்தை இரைப் பைக்குள் கொண்டுபோய்ச் செரிமானம் செய்துகொள்ளும். புறாவின் இறைச்சியும் கழிவும் மருத்துவக் குணமுடையவை. உலகமெங்கும் சமாதானச் சின்னமாக புறாக்கள் மதிக்கப்படுகின்றன. புறாவை வளர்ப்பதும் அதைக் கூர்ந்து கவனிப்பதும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. புறாவை எந்த இடத்தில் கொண்டுபோய் விட்டாலும் சில குறிப்புகளை வைத்துக்கொண்டு மீண்டும் பழைய இடத்திற்குத் திரும்பி வந்துவிடும்.

- ஞா. அஞ்சலா

## பிறநாட்டு பழமொழிகள்

★ நல்ல செயல்கள் வெளியே தெரியாமலேயே இருக்கின்றன. தீய செயல்கள் ஆடம்பரமாக எல்லாத் தெருக்களிலும் ஓடுகின்றன.

– மங்கோலியா

★ சொற்கள் நீர்க் குமிழியைப் போல உடைந்து விடக்கூடியவை. செயல்கள் தங்கத்துளிகளைப்போல விலை உயர்ந்தவை.

– சீனா

★ நல்ல செயல்கள் மனமுருகி பிரார்த்தனை செய்வதைப் போல தூய்மையானவை.

– சேர்பியா

★ ஒரு அன்புச் செயல் என்பது அதைச் செய்பவனின் வாயை மூடவேண்டும். அதை ஏற்றுக்கொள்பவரின் வாயைத்திறக்க வேண்டும்

– இத்தாலி

# கவிதை முற்றம்

## அழகுப் பொம்மை

*வண்ணங் கொண்ட பொம்மை;*
*வாயும் பேசா ஊமை;*
*உண்மை உயிரோ இல்லை;*
*ஒன்றுஞ் செய்வதில்லை!*

*எழுந்து நடப்பதில்லை;*
*எதுவும் தொல்லை இல்லை,*
*பழுதாய்க் கீறிவிட்டால்*
*பாவம், சிதைந்து போகும்!*

*உயிரைப் போலக் காப்பேன்;*
*உடைய விடவே மாட்டேன்;*
*நயமாய் அணியச் சட்டை-*
*நானும் அணிவிப்பேனே!*

# இப்படியும் சில பிராணிகள்

★ கோடை காலத்தில் புலிகள் வெப்பத்தைச் சமாளிக்க குட்டைகளில் படுத்துக் கிடக்கும்.

★ முள்ளம் பன்றியின் உடலில் சுமார் 25,000 முட்கள் உண்டு.

★ சைபீரிய காடுகளில், பறக்கும் அணில் இனங்கள் உள்ளன.

★ அமெரிக்காவில் அமேசன் காடுகளில் 'மாமேட்' எனும் குரங்கு இனம் உருவில் சிறியது. நமது கையின் சுண்டு விரல் அளவுதான்.

# துடிதுடிப்பேற்றும் தப்பாட்டம்

எந்தக் கலைநிகழ்ச்சியையாவது பார்த்துக் கொண்டிருக்கும்போது மனது நெகிழ்ந்து போயிருப்பீர்கள். அந்த அனுபவத்தை உன்னதமாக உணர்ந்திருப்பீர்கள். ஆனால் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மாறுதலான அனுபவமாகி ரத்தத்தில் லேசான துடிதுடிப்பு ஏறுவதை உணர்ந்திருக்கிறீர்களா? 'தப்பாட்டம் பார்த்திருந்தால் அந்த மாதிரியான உணர்வு உங்களுக்கும் வந்திருக்கும். அம்மாதிரியான துடிப்புடனிருக்கிறது தப்பாட்டக்கலை.

கிராமீய உடையுடன் தலையில் ஒரு ரிப்பன் சகிதமாக எதிர் எதிர் அணியாக மொத்தம் ஆறு அல்லது எட்டு பேர். கையில் தப்புக் கருவி. அதை வாசித்தபடி காலில் சலங்கைச் சத்தத்துடன் அடிகள் எடுத்து வைத்து ஆடுகிறார்கள். தப்பில் வேகம் கூடக் கூட ஆட்டத்திலும் வேகம்.

மிக வேகமான அடிகள். சலங்கைகளின் குவியலான சத்தம்.

> 'பதினான்காம் நூற்றாண்டில் கல்வெட்டுக்களில் கூட 'தப்புசேவை' என்கிற சொற்கள் இருக்கின்றன. தப்புதல் என்றால் அடித்தல். திராவிட மொழிகள் அனைத்திலும் இதே பொருள்தான்.

அதிலும் தப்புச் சத்தத்திற்கிடையில் 'ஹோ' வென்ற குரல் எழுப்புதல் வேறு. இதோடு பக்க வாத்தியங்களாக தவில்; நாதஸ்வரம். இம்மாதிரி இரண்டு மணி நேரம் வரை கடுமையான உழைப்புக்கு இணையான ஆட்டம். தமிழ்நாட்டுக் கிராமத்துக்கே உரித்தான ஆட்டம் இது.

தஞ்சை, சேலம், இராமநாதபுரம், மதுரை என்று சில மாவட்டங்களில் இன்னும் உயிர்ப்புடனிருக்கிறது 'தப்பாட்டம்'. கிராமத்தில் குழந்தை பிறந்தால்; பூப்படைந்தால்; திருவிழா நடந்தால்; யாராவது இறந்தால் அங்கே தப்பாட்டம் நடக்கிறது. பெரும்பாலும் விவசாயக் கூலிகளே ஆடுகிறவர்கள். தப்பாட்டம் நிகழ்கிற தினங்கள் தவிர மற்ற நாட்களில் விவசாயம் தான்.

மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி, மட்டப்பாறை கிராமங்களில் தப்பாட்டக் குழுக்கள் பிரபலம். அநேகமாக இம்மாவட்டத்தில் சற்று வயதான 'பெரிய' சாவுகள் நடந்தால் தப்பாட்டம் ஆஜராகி, பிணத்தின் முன் தப்பு 'வெளுத்து வாங்க' ஊர் வலம் போவது இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குப் பழக்கமான விஷயம். தஞ்சையைச் சுற்றி பல தரப்பட்ட தப்பாட்டக் குழுக்கள் உண்டு. மன்னார் குடிக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் நடக்கும் திருவிழாவின் போது முந்நூறுக்கும் மேற்பட்ட தப்பாட்டக் கலைஞர்கள் கூடி ஒன்று சேர்ந்து ஆடுகிறார்கள்.

தஞ்சைக்கருகில் உள்ள ரெட்டிப் பாளையத்தில் ஒரு தப்பாட்டக்குழு. இவர்களது நிகழ்ச்சியைப் பார்த்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் சார்ந்தவர்களும், தென் மண்டலக் கலைப் பண்பாட்டு மையம் சார்ந்தவர்களும் இணைந்து அவர்களுக்கு ஆறுமாத காலப் பயிற்சி கொடுத்தார்கள். ஆரம்பத்தில் ஐந்து அடவுகளுடன் அடி கூடுதலான அடவுகளுடன் ஆட வைத்தார்கள்.

## சாளரம்

தப்பாட்டத்திற்கு இன்னும் மெருகு சேர்ந்தது. தமிழில் நவீன நாடக முயற்சிகளில் தப்பாட்டம் இடம்பெற ஆரம்பித்தது. கூத்துப்பட்டறை ந. முத்துசாமி தப்பாட்டத்தை இன்னொரு தளத்திற்குக்கொண்டு போனார். ராஜுவின் 'நந்தன் கதை' பேராசிரியர் சே.ராமானுஜத்தின் கொங்கைத் தீ, வெறியாட்டம் என்று பல நவீன நாடகங்களில் தப்பாட்டமும் ஒரு அம்சமானது, மற்ற மாநிலங்களுக்கும், தில்லிக்கும் தப்பாட்டம் போவதுடன், நெதர்லாந்துக்கும் போயிருக்கிறது.

நெதர்லாந்தில் உள்ள கிராமியக் கலைகளுக்கான தியேட்டருக்கு இந்தியாவிலிருந்து இதற்கு முன்பு போன கலை பஞ்சாப்பில் உள்ள 'பங்காரா' நடனம். இந்த வருடம் போயிருப்பது தமிழ்நாட்டின் தப்பாட்டம். நெதர்லாந்துக்குப் போய் விட்டுத் திரும்பிய தப்பாட்டக் கலைஞரான ரங்கராஜன் விவசாயமும் செய்கிறார். தப்பாட்டத்திலும் தொடர்கிறார். நிறைய பயிற்சிகளுக்குப் பிறகு அடவுகள் கூடி, தமிழ்நாட்டின் முக்கிய தப்பாட்டக் குழுக்களில் ஒன்றாகியி



ருக்கிறது இவர் தலைமையிலான தப்பாட்டக் கலைக் குழு.

94 ஓகஸ்ட் மாதத்தில் நெதர்லாந்து போய் வந்த அனுபவத்தைச் சொன்னார் ரங்கராஜன். 'பன்னிரெண்டு நாட்கள் அங்கிருந்தேன். டச்சுமொழி பேசுகிறவர்கள் மத்தியில் ஆங்கிலம் தெரியாத நிலையில் சைகையிலும் தமிழிலுமாக தப்பாட்டத்தை அடிப்பது. காலடி வைத்து ஆடுகிற முறை அடவுகள் என்று அனைத்தையும் அங்கிருந்த 16 பேருக்குக் கற்றுக் கொடுத்தேன். அதில் ஆறு பேர் பெண்கள். தப்பு அடிக்கச் சிரமப்பட்டார்கள். இருந்தும் 'ஸ்டெப்'களை உடனே கற்றுக்கொண்டுவிட்டார்கள். தனியாக 'தப்பாட்ட நிகழ்ச்சியை நான் நடத்திய போது பலரும் பாராட்டினார்கள். இந்தக் கிராமத்திலிருந்து தேசிய அளவுக்குப்போய் தேசம் கடந்து போகிற அளவுக்கு தப்பாட்டத்தை உயர்த்தியதற்கு பலருக்கு நன்றி சொல்லவேண்டும் என்கிறார் இவர். சென்னையில் பல இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் தப்பாட்டப் பயிற்சி கொடுத்திருக்கிறார். எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும் வைக்கோலோ, பேப்பரோ கொண்டு போய் தப்புக் கருவியை அடிக்கடி சூடுபடுத்துகிறார்கள்.

தப்பாட்டக் கலைஞர்களே தப்பையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். முதலில் வட்ட வடிவத்தில் தப்புக் கட்டையை கடைந்து கொள்கிறார்கள். எருமைக் கன்றுக் குட்டியின் தோலை முடியெல்லாம் நீக்கிப் பதப்படுத்தி நன்றாக ஊற வைக்கிறார்கள்.

தொய்வு விழுந்த அந்தத் தோலைப் புளியங்கொட்டைப் பசையைத் தடவி ஓரங்களில் துளைகள் போட்டு, கயிற்றால் நன்கு இழுத்துக்கட்டி வெயிலில் காய வைக்கிறார்கள். பிறகு நெருப்பில் காட்டினால் பதமேறி அடிக்கும்போது திம்மென்ற சத்தம். அதை வயிற்றுப் பகுதியில் இடுக்கிக்கொண்டு மேலே ஒரு மெலிந்த குச்சி. கீழே தடிமனான குச்சியில் தாளலயத்துடன் அடிக்க தப்பில் எழுகிற சப்தம் காதுகளில் அதிர்கிறது.

'பதினான்காம் நூற்றாண்டில் கல்வெட்டுக்களில் கூட 'தப்பு சேவை' என்கிற சொற்கள் இருக்கின்றன. தப்புதல் என்றால் அடித்தல். இதிலிருந்து தப்பாட்டம், திராவிட மொழிகள் அனைத்திலும் இதே பொருள் தான். இது தெய்வ வழிபாட்டுடன் இணைந்ததாகவே முன்பிருந்திருக்கிறது. தப்புக் கருவியில் 'தகிட தகிட தகிட' என்ற திஸ்ர நடையும், 'தகதிமி தகதிமி' என்று சதுஸ்ர நடையும் வாசிக்கிறார்கள். இதனுடன் கண்ட நடையும் வாசிப்பதுண்டு. இந்தத் தாள ஞானம் இவர்களுக்கிருக்கிறது இயல்பாகவே. பிறகு ஆட்ட அடவுகள். ஆரம்பத்தில் மூன்று அல்லது நான்கு அடவுகளுடனிருந்த தப்பாட்டம், இன்று 36 அடவுகளுடன் ஒரு மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து ஆடுமளவுக்கு உருமாறியிருக்கிறது.

முன்பு தப்படி மட்டும் இருந்தது. பிறகு 'சப்தக் குழல்' என்கிற சிறு நாதஸ்வரம் மாதிரியான வாத்தியத்தை வைத்து அதனுடன் இணைந்து வாசித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது நாதஸ்வரத்தையும், தவிலையும் இணைத்து காலில் சலங்கைச் சத்தத்துடன் ஆடுகிறார்கள். 'நெல்சன் மண்டேலா' தில்லிக்கு வந்தபோது தப்பாட்டக் குழு அங்கு சென்று ஆடியிருக்கிறது. சிங்கப்பூரில் நடந்த தேசிய விழாவில் பத்து நாட்கள் நிகழ்ச்சி நடத்த பத்மா சுப்ரமணியத்துடன் இணைந்து தப்பாட்டக் குழுக்களையும் அழைத்துப் போனேன் என்கிற தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் முருகேசன், தப்பாட்டத்தின் முக்கியத்துவத்தை இப்படிச் சொன்னார். தப்பாட்டத்தின் சிறப்பு அதன் வேகம். அதன் அழுத்தமான சப்தம். எந்த அளவுக்கு தப்பில் அதிர்வு உண்டாகிறதோ, அந்த அளவுக்கு ஆடுகிறவர்களின் உடம்பிலும் அது பிரதிபலிக்கும்.

விளம்பம் அல்லது மத்திமத்தில் ஆரம்பித்துப் படிப்படியாக 'டெம்போ' கூடி, துரித கதியில் போய் முடிப்பார்கள். இதுதான் கிராமியக் கலையின் தீவிரம்' என்கிறார் அவர்.

ஒரு பக்கம் உடலுழைப்பைச் செலுத்தும் விவசாய வேலைகள். அதற்கிடையில் இம்மாதிரியான அவர்களின் தப்பாட்டக் கலை. முழுக்கக் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்டவர்களிலும் 'ஆண்களின்' கலையாகவே இது நீடிக்கிறது.

பதினெட்டிலிருந்து முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்களே பெரும்பாலும் ஆடுகிறார்கள்.

தப்பை லாவகமாக வாசித்தபடி விதவிதமான அடவுகளுடன் கூடிய அடிகளுடன் ஆடுவதற்கே தனிவலு தேவை. உடல் வலுவை அடிப்படையாகக் கொண்ட இக்கலையின் உயிரான இன்னொரு விஷயம், அதன் வேகம். அதற்குத் தகுந்த உடலசைவு. நெருங்கி நின்று பார்க்கும்போது மனதில் ஒரு விதமான எழுச்சியை உண்டு பண்ணக்கூடிய சாத்தியமிருக்கிறது இக்கலையில்.

தப்பாட்ட நிகழ்ச்சி முடிந்த பிறகும் வெகுநேரம் அதன் அதிர்வு மனதில் நிலைத்திருக்கிறது. ஒரு கலை ஈர்க்கப்படுவதற்கு இதை விட வேறென்ன விஷயங்கள் வேண்டும்?

நன்றி:
தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்

# நாற்று

## இனம் ஆக்கங்கள்

## காரணமும் காரியமும்

விழிக்க மறந்த கண்கள்
தூக்கமும் துன்பமும்
தொடர்ந்ததினால்
எட்டாத வேதனைக் கரைகளை
எட்டாமலேயே போனதாக
எண்ணி
கடலிடையே ஓர்
கண்ணீர் வாழ்க்கை

பார்வைகளை மறுத்ததினால்
பாதைகள் திசைகளையிழந்து
சிக்கித் தவித்தன

உண்மைகளை நோக்கிய
தேடல்கள்
உருவங்களிடம்
தங்களையே இழந்து போயின

இழப்புக்கள்
விளக்கங்களுடன் விரிந்து
இலக்கணமாகியது
பற்றுக்கொண்ட தேடல்களும்
கூடவே ஒட்டிக் கொண்டன
இருட்டு மேடையில்
சுருட்டல் நாடகம்
நலமே நடந்தேறியது
தொலைந்துபோன
சொந்தங்களிலே
எஞ்சிப் போனவை:
ஏழ்மையும் ஏளனமுமே!
நியாகக் கற்பிதங்கள்
கோர்ட்டும் சூட்டும் மட்டும்
போட்டிருக்கவில்லை....
கோவணமும் சால்வைத்துண்டும்
கூட
எட்டி நின்று ஏவல் செய்தன
மேடைக்கு வெளியிலும்
நடமாடும் வேஷங்கள்
அவற்றின் கூச்சலிலே
அருகில் நின்ற
ஆதரவென்றெண்ணி
நம்பியே 'வெம்பிய' கூட்டங்கள்

மூடிய கண்களுக்குள்ளே
முழுநேர விரிவுரைகள்
வெளிச்சத்திற்கு வேலியிட்டன....
வேலியென்ன
தாழ்ப்பாளே போட்டன!
கடந்துபோனவையெல்லாம்
இழந்துபோனவையாம்
புதிய விளக்கங்கள்
கண்ணுக்கு மை இட்டு
அழகென்று அறிவுறுத்தின
குருட்டுக் கண்கள்
இருட்டு வாழ்க்கையிலும்

இழந்ததை
தாம் மறந்ததை – ஏதோ
மீட்டுக்கொண்டதைப்போல்
மகிழ்ந்துகொண்டன

தேவைகளின் நிர்ப்பந்தத்தில்
நீண்டு வரும் கைகள்
வாங்குவதற்காக ஏங்கி நிற்கும்!
ஏங்கி ஏங்கி....
எதையோ வாங்காமல்
தூங்கிப்போகும் – அல்லது
துளியொன்று கிட்டிவிட்டால்
துள்ளிப்போகும்

முட்டும் நீர்த்துளிகள்
கண்களை மீறி
எட்டிப் பார்க்க
எல்லைகளுக்குத் தாண்டிய
அழுகைகள்
வெளிச்சத்திற்குள் வந்து
வேவு பார்க்கும்!
இருட்டு மேடைகளின்
வரட்டு வாதங்கள்
கேள்விக் குறிகளாகி
விலகிப்போக....
தூக்கத்தின் துயரங்கள்
வாழ்க்கை வரைமுறைகளோடு
அளக்கப்படும்!


வாங்கிய கைகள்
ஓங்கும் நாள்வரின்
துயரங்கள் தூரமாகி
எட்டினும் எட்டாமல்
விட்டுப்போய்விட.....
காரணங்களைத்தேடிய
கண்கள்
பார்வைகளுக்குள்
பதிந்துகொண்டதை
எடைபார்த்து
எடுத்துக்கொள்ளும்!!
நாளை நம் கையில்
வாழ்வு எம் கையில்
வரைமுறைகளும் அவ்வாறே!

ஆமாம்
இறந்தகாலம் பாடங்களாகி
இலட்சியம் எதிர்காலமாக
போராட்டம் நிகழ்காலமாகட்டும்!!

அப்போதுதான்
வினாக்கள் விடைகளைக்காண
விடைகள் வரைகளைக்காண
வரைகள் மனிதத்தைக்
காணும்!!!

அன்புடன்
ஈழமைந்தன்

# கல்லீரல் செயலிழக்க காரணம் என்ன?



இதய செயலிழப்பு, சிறுநீரக செயலிழப்பு போன்று 'கல்லீரல் செயலிழப்பும்' உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய மோசமான நோய்ப் பாதிப்பு நிலையாகும்.

கல்லீரலின் செயலிழப்பினால், இரத்தத்தில் பல்வேறு கழிவுப் பொருட்களும், நஞ்சுப் பொருட்களும், மிகுந்துவிடும். மூளையும் நரம்புமண்டலமும் பாதிக்கப்படுவதால், நோயாளி நினைவிழந்து, 'மயக்கமடைந்து விடுவார்'. இது உடனடியாக 'அவசர சிகிச்சைக்கு' உட்படுத்த வேண்டிய நிலையாகும். இவர்களை உடனடியாக நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையின் சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டும்.

## செயலிழப்பின் போது ஏற்படும் அறிகுறிகள்:

'மூளைபாதிப்பு' தான் கல்லீரல் செயலிழப்பின் முக்கிய அறிகுறியாக இருக்கும். மூளையியல் 'நீர் தங்குதலே' இதற்கு காரணமாகும். முதலில் நோயாளி, சுதாரிப்பின்றி இருப்பார். இவரால் மற்றவர்களை போல செயல்பட முடியாது. பொதுவாக, அன்றாட நிகழ்ச்சிகள் எவற்றிலும் நாட்டமில்லாதவராக இருப்பார்.

பிறகு குழப்பம், தானிருக்கும் இடம் அறியாமை, தூக்கத்தில் மாறுபாடு, வாய்குளறுதல், கொட்டாவி, விக்கல் எடுத்தல், வலிப்பு ஏற்படுதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

கை கால்களில் நடுக்கம், படபடவென அடித்துக்கொள்ளுதல் ஆகியவையும் ஏற்படும். சுவாசத்தில் மாறுபாடு, அதிகமாக வியர்வை ஏற்படுதல், கண்ணின் விழிப்படலத்தின் மையத்தில் நீர் தங்குதல் போன்ற தொந்தரவுகளும் தோன்றலாம்.

மேலும், அசதி, குமட்டல், வாந்தி ஆகியவை ஏற்படும். வயிற்றில் வலது பக்கத்தில் 'வலி' ஏற்படும். 'மஞ்சள் காமாலை' பெரும்பாலானோருக்கு இருக்கும்.

சுவாசிக்கும்போது வெளிவரும் காற்று ஒரு புதிய வாசனை கொண்டதாக இருக்கும்.

வயிற்றுப் பெருக்கம், மகோதரம் கை, கால்களில் நீர் தங்குதல் ஆகியவையும் இருக்கும்.

## கல்லீரல் செயலிழப்பிற்கான காரணங்கள்:

குழந்தைகளுக்கும், ஒரு வயதிற்குட்பட்ட சிசுக்களும் 'பராசிட்டமால்' மருந்தை அதிக அளவு கொடுக்கும் போது, கல்லீரலில் செயலிழப்பு ஏற்படும்.

பெரியவர்களுக்கு மயக்க மருந்தான 'கலோதேன்' மருந்தை பயன்படுத்தும் போதும் இது போன்ற நிலைமை ஏற்படலாம்.

## நுண்ணுயிர்க்கிருமிகள்:

கல்லீரல் அழற்சியை உண்டாக்கக் கூடிய பல்வேறு வைரஸ் கிருமிகளின் காரணமாகவும் இது ஏற்படலாம். கல்லீரல் அழற்சி வைரஸ் சி.பி.ஏ. ஆகியவையும் இதை ஏற்படுத்தலாம்.

## காளான் நஞ்சு:

சில வகை காளான் வகையினங்களின் நஞ்சினாலும் இது ஏற்படலாம். 'அமோனீட்டா' வகைக்காளான்கள் இதனை ஏற்படுத்தும்.

## கர்ப்பம்:

கர்ப்பிணிகளுக்கும் கல்லீரலில் அதிகமாக கொழுப்பு படிவதனால் 'கல்லீரல் செயலிழப்பு' ஏற்படலாம்.

## உலோகம்:

'தாமிரம்' உடலில் அதிகமாக சேர்ந்து கல்லீரல் சேருகின்ற போதும் இந்த பாதிப்பு ஏற்படலாம்.

## ஏற்கனவே நலிவடைந்த கல்லீரல்:

சிலருக்கு பல்வேறுபட்ட காரணங்களினால் கல்லீரல் பாதிப்படைந்து இருக்கும். இது அழற்சியினாலோ, மருந்தினாலோ, மதுவினாலோ பாதிப்பு ஏற்படுகின்றபோது இதனால் கல்லீரல் செயலிழப்பு ஏற்படலாம். குடலில் இரத்தக்கசிவு ஏற்படுதல், அறுவைச் சிகிச்சை, மயக்க மருந்து, விபத்து, அழற்சி, வைட்டமின் குறைபாடு, பொட்டாசியத்தின் குறைவு, மருந்துகள் ஆகிய இவற்றில் ஏதாவது ஒன்றின் காரணமாக ஏற்கனவே, பாதிப்படைந்த கல்லீரல் மேலும் தாங்காமல் நலிவடைந்து செயலிழந்துவிடும்.

இப்படி 'கல்லீரல் செயலிழப்பிற்கு பல்வேறு காரணங்கள் இருந்தபோதும் 90 சதவீத செயலிழப்பானது மருந்தினாலும், கல்லீரல் அழற்சியினாலும் ஏற்படுகிறது.

## பரிசோதனைகள்:-

இரத்தத்தில் மஞ்சள் பித்த நிறமிகளின் அளவு கணக்கிடப்பட வேண்டும் (Serum Bilirubin).

இரத்த உறை பொருட்களின் அளவு, இரத்த உறை நேரம், இரத்தகசிவு நேரம், பரோதிராம்பின் நேரம் ஆகியவை கணக்கிடப்பட வேண்டும் (prothrombin Time)

இரத்தம் புரதப் பொருட்களான அல்புமின், குளோபிலின் ஆகியவை கணக்கிடப்பட வேண்டும்.

இரத்தத்தில் கல்லீரல் தொடர்பான 'நொதிகளின்' அளவுகள் கணக்கிடப்பட வேண்டாம். இரத்த வெள்ளையணுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். 'கல்லீரல்' திசுவை எடுத்து பரிசோதனை செய்யவேண்டிய நிலையும் கூட ஏற்படலாம்.

திடீரென ஏற்படுகின்ற கல்லீரல் செயலிழப்பிற்கு உடனடியாக சிகிச்சை செய்ய வேண்டும்.

இவர்களில் பலரும் சுயநினைவை இழந்திருப்பார்கள். எனவே, மயக்கமுற்றோருக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகள் என்னென்ன கண்காணிக்கப்பட வேண்டுமோ, அவை அனைத்தையுமே செய்ய வேண்டும்.

இவர்களை நவீன அவசர பிரிவில் அனுமதிக்க வேண்டும். இவர்களுக்கு எந்த வித மயக்க ஊசியும் போடக்கூடாது. அவசியத் தேவையிருந்தால் அதிக பாதிப்பை ஏற்படுத்தாத 'டையஸீபாம்' மருந்தை பயன்படுத்தலாம்.

எதனால் 'கல்லீரல் செயலிழப்பு' ஏற்பட்டது என்பதை அறிந்து அதற்கு சிகிச்சை செய்ய முயல வேண்டும்.

'கல்லீரலை' செயலிழக்கச் செய்யக் கூடிய மருந்துகளை நிறுத்திவிட வேண்டும்.

## உணவு:

'புரதம்' குறைந்த உணவையோ / திரவத்தையோ கொடுக்க வேண்டும். 'புரதம்' அதிகமான உணவைக் கொடுத்தால் அது அதிகமாக சிதைந்து பல்வேறு 'நஞ்சுப் பொருட்களையும்' ஏற்படுத்திவிடும். கல்லீரல் நல்ல நிலையிலிருந்தால் இது போன்ற பொருட்களை 'கழிவுப் பொருட்களாக்கி' பின்வெளியேற்றிவிடும். கல்லீரல் செயலிழந்த நிலையில் இது முடியாததால் உடலில் 'நஞ்சுப் பொருட்கள், அதிகரித்துவிடும்.

இதில் அமினோ அமிலங்கள், அமைன் வகைகள், பியூட்ரிக் அமிலம், ஆகியவை குறிப்பிடத்தகுந்தவையாகும்.

இவர்களுக்கு உடலின் தேவைக்காக தினமும் 20 முதல் 30 கிராம் 'புரதம்' கிடைக்குமாறு செய்தால் போதுமானது. மேலும், தினமும் 1500 கி.கலோரி சக்தியை தரவல்ல உணவு / திரவம் ஆகியவற்றை இவர்களுக்கு தரவேண்டியது வரும்.

குடலில் பல்வேறு தொற்று நோய், நுண்கிருமிகள் இருந்தால், இவற்றாலும் உணவு சிதைந்து, பல்வேறு 'நஞ்சுப் பொருட்கள் உருவாக வாய்ப்புகள் உண்டு.

எனவே, இந்த நுண்ணுயிரிகளைக் கொல்ல, பல்வேறு 'நுண்ணுயிர்க்கொல்லி' மருந்துகளையும் கொடுக்க வேண்டிவரும்.

## நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள்:

இந்த வகையில் 'நீயோமைசீன்' 'லாக்டீயூலோஸ்' 'லஸீட்டால்' ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், பெருங்குடலில் மலம், கழிவுப் பொருட்கள் இருந்தாலும் இவற்றின் மூலம் நஞ்சுப் பொருட்கள் பரவ வாய்ப்புண்டு. எனவே, மலக் குடவை 'எனிமா' கொடுத்து சுத்தம் செய்ய வேண்டும். இதற்கு 'மெக்னீஸியம் சல்பேட்' எனிமா கொடுக்க வேண்டும்.

இந்த நோயாளிகளால் உண்ணவோ, அருந்தவோ முடியாது. ஆகையால், பல்வேறு குளுக்கோஸ் மற்றும் திரவ மருந்துகளை இரத்தக் குழாயின் மூலமாக கொடுக்க வேண்டும்.

பெரியவர்களுக்கு தினமும் கிட்டத்தட்ட 2 லீற்றர் குளுக்கோஸ் கொடுக்கலாம். இத்துடன் பொட்டாஷியம் குளோரைட்டு, 'சோடியம்' ஆகியவையும் இரத்த நிலைக்கு ஏற்ப கொடுத்து இவை போதுமான அளவு இரத்தத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

## இரத்தம் - குருதி - நீர் பிற திரவங்கள்:

சிலருக்கு இரத்தமோ 'பிளாஸ்மா' எனப்படும் குருதி நீரோதட்டணுக்களோ தேவைப்படலாம். 'இரத்தக்கசிவு' ஏற்பட பலருக்கு வாய்ப்பு உள்ளதால் இவர்களுக்கு கண்டிப்பாக வைட்டமின் 'கே' கொடுக்கவேண்டி வரும்.

சிலருக்கு இரத்தத்தில் 'குளுக்கோஸின்' அளவு மிகவும் குறைவாக இருந்தால், இவர்களுக்கு 25% குளுக்கோஸ் கொடுக்க வேண்டிவரும். சிலருக்கு 'இன்சுலின்' ஊசி போடவேண்டி வரும். இரத்த அழுத்தம் குறைவாக இருந்தால் 'டோப்பமைன்' ஊசியினை, போடவேண்டிவரும்.

'அழற்சி' இருந்தால் அவர்களுக்கு 'நுண்ணுயிர்க் கொல்லி' மருந்துகளை ஊசியாக கொடுக்கவேண்டிவரும்.

இவர்களுக்கு மூக்குத்துவாரத்தின் (Naso-Gastric Tube) வழியாக மெல்லிய 'பாலித்தீன்' குழாயை செலுத்தி இரைப்பை / குடலில் இருந்து 'குடல் ஜீரண' நீரை வெளியேற்ற வேண்டும். அத்துடன் 'குடல் புண்ணைத்' தடுக்கக் கூடிய பல்வேறு மருந்துகளையும் இதே குழாய் மூலமாக கொடுக்க வேண்டும்.

## செயற்கைச் சுவாசம்:

சிலருக்கு சுவாசம் பெரிதும் பாதிக்கப்படும். இப்படிப் பட்டவர்களுக்கு, செயற்கைச் சுவாசம் செய்யப்படவேண்டி வரும்.

மூளை பெரிதும் பாதிக்கப்பட்டு 'நீர்' தங்கியவர்களுக்கு, 'மெனீட்டால்' போன்ற மருந்துகள் கொடுக்கப்படவேண்டி வரும்.

சிலருக்கு கழிவுப் பொருட்கள் மிகுந்து காணப்படுவதால், அவர்களின் இரத்தத்தை வெளியேற்றிவிட்டு, புது இரத்தத்தை செலுத்த வேண்டிவரும். இது இரத்தத்தில் கழிவுப் பொருட்களையும் நஞ்சுப் பொருட்களையும் வெளியேற்ற உதவிடும்.

'கல்லீரல் பெருமளவு செயலிழந்தவர்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை' தான் முழுமையான நிவாரணம் அளிக்க முடியும். எனவே, மேற் குறிப்பிட்ட சிகிச்சைகள் செய்து, நோயாளியை ஓரளவு நினைவுக்கு கொண்டு வந்த பிறகு, அவருக்கு இந்த 'மாற்று அறுவை' சிகிச்சை அளிக்க முடியும்.

நன்றி: 'ஹெல்த்'

டாக்டர் முத்துச்செல்வக்குமார்


கீபோட் வகுப்புகள்

குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்

(Intenrnational Method)

கீபோட் கற்பிக்கப்படும்

சனி: ஞாயிறு: 8.00 மணி தொடக்கம் 13.00 மணிவரை

திங்கள்: செவ்வாய்: 14.00 மணி தொடக்கம் 18.00 மணி வரை

ஆசிரியர் S.S தில்லைச்சிவம்

56, Rue Riquet, 75019 Paris. M°: Riquet

Tel: 01 40 37 56 69

Pub.

(15–ம் பக்கத் தொடர்ச்சி)

## யாருக்காக?

நான் சொல்ல தேவை இல்லை. இப்படிப்பட்ட மிருகத்தோடு வாழ்வதைவிட தனித்து வாழ்வதே மேல்னு தோணுது'.

- என்று கண்மணி கூறக்கேட்டு அவன் அதிர்ச்சிக்குள்ளானான்.

அவள் தன் உணர்ச்சியை மேலும் வெளிப்படுத்தினாள்.

'அன்றைக்கு ஒரு நாள் சொன்னீங்களே தாலியைக் கோக்கறதும் பிரிக்கறதும் என்விருப்பம் என்று! இப்ப என் விருப்பப்படி நீங்க என்னோட முப்பது வயசுக்கு கட்டின தாலியைக் கழட்டிக் கொடுக்கிறேன். இந்தாங்க நீங்க கட்டின தாலி...! என்று அவனிடம் அத்தாலிக் கொடியை எடுத்து நீட்டினான்.

'இத் தாலி ஒருபோதும் எனக்கு வேலியாக இருந்ததில்லை. மாறாக, எனது கழுத்துக்கு சுமையா, எனது வாழ்க்கையை சின்னா பின்னமாக்கிய சின்னமாகத்தான் இந்தத் தாலி இருக்கு எனது வேதனையை குறைக்க வந்த தாலி, வேதனையை மேலும் பெரிதுபடுத்தி எனது வாழ்க்கையையே கூறுபோட்ட இந்தத் தாலி எனக்குத் தேவையில்லை. உங்க தயவும் எனக்குத் தேவையில்லை. இன்னும் சொல்லப்போனால்

இந்த நிமிஷம் முதல் நீங்க யாரோ! நான் யாரோ! எங்க வீட்டிலிருந்து கொடுத்து அனுப்பின எல்லாப் பொருட்களையும் எடுத்துக்கிட்டு எங்க வீட்டுக்கு போய்விடுறேன். நான் சாப்பிட்டதற்கு மேலாகவே



இந்த வீட்டில நான் உழைச்சி இருக்கிறேன். அதனால சாப்பிட்டதற்கு பணம் கட்ட வேண்டிய அவசியம் எனக்கில்லை' என்ற நீண்ட விளக்கவுரையை நிகழ்த்திவிட்டு, தாய் வீடு வந்து சேர்ந்தவள்தான் கண்மணி. தன்னை விரும்பாத ஒருவனுக்கு ஜடமாக வாழ்வதைவிட, அவனின் நிழலே தனக்கு ஆகாது என நினைத்து அவள் வந்துவிட்டாள். தாய்மைக்கும் தாலிக்கும் அர்த்தம் கற்பிக்க முடியாதவனோடு வாழ்ந்துதான் என்ன பயன்? சட்டப்படி திருமணம் செய்யாததால் கோர்ட்டுக்கும், வீட்டுக்கும் அலைந்து விவாகரத்து வாங்க வேண்டிய அவசியமும், அவசரமும் கண்மணிக்கு ஏற்படாமலேயே அமுதன் செய்துவிட்டான். மனமே விலகி நின்றபோது சட்டம்தான் என்ன செய்ய முடியும்?

அவரை நம்பி வெளியூர் சென்றிருந்தால், தன்னை அவன் விற்றிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என நினைக்கும்போது கண்மணி வருத்தப்படவே செய்தாள்.

சே... என்ன மனுஷன்! கண்மணியைப் பொறுத்தவரையில் அவள் வாழாவெட்டி அல்ல! வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கவிருக்கும் ஒரு பெண்மணி! ஆம், கண்மணி வாழ்ந்து காட்டப் போகிறாள். நாயாய், பேயாய், அலைந்து திரிந்து, அடிபட்டு உதைப்பட்டு, வாழ்ந்து கெட்டு கடைசி காலத்தில் வந்தடையும் அந்த நம்பிக்கைத் துரோகிக்கு கஞ்சி ஊத்தி உயிர்பிச்சை கொடுக்கவா வாழப் போகிறாள்! இல்லவே.... இல்லை. பிறகு யாருக்காக அவள் வாழத்துடிக்கிறாள்?

'சரிதான் போடி! உன்னை ஒரு நாய் கூட சீண்டிப் பார்க்காதடி' என்று சொன்னவனுக்குப் பதிலடி கொடுக்கும் பொருட்டு வாழ்ந்துகாட்டவே போகிறாள். ஓர் ஆண் செய்த தவறுக்காக கண்மணி ஆண் வர்க்கத்தையே சாட விரும்பவில்லை. காரணம், அவள் பகுத்தறிவுள்ளவள். ஓர் உத்தமரை, நல்லவரை, தன் நிலைமையை அறிந்தவரை, தன்னைப் புரிந்து கொண்டவரை, அதைவிட தன்னை மனப்பூர்வமாக விரும்புகிற ஒருவரை மணந்து தன்னாலும் வாழ முடியும், தன்னையும் வாழ்க்கைத் துணையாக ஏற்க ஒருவர் உள்ளார் என்பதை நிரூபிக்கும் பொருட்டே அவள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

*ஆண்டவனுக்கு ஒரு விண்ணப்பம் மீண்டும் கண்மணி, நம்பிக்கை துரோகியின் கையில் சிக்காமல் இருக்க வேண்டும்.*

ரெ.ஜெயலட்சு மலேசிய தேசிய பல்தேசிய பல்கலைக் கழகத்தின் ஒரு மாணவி. அத்துடன் இலக்கிய உலகிலும் நாட்டமுள்ளவர். இவரது யாருக்காக என்ற இச் சிறுகதை செம்பருத்தி வெளியீட்டாளர்களின் 'கருவறை கண்ட கற்பனைகள்' என்ற சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றதாகும்.

★ எஸ்.ஆர்.பி.: மலேசிய கல்வித் தராதர சான்றிதழ்.

★★ நாசி லெமா, மீ கோரிங், மீ பண்டோங், கொத்தியால்: மலேசிய உணவு வகைகள்

(14–ம் பக்கத் தொடர்ச்சி)

## 1997 இன் மிகச் சிறந்த..

**கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டம், அதிகார வர்க்க அரசாங்க அதிகாரிகள், சிதறுண்ட உறவுகள், சுய அடையாளம் இழக்கும் மனிதர்கள் என்கிற அழுத்தமான சமூக உண்மைகளை நகைச்சுவை வழியாக உணர வைத்த சமூக நையாண்டிப்படம்.**

ஐரோப்பிய சமூக வாழ்வின் மிக முக்கியமான வேலையின்மைப் பிரச்சினையும், சுய அடையாள இழப்பும், இவ்வளவு வரவேற்கத்தக்க படைப்பாக ஆகக் காரணம் என்ன?

கதை நிகழும் இடங்கள், இடம் பெறும் சம்பவங்களின் விளைவுகளாக இடம் பெறும் மனித நடத்தைகள், மனித நிகழ்வுகள் / நிஜமான வாழ்வில் 'தர்க்கபூர்வமாக இரத்தமும் சதையுமாக' ஊன்றி நிற்கின்றன. சின்னச் சின்ன சம்பவங்கள், துணைக் கதைகள் நமது நெஞ்சைத் தொட்டு நம் வாழ்வுக்குள் சென்று உரையாடத்தக்கதாக பல்வேறு காட்சிகள் படத்தில் உள்ளன. உண்மையில் இரத்தமும் சதையுமான இத்தகைய மானுட உறவுகளைச் சரியாகச் சித்தரிப்பதன் மூலமே 'பிரச்சினையை' படைப்பாக்க முடியும். பிரச்சனையையும் மானுட உணர்ச்சிகளும் மிகச்சரியாக தர்க்கபூர்வமாக கலந்த படைப்பான சினிமாவாகவே *Full Monty* படத்தைச் சொல்லமுடியும்.

படத்தின் பிரதான பிரச்சினையை நகர்த்திச் செல்லும் கதையில் தவிர்க்க இயலாது இடம் பெறும் சம்பவங்களைச் சுட்டுவது இங்கு பொருந்தும்:

1. அம்மண நடனமாடப் போகும் குண்டு ஆண் கடைசி சந்தர்ப்பத்தில் மறுத்து விடுகிறான். காரணமும் சொல்ல மாட்டேன் என்கிறான். மனைவி அவனது உள்ளாடையைப் பார்த்து விட்டு அவன் இன்னொருத்தியோடு உறவு கொண்டிருப்பதாக ஏசுகிறாள்.

அந்த ஜட்டி அம்மண நடனத்திற்கான ஜட்டி எனும் அவன், தன் குண்டு உடம்பை எவர்தான் ரசிக்கப்போகிறார் என அழுகிறான். 'நான் ரசிக்கிறேன் என் அன்பே' என்கிறாள் மனைவி.

குண்டு உடம்புள்ள மனிதர்களுக்கான அங்கீகாரமும் அன்பு கொள்ள மனிதரும் உண்டு என்பதை இக்காட்சி சொல்லுகிறது.

2. கடனுக்கு வாங்கிய வீட்டில், கஷ்டப்பட்டு, மனைவிக்குப் பிடிக்கும் என இரு பொம்மைகள் வாங்கி பைக்குள் வைக்கும் ஐம்பது வயதானவர். அதை நண்பர்கள் விளையாட்டுக்கு உடைக்கிறார்கள். அதன் பின்னுள்ள மனித உள்ளடக்கம் தெரிந்து மறுபடி வாங்கித் தருகிறார்கள்.

இறுதியில் வீட்டை கடன் கொடுத்தவர்கள் திருப்பி எடுத்துக்கொள்ளும் போது, அவரை வீட்டைவிட்டு துரத்தும் மனைவி, 'அந்தப் பொம்மைகளைத் தான் என்றுமே விரும்பியிருக்கவில்லை' என்கிறாள்.

3. மனைவியால் துரத்தப்பட்டு வரும் பெரியவர், மகனை இழந்தபடி தெருவில் நிற்கும் மற்றொரு தொழிலாள நண்பனை தோளில் கைபோட்டு அரவணைத்துக் கொள்கிறார்.

4. இறுதியில் காட்சியில் ஐந்து பேர் நடனமாட, தந்தையை உற்சாகப்படுத்தித் தூண்டியபடி மகனான சிறுவன் வந்து நிற்கிறான். தந்தையைப் புரிந்த கொண்ட அன்பு மகன் அவன்.

ஐரோப்பியச் சூழலில் பிரச்சினை அவ்வாறானது இல்லை. இங்கு விலை மாதர்கள்கூட *Sexual labours* என்றுதான் குறிப்பிடப்படுகிறார்கள். வியாபார சமூகத்தில், மனித உடல்கள் கூட பண்டமாகிவிட்ட சூழலில், வாழ்வுக்காக இதை மேற்கொள்பவர்கள் தம்முடைய ஸ்தாபனத்தையும் கௌரவத்திற்குரியதாக சமூகத்தில் நிலை நாட்டிக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

முன்பு பெண்களுக்கு மட்டுமே இந்த அவலம் நேர்ந்து கொண்டிருந்தது. வேலையில்லாத் திண்டாட்டமும் சமூக அறங்களின் வீழ்ச்சியும் ஆண்களையும் கூட இந்த எல்லை நோக்கித்தான் விரட்டிக்கொண்டிருக்கிறது என்பது ஐரோப்பிய யதார்த்தம்.

### நியோ ரியலிசமும் அழகியல் யதார்த்தமும் தான் வாழ்வென்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அழுக்கு யதார்த்தம் (Dirty Realism) அதிர்ச்சியூட்டத்தான் செய்யும்.

இப்படிப் படம் முழுக்க மனிதர்களுக்கிடையிலான கூட்டுணர்வையும் ஒத்துழைப்பையும், புரிந்துகொள்ளலையும் கொண்ட காட்சிகள் நிறைய இருக்கின்றன.

இப்படம் அழுத்தமான வாழ்வின் உண்மையில் காலூன்றிய படைப்பு. வேலையில்லாத் திண்டாட்டமும் தமது அடிப்படை ஆளுமையை இழந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய ஆண்களையும் பற்றிய படம் இது. இம்மாதிரியான இன்னொரு படம் தான், *Train sporting* என்கிற படம். போதைப்பழக்கத்தினரின் 'விலக்கப்பட்ட உலகத்தை' கதைக்களமாகக் கொண்ட படம் அது. அதிலும் ராபர்ட் கார்லைல்தான் கதாநாயகனாக நடித்திருந்தார்.

*The full monty* படத்தின் இயக்குநர் பீட்டர் கட்டானியோ (*peter caltaneo*) தனது படமொழியை *dirty realism* 'அழுக்கு யதார்த்தம்' அல்லது அப்பட்ட யதார்த்தம் என்று குறிப்பிடுகிறார். இப்படத்தில் பாவிக்கும் மொழி அம்மணமான அழகு பூசப்படாத மொழி. கதை மாந்தர்களும் அழுக்குப்படிந்த சாதாரண மனிதர்கள் தான்.

பாலுறவு பற்றிய 'மிகுந்த தீட்டு கொண்ட' சமூகமான எமது சமூகத்தில், இந்தப் படத்தைப் புரிந்துகொள்வதிலும், அங்கீகரிப்பதிலும் மிகுந்த மனத் தடைகள் இருக்கும். சில வேளை வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எதிரானதாகக் கூட இப்படம் தோன்றக்கூடும்.

யுகோஸ்லாவியத் தொழிலாளி வர்க்கப் படங்களையோ, கென்லோச்சின் *Ladybird, Riff Ratt* போன்ற படங்களையோ பார்த்தவர்களுக்கு *The Full monty* படத்தையும் அவ் வரிசையில் வைத்துப் பார்ப்பதற்கு ஏதும் தடையிருக்காது.

நியோ ரியலிசமும் அழகியல் யதார்த்தமும் தான் வாழ்வென்று நினைத்து கொண்டிருப்பவர்களுக்கு இந்த அழுக்கு யதார்த்தம் (*Dirty Realism*) அதிர்ச்சியூட்டத்தான் செய்யும். இவ்வாறு அதிர்ச்சியடைபவர்கள், ஐந்து தொழிலாளர்களையும் சிறுவனையும் கைது செய்த பொலிஸ் காரர்களைப் போலவே இப் படத்திற்கும் ஒழுக்கம் மற்றும் அறநெறியினால் விலங்கிடவும் கூடும்.

இப்படம் அந்த விலங்குகளை எல்லாம் உடைக்கும் தன்மை பெற்றது. ஆகவேதான் மிகப்பிரமாண்டமான படங்களின் வசூலை இந்த எளிமையான படம் உடைத்திருக்கிறது. மிகச் சிறந்த ஐரோப்பியப்படம் எனும் மதிப்பையும் விமர்சகர்களிடமிருந்து இப்படம் பெற்றதற்கான காரணமும், இந்த வகை விடுதலைத் தன்மை இப்படத்தில் இடம் பெற்றிருப்பதால் தான்.

*The Full Monty* இன்னொரு வகை தொழிலாளி வர்க்க சினிமாவுக்கான உதாரணம்.


அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

உங்கள் வியாபார நிலையங்களுக்கு கலர் Visiting Cards மிக குறைந்த விலையில்

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris - Tel & Fax: 01 42 09 60 64

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 Rue Labat, 75018 Paris

M°: Marcadet Poissonniers

குறைந்த விலையில் உங்கள் அனைத்து கணினித் தேவைகளுக்கும்....

VPI Multimedia

Conseil et Service

Tel: 0160790607 / 0660404351

## மேற்கு லண்டன் மாநகரில்

# துவாரகா

## Cash & Carry

இல்லை என்பது இங்கில்லை

N°: 199, The BROADWAY, Southall, Middx.

**T.P: 0181 / 813 9126**



**உலகத் தமிழர் விளையாட்டுக் கழகத்தினரால்**

## செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு

# நிலைய நிதிக்காக

ஒழுங்கு செய்யப்படும்.

**மாபெரும் துடுப்பெடுத்தாட்ட, உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி-1998**

இடம்: **Warren Farm Sports Centre**
**Windmill Lane, Southall, Middx**

காலம்: 11.07.98 சனிக்கிழமை

நேரம்: காலை 8.30 மணி முதல்
மாலை 7.30 மணி வரை

துடுப்பெடுத்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளும் அத்துடன் 40 வயதிற்கு மேற்பட்டோர் துடுப்பெடுத்தாட்டப் போட்டியும், 15, 12, 10 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியும், 16 வயதுக்குட்பட்டோர் வலைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெற உள்ளன.

**(லண்டனில் கழகங்களுக்காக நடைபெறும் ஒரேயொரு போட்டி இதுவாகும்)**

**சுவையான, வகைவகையான, தரமான தமிழ் உணவு வகைகள் மைதானத்தில் விற்பனை செய்யப்படும்.**

**போட்டி அனுமதிப்பத்திர முடிவுத் திகதி: 30.06.1998**

மேலதிகத் தொடர்புகளுக்கு:
S.சிவதில்லைநாதன் – 0181–575 6104
Dr. M. தெய்வேந்திரா – 0181–366 5137
R.T.N. தயாளன் – 0956 494 798

அனுமதி: 2 பவுண்கள்
வாகனத் தரிப்பிடம்: 3 பவுண்கள்



**உங்கள்**

- ★ பிறந்தநாள் வாழ்த்துக்கள்
- ★ திருமணவைபவ அறிவிப்புக்கள்
- ★ வர்த்தக விளம்பரங்கள்
- ★ பொது விழாக்கள்
- ★ மரண அறிவித்தல்கள்

**உலகம் பூராவும் சென்றடைய**

ஈழமுரசு பிரித்தானியா
Eelamurasu Weekly
விளம்பர சேவை

உங்கள் விளம்பரங்களை தரமான வடிவமைப்புடன் பிரசுரிக்க நீங்கள் நாடவேண்டியது

ஈழமுரசு
Eelamurasu Weekly
**விளம்பர சேவை**

**பிரித்தானியத் தொடர்புகளுக்கு:**

குணம் - *Tel: 09 56 27 77 18*
ஜெயந்தன் - *09 56 90 81 45*



ஆரம்பமாகிவிட்டது

பிரித்தானியாவில்

# GNANAM
# Telecom Centers




| | | | |
|---|---|---|---|
| சிறீலங்கா | – 0.39p | லண்டன் | – 0.04p |
| இந்தியா | – 0.32p | லண்டன் Mobile | – 0.15p |
| கனடா | – 0.5p | அவுஸ்திரேலியா | – 8p |
| அமெரிக்கா | – 5p | சிங்கப்பூர் | – 0.20p |
| ஜேர்மனி | – 6p | சுவிற்சர்லாந்து | – 0.08p |
| பிரான்ஸ் | – 6p | | |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## GNANAM Telecom Centers

180 High Street North
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844
Fax: 0181-4708777

# மாவீரர் விளையாட்டுப் போட்டிகள்

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினால் ஆறாவது வருடமாக நடாத்தப்படும் மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளின் மத்திய மாநிலம்-2 மெய்வல்லுனர் போட்டிகளும், மத்திய மாநில உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதுவரை தென்மாநிலம், வட மாநிலம் ஆகிய இரு மாநிலங்களின் உதைபந்தாட்டத் தெரிவுப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. மத்திய மாநில உதைபந்தாட்டத் தெரிவுப் போட்டிகள் 04.07.98 சனியன்று டோட்முன்ட் Mendenssport Platz விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

மேற்படி மூன்று மாநிலத் தெரிவுப் போட்டிகளிலும் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் 11.07.98 சனியன்று டோட்முன்ட் நகரில் நடைபெறும் இறுதிப்போட்டியில் கலந்துகொள்ளும்.

மத்திய மாநிலம் -2 க்கான மெய்வல்லுனர் தெரிவுப்போட்டிகள் 05.07.98 ஞாயிற்றுக்கிழமை கேர்ண் Stadion im Sportplatz மைதானத்தில் நடைபெறவுள்ளன. மத்திய மாநிலத் தமிழாலயங்கள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன. ஏற்கனவே தென்மாநிலம், வடமாநிலம், மத்தியமாநிலம் -1 ஆகியவற்றில் மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

ஒவ்வொரு போட்டியிலும்தலா நான்கு பேர் வீதம், இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

நான்கு மாநிலங்களிலிருந்தும் தெரிவான போட்டியாளருக்கான இறுதிப்போட்டிகள், டோட்முன்ட் Stadion Rote Erde விளையாட்டு மைதானத்தில் 25.07.98 சனிக்கிழமை நடைபெறும்.

## விறுவிறுப்பாக நடைபெற்ற கால் பந்தாட்ட போட்டி

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினர் நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் தமிழாலயங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக இருந்தன.

12 வயதிற்குக் குறைவான தமிழாலய மாணவருக்கான உதைபந்தாட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்ற முன்ஸ்ரர் தமிழாலயம், 12 வயதிற்கு மேற்பட்ட தமிழாலய மாணவருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாவது இடத்தையும் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

டோட்முன்ட் மென்டஸ் போட் பிளட்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டி முடிவுகள் வருமாறு:

12 வயதிற்குட்பட்ட தமிழாலய மாணவர்களில் முதலிடத்தை முன்ஸ்ரர் தமிழாலயமும், இரண்டாமிடத்தை பிராங்பேட் தமிழாலயமும், மூன்றாமிடத்தை விழூப்பற்றால் தமிழாலயமும் பெற்றுக்கொண்டன.

12 வயதிற்கு மேற்பட்ட தமிழாலயமாணவர்களில் சுட்காட் தமிழாலயமும், டியூஸ்பேர்க் தமிழாலயமும் இறுதிப் போட்டிக்குத் தெரிவானதுடன், மூன்றாமிடத்தை முன்ஸ்ரர் தமிழாலயம் பெற்றுக்கொண்டது.

- வீ. ஆர். வரதராஜா


## பிரான்ஸ் வாழ் சகல வியாபாரிகளுக்கும் ஓர் அழைப்பிதழ்

எதிர்வரும் 01.07.1998 புதன்கிழமை மாலை 8.00 மணிக்கு நடக்கவிருக்கும் 'பாரிஸ் இந்திய இலங்கை வர்த்தகர்கள் சங்கம்' கூட்டத்திற்கு வருகை தந்து சகல வர்த்தகர்களினது பிரச்சினைகளையும் கலந்து ஆலோசிக்க உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

**கூட்டம் நடைபெறும் இடம்:**
தமிழ்ச்சோலை மண்டபம்
26, Rue du departement, 75018 Paris.
**Métro:** Porte de la Chapelle
தொடர்புகளுக்கு: 0140376363 / 0142093150 / 0142058899


## புகலிட நிகழ்வுகள்


வன்னிப் போர்க்கள நேரடி ஒளிப்பதிவுக் காட்சிகள்....
**சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமரான**
## 'ஜெயசிக்குறுய்'

- ★ போர்க்களத்தில் விக்டர் கவச எதிர்ப்புப் படையணி டாங்கிகளை அடித்து நொருக்கும் காட்சிகள்...
- ★ கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் போர்க்கள வியூகம்
- ★ தளபதிகள் கருணா, தீபன், பானு, விதுஷா, துர்க்கா உட்பட போர் முனைத் தளபதிகளின் போர்க்கள அனுபவங்கள்...
- ★ தாண்டிக்குளம். பெரியமடு முதல் மன்னகுளம் வரையிலான வலிந்து தாக்குதல்கள், முறியடிப்புத் தாக்குதல்கள், பாதுகாப்புத் தாக்குதல்கள் குறித்த களமுனைக் காட்சிகள்...
- ★ புளியங்குளத்தின் பங்கர் சண்டைகள் மற்றும் பல்வேறு படையணிகளின் போர்க்களச் செயற்பாடுகள்... மற்றும் பல நிகழ்வுகளுடன் கூடிய விபரணம்...

**04.07.98 சனி மாலை 6.00 மணி**
***Volkshaus. Stauffacherstr. 60, Zurich.***

முன்னர் திரையிடப்பட்டபோது பார்க்கத் தவறியவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்...

**தேசத்தின் புயல்கள்**

ஐ.நா.வை நோக்கிய மாபெரும் பேரணியில் அணிதிரளத் தயாராவோம்.
10.08.98 திங்கள் அன்று ஜெனிவா நகரில் தமிழீழக் குரலை ஓங்கி ஒலிப்போம்!!!


# மரண அறிவித்தல்


காத்தான் குளம், அடம்பன் தமிழீழம் என்ற முகவரியைச் சேர்ந்த கானான் சபையின் வணக்கத்திற்குரிய மதகுரு அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் கடந்த 04.06.98 அன்று சிறீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சில் அகால மரணமடைந்துள்ளார் என்பதை மிகுந்த வேதனையுடன் அறியத் தருகின்றோம்.

இவர் அற்புதம் அவர்களின் துணைவரும், லிசா, லதா, சுபா ஆகியோரின் தந்தையாருமாவார். அன்னாரின் மரணச் செய்தி அறிந்து, நேரடியாகவும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்து எமது துயரில் பங்கெடுத்துக்கொண்டவர்களுக்கும் இத்தால் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திப்பதுடன், இவருடன் மரணித்த வணக்கத்திற்குரிய மதகுரு டொமினிக் அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புக்குரியவரே !
மானிட சேவையே
பணியென்று வாழ்ந்தவரே !
மரணம் உங்களை
எப்படி அழைத்தது...?

அன்புக்குரியவரே !
எங்கள் நெஞ்சங்களில்
உங்கள் நினைவுகளை
மரணத்தாலும்
அழித்துவிட முடியாது !



வணக்கத்திற்குரிய மதகுரு
**அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை**
(காத்தான்குளம், அடம்பன், தமிழீழம்)
**அந்நியர் அழிப்பில்: 04.06.1998**

*தகவல்: சகோதரர்கள்*
அந்தோனிப்பிள்ளை றொபேட் - பிரான்ஸ்
அந்தோனிப்பிள்ளை மதுரநாயகம் - ஜேர்மனி

### திரு.பொ.கருணாஹரமூர்த்தி புகலிட இலக்கிய எழுத்தாளர் அவர்களின்

### 'ஒரு அகதி உருவாகும் நேரம்' (குறுநாவல் தொகுதி), 'கிழக்கு நோக்கி சில மேகங்கள்' (சிறுகதைத் தொகுதி)

# நூல்களின் வெளியீட்டு விழா

மேற்படி விழாவானது கடந்த 25.06.98 அன்று வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு பேர்லினில் உள்ள அருங்காட்சியகத்திலுள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் விருந்தினர்கள் எனவும் நூல் விமர்சகர்கள் எனவும் பலர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

இவ்விழாவை இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளர் திரு.அப்துல்லா அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்கள்.

இதில் உரையாற்றிய திரு. வை.நாராயணசாமி அவர்கள் (அனைத்திந்திய எழுத்தாளர் சங்கத்தலைவர்) தான் ஈழத்தமிழர் நலன்புரிக்கழகம் நடாத்திய தந்தை செல்வநாயகத்தின் நூற்றாண்டு விழாவிற்கு வந்ததாகவும், திரு.பொ.கருணாஹரமூர்த்தியின் சார்பான அழைப்பினால் இவ்விழாவில் கலந்து கொள்வதாகவும் கூறினார்.

எனது பேச்சு மேடையில் இருந்து இறங்கியவுடன் மறைந்து விடும், ஆனால் ஒரு எழுத்தாளனின் கருத்துக்கள் என்றும் வாழும் என்றார். தமிழ் கதைகளில் ஆங்கிலம் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென தனது நண்பர் ஒருவர் தன்னிடம் கூறியதாகத் தெரிவித்த திரு.வை. நாராயணசாமி; அதற்குப் பதிலளிக்கையில், சிறுகதைகளுக்கு ஆங்கிலச் சொற்களைப் பாவிப்பதன் மூலம் அச்சிறுகதைகளின் உணர்வுகள் அதிகமாகும் எனவும் கூறினார். இதன்பின்பு திரு. வை.நாராயணசாமி, திரு.பொ. கருணாஹரமூர்த்தி அவர்களை 'வாழ்க வென வாழ்த்தி' பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

திரு.ந.சுசீந்திரன் பேசுகின்ற பொழுது, உலகத்திலே தகவல்களும் செய்திகளும் நிறைந்திருக்கின்றன. அவற்றை வரலாற்றுப் பதிவாக்க வேண்டும். மண்டபத்தில் வந்திருக்கும் நீங்களும் எதிர்காலத்தில் சிறுகதைகள், வரலாற்று நூல்களை வெளியிட வேண்டும் எனவும் கூறிய அவர், எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களது வெளியீடு எத்தரத்தில் இருந்தாலும் அவற்றை நாம் வாங்கிச் சேகரிக்க வேண்டும். அவை வரலாற்றுப் பதிவுகள் எனவும் கூறினார்.

திருமதி ஜசிந்தா தம்பிப்பிள்ளை பேசுகின்ற பொழுது, இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்கின்ற துன்ப துயரங்கள் எதிர்காலச் சிந்தனைகள் போன்றன காலத்தால் அழியாதது. இலக்கியம் என்பது காலம், இடம், பொருள் போன்றவற்றை அடக்கியுள்ளதெனவும் கூறி திரு.பொ.கருணாகரமூர்த்தி அவர்களை வாழ்த்தி தன்து உரையை முடித்துக் கொண்டார்.

கவிஞர் எழிலன் அவர்கள் தனது உரையின்போது, பலர் திரு.பொ.கருணாஹரமூர்த்தி அவர்களின் நூல்களைப் பற்றி பலவற்றை விமர்சனம் செய்தார்கள். ஆனால் ஈழத்தமிழர்களின் போராட்டம் பற்றி எதையும் சுட்டிக்காட்டவில்லை. அந்தச் சந்தர்ப்பம் தனக்கு கிடைத்துள்ளதெனக் கூறி உரையை ஆரம்பித்தார், அவர் தொடர்ந்து பேசுகையில் ஈழத் தமிழர்களின் போராட்டம் பற்றி எதுவும் குறிப்பிடாதது மிகவும் கவலைக்குரிய விடயம் என்றார்.

இதுபற்றி, 'கிழக்கு நோக்கி சில மேகங்கள்' என்ற திரு.பொ. கருணாஹரமூர்த்தியின் சிறுகதை தொகுதிக்கு மதிப்புரை வழங்கிய இன்குலாப் அவர்களும் சுட்டிக்காட்டியதாகவும் கூறினார்.

கவிஞர் எழிலன் மேலும் பேசுகையில் எழுத்தாளர் திரு.பொ. கருணாஹரமூர்த்தியின் தொகுப்பில் போலி, ஆன்மீகம், பண்பாடுகள் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளன எனவும் புராணங்களைத் திருப்பிச் சொல்லுதல், பைபிளில் உள்ளவற்றை திருப்பிச்சொல்லுதல், மதங்களை மாற்றுதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டுமெனவும், மதவாதிகள் தனது வீட்டிற்கு வரும்போது யானைக்குப் பிடிக்க வேண்டியது உங்களுக்குப் பிடித்திருக்கிறது மதத்தை விட்டு மனிதனாக வீட்டிற்கு வாருங்கள் எனக் கூறுவதாகவும் கூறினார். கவிஞர் எழிலன் அவர்கள் வாழ்த்து மடல் ஒன்றை வழங்கினார்.

தமிழால் உயர்ந்தீர்

கடல் கடந்து வாழ்ந்தாலும் கடமையை மறக்கவில்லை.

வெளிநாட்டின் பொய்மையிலை உணர்ந்து நிற்பார் என்ற வாக்கியங்களுடன் அது தொடங்கியது.

அடுத்து டென்மார்க்கைச் சேர்ந்த திரு.கி.செ.துரை அவர்கள் விமர்சனம் செய்கையில், தான் அதிகம் பேசுவதற்கு ஆயுத்தமாக இருந்த போதிலும் தனக்கு பேசக்கிடைத்த நேரம் இரண்டு நிமிடங்களே. இதைக் கூட ஒரு அகதி உருவாகும் நேரமென கூறலாமென தனது உரையை மிகவும் நகைச்சுவையாக ஆரம்பித்தார்.

'கம்பராமாயணம் வெளியிடப்பட்ட போது அது கம்பர் நாள். இன்று இது கருணாஹரமூர்த்தியின் நாள்' என்ற குறிப்பிட்டார். ஈழத்துப் போராட்டங்களை சுட்டிக்காட்டாதது மிகவும் கவலைக்குரிய விடயம் என்றார். விமர்சனம் என்பது ஒரு கோடாரி போன்றது அதனால் மரத்தைச் செதுக்கி அழகான உருவங்களையும் அமைக்கலாம். அதேவேளை சில விமர்சனங்கள் மரத்தை வேரோடு தறிக்கின்ற பெரிய கோடரி போல் ஆகிவிடும் எனவும் கூறி தனது கருத்தை தெளிவாக வைத்தார்.

திரு.வெ.செ.குணரத்தினம் அவர்கள் பேசுகையில், நாம் ஓர் அகதி உருவாகும் நேரம் பற்றிய நூலை விமர்சனம் செய்கின்றவேளை அகதிகள் திரும்பிச் செல்லும் வேளையாக இருக்கின்றது எனவும், தற்பொழுது அகதிகளுக்கு எதிரான சட்டம் ஜேர்மனியில் இன்று உருவாக்கப்பட்டு விட்டதெனவும் கூறினார்.

புகலிட எழுத்தாளர் பொ. கருணாஹரமூர்த்தி அவர்கள் பேசுகையில், சில விமர்சனங்களுக்கெதிராக தனது கருத்தை வைத்தார். தனக்கு பேசும் நேரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதெனவும், ஒரு எழுத்தாளர் அதிகம் பேசக்கூடாதெனவும், மூன்றாவது தலைமுறையினர் இதை வாசிக்க வேண்டுமெனக்கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

ஈற்றில் நோர்வேயிலிருந்து வருகைதந்திருந்த திருமதி குணபோசனி நாகராஜா (மல்லிகா) அவர்களின் இன்னிசை விருந்து மண்டபத்தில் குழுமியிருந்த மக்களை மிகவும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கவைத்தது. பழைய தரமான பாடல்களையும், விடுதலைப் பாடல்களையும் அவர் பாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

*தகவல் – யோ.சிறிஸ்கந்தராசா*
*பேர்லின்.*





**கவிஸ் சொலத்தூன் நலன்புரிச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பரத நாட்டிய எழுச்சி நடனப் போட்டிகளில் சுக் பாரதி கல்வி நிலைய மாணவிகள்**


**தமிழ் மாணவர் அமைப்பு - ஜேர்மன் கிளை நடாத்தும்**

## மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி - 1998

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினரால் ஆறாவது வருடமாக நடாத்தப்படும் மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிகளின் மத்திய மாநிலம் II மெய்வல்லுனர் போட்டிகளும், மத்திய மாநில உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.
போட்டிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு:

**உதைபந்தாட்ட தெரிவுப் போட்டிகள்:**
*04.07.98 சனி*
Mendenssport Platz
Freden Baum
44147 Dortmund

மத்திய மாநிலம் II **மெய்வல்லுனர் போட்டிகள்:**
*05.07.98 ஞாயிறு*
Stadion im Sportplatz
Am Sport Park - 20
44652 Herne

போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களையும் வீராங்கனைகளையும் உற்சாகப்படுத்த பார்வையாளர்களை தமிழ்மாணவர் அமைப்பினர் அன்புடன் அழைக்கின்றனர்.
தமிழ் மாணவர் அமைப்பு - ஜேர்மன்கிளை



**பாசல் மாநகரில் தமிழ் மக்களின் ஆதரவுடன்**
**கலாநிகேதன் நாட்டியாலயமும்**
**சங்கமம் இசைக் குழுவும்**
**இணைந்து வழங்கும்**

## கலை நிகழ்வு

**விழா நிகழ்ச்சிகள்**
- ★ மங்கல விளக்கேற்றல்
- ★ இன்னிசையும் புயலிசையும் (சங்கமம் இசைக்குழு)
- ★ நாட்டிய நாடகம் (கலாநிகேதன் நாட்டியாலயம்)
- ★ தாய்மண்ணே தனி இன்பம் (நாடகம்)
- ★ தமிழில் நேர்காணல் (15 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான நிகழ்ச்சி)

*05.07.98 ஞாயிறு 15.30 மணி*
Stadt Casion (Barfusserplatz) Bs

வரும்வழி: பாசல் புகையிரத நிலையத்திலிருந்து Schifflande நோக்கிச் செல்லும் 1-ம் இலக்க திறாம் எடுத்து 3-வது தரிப்பிடமான Barfusserplatz, இல் இறங்கவும்.

பாசல் வாழ் தமிழ் மக்களும் கலைஞர்களும் இணைந்து வழங்கும் இந் நிகழ்வு மூலம் பெறப்படும் நிதி யாவும் தாயகத்தில் அல்லலுறும் எம் இன மக்களின் துயர்துடைக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்கப்படும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

- பகிர்வோம் பாதுகாப்போம் -

# சர்வதேச இந்து

## 27–28 ஜூன் 98 – பாரீஸ்

சர்வதேச அளவில் இந்துக்களும் - இந்து மதமும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கும் இந்துக்களுக்கும் இந்து மதத்திற்கும் ஏற்படும் ஆபத்தை தடுப்பதற்குமாக கடந்த 27-28.06.98 சனி - ஞாயிற்றுக் கிழமைகளில் பாரிசிலுள்ள 'UNESCO மண்டபத்தில் சர்வ தேச இந்து ஒருமைப்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது.

சர்வதேச அளவில் நடந்த இந்த முதல் இந்து மாநாட்டை 27.06.98 சனிக்கிழமை காலை 9.30-க்கு பிரான்சுக்கான நேபாளத் தூதுவர் கௌரவ இந்திரபாகதூர் சிங் அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.




டாக்டர் அவ்வை நடராஜன் (தமிழ்நாடு), டாக்டர் பொள்ளாச்சி மகாலிங்கம் (தமிழ்நாடு), அருட்திரு சாந்தலிங்க இராமசுவாமி அடிகள் (தமிழ்நாடு), டாக்டர் ரவீந்தர் குமார் சேட் (டில்லி), டாக்டர் வி.இரத்தின சபாபதி (தமிழ்நாடு), திரு. மதி வசந்தா நடராஜன் (கனடா), திருமதி சாரதா நம்பியாரூரன் (தமிழ்நாடு), திரு.வீரபத்திரன் ( தென்னாபிரிக்கா,), சுவாமி ரித மோகானந்தா (பிரான்ஸ்), திரு.சிவசண்முகம் (பிரான்ஸ்), திரு.காராளபிள்ளை (பிரான்ஸ்), திரு. அருள்மொழி பாரி (மலேசியா), சுவாமி பிரணவானந்தா (மொறிசியஸ்), திரு.சண்முகலிங்கம் (அமெரிக்கா) பேராசிரியர் இலகுப்பிள்ளை (கனடா), டாக்டர் விக்னேசன் (பிரான்ஸ்), உட்பட பலர் கலந்துகொண்டனர்.



மாநாட்டின் முதல் நாள் நிகழ்வாக பேராளர்களுடைய சுருக்கமான அறிமுக உரை இடம்பெற்றது.

டாக்டர் அவ்வை நடராஜன் இவ் அமர்வை வழிநடத்தி ஆங்கிலத்தில் பேசியவர்களின் உரையை தமிழிலும், தமிழில் பேசியவர்களின் உரையை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தும் வழங்கினார்.


இம்மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்நாட்டு பிரதிநிதிகள் இந்து மதத்தின் தொன்மை பற்றியும் குறிப்பாக சைவ சமயத்தின் தொன்மை பற்றியும் தமிழர் வாழ்வில் மதம் வகித்த பங்கு பற்றியும் சுருக்கமாக எடுத்துக் கூறினார். சிலர் தமிழில் வழிபாடு, பூசைக்குரிய மந்திரங்களை தமிழில் சொல்வது பற்றியும் கருத்துக்களை முன்வைத்தனர்.



தென்னாபிரிக்க பிரதிநிதி திரு.வீரபத்திரன் மலேசிய பிரதிநிதி அருள்மொழிபாரி, பிரெஞ்சுப் பிரதிநிதி திரு. காராளபிள்ளை உள்ளிட்ட பலர் சிறீலங்கா அரசால், இந்துக் கோவில்களுக்கும் இந்துமதத்துக்கும் ஏற்பட்டிருக்கும் அழிவுகள் அச்சுறுத்தல்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

பாரதிய ஜனதா கட்சி பிரதிநிதி திரு. கௌடா இந்துக்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டும் என்றும் - ஒரு இந்துவுக்கு ஆபத்து ஏற்படும் போது மற்ற இந்துவுக்கு துடிப்பு ஏற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.


விஸ்ப ஹிந்து பரிக்ஷின் பிரதிநிதி திரு. உபாத்தியாய- மலர்கள் பலவாக இருக்கலாம் - விண் மீன்கள் பலவாக இருக்கலாம். இந்துக்கள் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்றும், அவர்கள் தங்கள் வேர்களைப் பலப்படுத்த வேண்டும்' என்றும் - இந்துக்களி



டையே ஒற்றுமை ஏற்படுமானால் - ஒரு இந்துவின் மீதும் அந்நியன் எவரும் கைவைக்க முடியாது என்றும் கூறினார்.

கனடா பிரதிநிதி வசந்தா நடராஜன் புலம் பெயர்ந்த இந்துக் குழந்தைகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், இரண்டு கலாச்சாரச் சூழ் நிலையின் கீழ் வாழும் அவர்களுக்கு இந்துக் கலாச்சாரத்தைப் போதிக்கும் வழிமுறைகள் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



# ஒருமைப்பாட்டு மாநாடு

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தமிழகத்தின் பிரபல தொழிலதிபர் திரு.பொள்ளாச்சி மகாலிங்கத்தின் உரையுடன் ஆரம்பித்தன. சென்னை இராமலிங்க இல்லத்தின் தலைவரான அவர் வள்ளலார் - திருமூலர் தத்துவங்கள் பற்றியும் தமிழ் இறையியல் பற்றியும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற ஆய்வரங்கில் பல்வேறு பேராளர்களும் தாங்கள் மாநாட்டுக்கு சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகள் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் இரவீந்தர் குமார் சேட் அவர்கள், சைவ சித்தாந்தம்- திருமந்திரம் வள்ளலாரின் அருட்பா பற்றியும் தமிழிலுள்ள அரிய தத்துவப் புதையல்களை இந்திக்கு மொழி மாற்றுவது பற்றியும் கருத்துக் கூறினார்.

பேராசிரியர் இரத்தினசபாபதி அவர்கள் தமிழில் மந்திரங்களைச் சொல்வதற்கு தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றியும் - சைவ சித்தாந்தத்தின் மேன்மை பற்றியும் -முன்பு தமிழக ஆலயங்களில் எங்காவது ஒரு சில ஆலயங்களில் மட்டும்- இங்கு தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று எழுதி வைத்திருப்பது வழக்கமாக இருந்ததென்றும், ஆனால் தற்போது எல்லா ஆலயங்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று எழுதி வைக்கப்பட்டிருப்பதோடு, அதன் கீழேயே வடமொழியிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். இந்து சமயத்தைப் பாதுகாக்க இவ்வாறான ஒரு அமைப்பு அவசியமென்பதை அவர் வலியுறுத்தினார்.

அடுத்து பேசிய அனைவரும் இந்து மதத்தின் பெருமை, அதை பாதுகாக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் புலம் பெயர்ந்த நாடுகளில் இந்து மதத்தை காப்பாற்றுவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்பன பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

மாலையில் இறுதி நிகழ்வாக முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, அடுத்த மாநாட்டை இந்தியாவிலுள்ள வர்னாசியில் அல்லது தென்னாபிரிக்காவில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.



நேபாளத்தூதுவர் குத்துவிளக்கு ஏற்றுகிறார்


## இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்

(1) உலகெங்கும் பரவிவாழும் இந்துக்களின் கலாச்சார ஆன்மீக வாழ்வை பலப்படுத்தும் விதத்தில் ஒருமைப்பாடுடன் செயற்படுவது,

(2) சிறீலங்காவில் இந்துக்கள் மீதும், இந்து ஆலயங்கள் மீதும் சிறீலங்கா அரச படைகளால் நடாத்தப்படும் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன், சிறீலங்கா அரசு, உடனடியாக இந்துக்கள் மீதும், இந்து ஆலயங்கள் மீதும் தாக்குதல் நடாத்துவதை நிறுத்த வேண்டும் எனக் கோரியது,

(3) காஸ்மீரில் இடம்பெயர்ந்த இந்துக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் .எனக் கோரிவது,

(4) உலகெங்குமுள்ள இந்து ஆலயங்களை 'UNESCO' பாதுகாக்க வேண்டும் எனக் கோருவதுடன் சிறீலங்காவிலுள்ள 5 ஈஸ்வரங்களையும் (திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், ஐந்தாவது ஈஸ்வரம் அழிக்கப்பட்டு விட்டது.) ஆப்கானிஸ்தானிலுள்ள இந்து ஆலயத்தையும் புனிதப் பிரதேசமாக்க வேண்டும்.



டாக்டர் பொள்ளாச்சி மகாலிங்கம் உரையாற்றுகையில்



டாக்டர் இரத்தினசபாபதி உரையாற்றுகையில்



ஹர்தாஸ் (விஸ்வஹிந்து பரீக்ஷித்)



டாக்டர் ரவீந்தர்குமார் சேட் (டெல்லி)



வசந்தா நடராஜன் (கனடா)



டாக்டர் சாரதா நம்பிஆரூரன் (சென்னை)



வீரபத்திரன் (தென்னாபிரிக்கா)



அருண்மொழி பாரியார் (மலேசியா)



காராளபிள்ளை (பிரான்ஸ்)

# சம்மேளனக் கிண்ணத்தை பாடும்மீன் வெற்றிகொண்டது

ஈழத் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 21.06.98 ஸ்ரான் மைதானத்தில் நடைபெற்றது. பத்துக் கழகங்களைச் சேர்ந்த 11 அணிகள் இப்போடியில் பங்கெடுத்துக் கொண்டன.

முதல் சுற்றின் இறுதியில், மன்னார் எவர் கிறீன், பாடும் மீன் விளையாட்டுக் கழக மஞ்சள் அணி, சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம், பாடும் மீன் விளையாட்டுக் கழக சிவப்பு அணி ஆகியன அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் மன்னார் எவர் கிறீனும், பாடும் மீன் மஞ்சள் அணியும் மோதின. இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. எவருமே கோல்கள் போடமுடியாமல் திணறினார்கள். முடிவில் 0:0 என்ற கோல் கணக்கில் சம நிலையில் ஆட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வழங்கப்பட்ட தண்டனை உதையில் மன்னார் எவர் கிறீன் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் பாடும் மீன் விளையாடடுக் கழக சிவப்பு அணியும் மோதின. இப்போடியும் மிகுந்த உற்சாகத்துடனும் ஆவேசத்துடனும் நடைபெற்றது. பாடும் மீன் சார்பில் எமில் ஒரு கோல் போட்டதைத் தொடர்ந்து ஆட்டம் இன்னும் சூடேறியது. இடையிடையே விளையாட்டு

பாடும் மீன் சிவப்பு அணி





மன்னார் எவர் கிறீன் அணி

வீரர்கள் நடுவரின் கண்டனத்துக்கு ஆளானார்கள்.

இடைவேளைக்குப் பின்பு சென் அன்ரனிஸ் சார்பில் றோய் ஒரு கோல் போட்டதைத் தொடர்ந்து ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது. வழங்கப்பட்ட தண்டனை உதையில் பாடும் மீன் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

மன்னார் எவர் கிறீன், பாடும்மீன் சிவப்பு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில், பாடும் மீன் 3-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. இவ் அணியின் சார்பில் கியூமன் 2 கோல்களையும், எமில் 1 கோலையும் போட்டனர்.

சிறந்த விளையாட்டு வீரர்களாக மன்னார் எவர் கிறீனைச் சேர்ந்த மகேந்திரன் சிறீயும், சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எல்ப்பியாசும் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதியாட்ட சிறப்பு வீரனாக பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நெல்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு. கே.ஜே. பாக்கியராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கழகங்கள், வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார்.

நடைபெற்ற போட்டிகள் அனைத்திற்கும் திரு. மணி, திரு. கிறேஷியன், திரு. கொன்சாலஸ், திரு. இந்திரன் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள்.

கழகங்கள், விளையாட்டு வீரர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:

'கூடி விளையாடு பாப்பா, ஒரு குழந்தையை **வையாதே** பாப்பா" என்று பாரதியார் பாடியது போல நாம் ஒருவரை ஒருவர் நேசித்து அன்போடு விளையாட வேண்டுமே தவிர, சண்டை சச்சரவுகளில் ஈடுபடக்கூடாது.

ஒரு விளையாட்டுச் சம்மேளனத்தை உருவாக்கி அதை சரிவரக் கொண்டு நடத்துவது இலகுவான ஒன்றல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மைதானத்தில் நடுவரின் **தீர்ப்பே** இறுதியானதும் முடிவானதுமாகும். அவருடைய முடிவுக்கு கட்டுப்பட வேண்டியது ஒவ்வொரு விளையாட்டு வீரரது தலையாய கடமையாகும். எம்மிடையே நடுவர்கள் பற்றாக்குறை இருப்பது உண்மைதான். இக்குறையை நீக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். பார்வையாளர்கள் மைதானத்துக்குள் பிரவேசிப்பது, கோபப்பட்டு கோஷமிடுவது - இவைகள் நாகரிகமான செயல் அல்ல. ஒழுக்க சீலர்களாக வளர வேண்டும் என்பதே விளையாட்டின் குறிக்கோளாகும். அந்த எண்ணத்தை நெஞ்சில் கொண்டு இனிவரும் காலங்களில் நீங்கள், நல்லவர்களாக, வல்லவர்களாக, அதிசிறந்த விளையாட்டு வீரர்களாக வளர வேண்டும்; மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும்.

— யோகி நூசைப்பிள்ளை

# உலகக் கிண்ணம்

## கால் இறுதிக்கான இரண்டாம் சுற்று



முதல் சுற்றில் 16 நாடுகள் தகுதியடைந்தும் 16 நாடுகள் தகுதியிழந்தும் உள்ளன. தகுதியடைந்த 16 நாடுகளும் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட அட்டவணைக்கு அமைய ஒரு போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் நாடுகள் கால் இறுதிக்கு செல்கின்றன. இதனடிப்படையில்,

27.06.98 அன்று இத்தாலியும் நோர்வேயும் மோதிக்கொண்டு இத்தாலி 1:0 என்று மயிரிழையில் வெற்றிகொண்டது. பிரிவுப் போட்டி ஒன்றில் பிரேசிலை தோற்கடித்த நோர்வே, இத்தாலியையும் தோற்கடிக்கும் முகமாக பலத்த பிரயத்தனம் செய்தபோதும் பலன் கிடைக்கவில்லை. அதேநாள் நடைபெற்ற மற்றொரு போட்டியில் பிரேசில் சிலியை மிக இலகுவாக 4:1 என்று தோற்கடித்தது. அ பிரிவுப் போட்டியொன்றில் நோர்வேயிடம் தோல்விகண்ட பிரேசில் தோல்வியையிட்டு தளராது பலமாகவே இருப்பதாக இம் முடிவு காட்டுகிறது.

28.06.98 அன்று நடைபெற்ற போட்டி ஒன்றில் பிரான்ஸ், பரகுவே அணியை கடும் முயற்சியின் பின், மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட நேரத்தில் அதாவது 113வது நிமிடத்தில் லோறன் புளோங் போட்ட கோல் மூலம் 1:0 என்று வெற்றிகொண்டது. இதே தினம் டென்மார்க் ஆபிரிக்காவின் புதிய உலக சம்பியனாக அடையாளம் காட்ட முயன்ற நைஜீரியாவை மிக இலகுவாக 4:1 என்று வெற்றிகொண்டது.

29.06.98 அன்று நடைபெற்ற நெதர்லாந்து யூகோஸ்லாவியாவுக்கு இடையிலான போட்டியில் நெதர்லாந்து 2:1 என்ற கோல் கணக்கில் யூகோஸ்லாவியாவை வெற்றிகொண்டது. இன்னுமொரு போட்டியான ஜேர்மனி, மெச்சிக்கோவுக்கு இடையிலான போட்டியில் ஜேர்மனி மெச்சிக்கோவை 2:1 என்ற கணக்கில் வெற்றிகொண்டது.




# உலகக்கிண்ண உதைபந்தாட்ட செய்திகள்



32 நாடுகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற முதல்சுற்று போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா இரண்டு அணிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

23.06.98 அன்று A, B பிரிவிலுள்ள நாடுகள் தமக்கிடையிலான இறுதிப் போட்டியில் பங்கெடுத்துக்கொண்டன. பலரது எதிர்பார்ப்பை தன்னகத்தே கொண்ட உலக சம்பியன் பிரேசில் நோர்வேயிடம் 1:2 என்ற நிலையில் தோல்வி கண்டது. இது பிரேசில் அணியின் தோல்வியா? இல்லை வேண்டுமென்றே மற்றைய நாடுகளுக்காக ஆடிய நாடகமா? என்பதை அடுத்துவரும் போட்டிகள்தான் தீர்மானிக்க வேண்டும். பிரேசில் அணியைப் பொறுத்தவரை இவ்வாட்டம் தேவையற்ற ஒன்று. தோல்வியா வெற்றியா எது ஏற்பட்டாலும் A பிரிவிலிருந்து முதலாவது ஸ்தானத்தை யாராலும் கைப்பற்ற முடியாது என்ற நிலையிலேயே இப்போட்டி நடைபெற்றது. இது போன்ற ஒரு சாணக்கியமான திருவிளையாடலை 1994ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியிலும் பிரேசில் நடத்தியிருந்தது. அதாவது அப்போது தனது பிரிவிலிருந்த ரஷ்யா, கமறூன் ஆகிய நாடுகளை முதல் இரு போட்டிகளிலும் வெற்றிகொண்டு சுவீடனுடன் நடைபெற்ற மூன்றாவது போட்டியை 1:1 என்று சமநிலையில் முடித்துக்கொண்டதை இவ்விடத்தில் தெட்டத்தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். இதே A பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் மொறோக்கோ அணி ஸ்கொட்லாந்தை 3:0 என்று சுலபமாக வெற்றி கொண்ட போதும் அடுத்த சுற்றுக்கு தெரிவுசெய்யப்படவில்லை.

ஆ பிரிவிலுள்ள இத்தாலி ஆஸ்திரியாவை 2:1 என்று வெற்றிகொண்டு தனது பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது. கமறூன், சிலி இரண்டுக்குமிடையிலான மற்றொரு போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை கண்டபோதும் புள்ளி அடிப்படையில் சிலி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.



24.06.98 அன்று C, D பிரிவுகளின் போட்டிகள் நடைபெற்றன. 16வது உலகக்கிண்ணத்தை நடத்திவரும் பெருமைக்குரிய பிரான்ஸ் டென்மார்கை 2:1 என்று வெற்றிகொண்டு, பிரிவுப் போட்டிகள் அனைத்தையும் வெற்றிகொண்ட முதலாவது நாடாகவும் C பிரிவின் தலைமை நாடாகவும் தன்னை வெளிக்காட்டியது. இப்போட்டியில் டென்மார்க் வெற்றி கொள்ளாவிடினும் அடுத்த சுற்றுக்கு தெரிவாகியிருந்தது. இப்பிரிவிலுள்ள மற்றொரு போட்டியான சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டியில் 2:2 என்ற முடிவு இரு அணிகளுக்குமே தகுதியை வழங்கவில்லை.

D பிரிவில் நைஜீரியா முதல் இடத்தை ஏற்கனவே பெற்றிருந்த போதும் பரகுவே அணியிடம் 1:3 என்று தோல்வியையே கண்டது. இத் தோல்வியால் நைஜீரியாவுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாவிடினும் இப் பிரிவில் இரண்டாம் இடத்தை நிரப்பும் போட்டியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. வெற்றிவாகை சூடிய பரகுவே இரண்டாம் இடம் பெற்றுக்கொள்வதை, அடுத்த போட்டியில் 6:1 என்ற கோல் கணக்கில் பல்கேரியாவை பெருவெற்றிகொண்ட ஸ்பானியாவால் தடுக்க முடியவில்லை.

25.06.98 அன்று E, F பிரிவுகளுக்கிடையேயான போட்டிகள் நடைபெற்றன. E பிரிவிலுள்ள இரு போட்டிகளும் சமநிலையை கண்ட போதும் நெதர்லாந்தும், மெக்சிக்கோவும் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின. முதல் இடத்தைப் பெற்றுக்கொள்ளும் போட்டியாக எதிர்பார்க்கப்பட்ட நெதர்லாந்து, மெக்சிக்கோ போட்டியில் முதலிலிருந்து நெதர்லாந்து இரு கோல்களைப் போட்டு முன்னணியில் இருந்தபோதும் மெக்சிக்கோவின் தளராத ஆட்டத்தின் பயனுக்கு ஆட்ட இறுதி நேரமான 90ஆவது நிமிடத்தில் கேர்டனஸ் இரண்டாவது முக்கியத்துவமான கோலை அடித்து ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டுவந்தார். புள்ளிகள் சமனாகக் காணப்பட கோல் அடிப்படையில் நெதர்லாந்தும், மெக்சிக்கோவும் முறையே முதலாம் இரண்டாம் இரட்டைப் பெற்றன. இன்னொரு போட்டியில் பெல்ஜியமும், தென்கொரியாவும் தலா ஒரு கோல் போட ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.



F பிரிவுப் போட்டியில் ஜேர்மனி ஈரானை 2:0 என்றும், யூகோஸ்லாவியா அமெரிக்காவை 1:0 என்றும் வெற்றி கொண்டு சமனான புள்ளிகளைப் பெற்றிருந்த போதும், கோல் அடிப்படையில் ஜேர்மனி முதலாம் இடத்தையும், யூகோஸ்லாவியா இரண்டாம் பெற்றுக்கொண்டன.

26.06.98 அன்று நடைபெற்ற பிரிவுகளுக்கிடையாலன இறுதிப் போட்டிகளில் G, H பிரிவுகளின் அணிகள் பங்குகொண்டன. G பிரிவிலுள்ள ருமேனியா, துனிசியா ஆகியவற்றிற்கிடையிலான போட்டி சமநிலையில் முடிவுற்ற போதும் புள்ளி அடிப்படையில் ருமேனியா பிரிவின் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது. மற்றைய போட்டி ஒன்றில் இங்கிலாந்து கொலம்பியாவை 2:0 என்று தோற்கடித்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

H பிரிவில் ஆர்ஜென்டீனாவும், குரோஷியாவும் தகுதி பெற்ற போதும் ; முதல் இரு இடங்களையும் தீர்மானிக்கும் போட்டியாக அமைந்த ஆர்ஜென்டீனா, குரோஷியா போட்டி மிக விறுவிறுப்பாக காணப்பட்ட போதும் ஆர்ஜென்டீனா ஒரு கோலைப் போட்டு முதல் ஸ்தானத்தை சுவீகரித்துக்கொண்டது. இன்னொரு போட்டியில் ஜமேய்க்கா ஜப்பானை 2:1 என்று வெற்றி கொண்டது.

இதுவரை நடைபெற்ற பிரிவுகளுக்குள் நடைபெற்ற போட்டியில் பிரான்சும், ஆர்ஜென்டீனாவும் அனைத்துப் போட்டிகளையும் வென்றன. ஆனால், ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக எந்த அணியும் கோல் போடவில்லை. அடுத்த சுற்றுக்குத் தெரிவான 16 நாடுகளையும் அட்டவணை மூலம் காணலாம். இனிவரும் போட்டிகள் 'நொக் அவுட்' முறையில் நடைபெறும்.

**– பொன் தாமோதரம்**

| நாடு | போட்டி | வெற்றி | சமநிலை | தோல்வி | போட்ட கோல்கள் | வாங்கிய கோல்கள் | புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|
| **பிரிவு A** | | | | | | | |
| பிரேசில் | 3 | 2 | 0 | 1 | 6 | 3 | 6 |
| நோர்வே | 3 | 1 | 2 | 0 | 5 | 4 | 5 |
| மொறோக்கோ | 3 | 1 | 1 | 1 | 5 | 5 | 4 |
| ஸ்கொட்லாந்து | 3 | 0 | 1 | 2 | 2 | 6 | 1 |
| **பிரிவு B** | | | | | | | |
| இத்தாலி | 3 | 2 | 1 | 0 | 7 | 3 | 7 |
| சிலி | 3 | 0 | 3 | 0 | 4 | 4 | 3 |
| ஆஸ்திரியா | 3 | 0 | 2 | 1 | 2 | 5 | 2 |
| கமறுன் | | | | | | | |
| **பிரிவு C** | | | | | | | |
| பிரான்ஸ் | 3 | 3 | 0 | 0 | 9 | 1 | 9 |
| டென்மார்க் | 3 | 1 | 1 | 1 | 3 | 3 | 4 |
| தென்னாபிரிக்கா | 3 | 0 | 2 | 1 | 3 | 6 | 2 |
| சவுதி அரேபியா | 3 | 0 | 1 | 2 | 2 | 7 | 1 |
| **பிரிவு D** | | | | | | | |
| நைஜீரியா | 3 | 2 | 0 | 1 | 5 | 5 | 6 |
| பரகுவே | 3 | 1 | 2 | 0 | 3 | 1 | 5 |
| ஸ்பானியா | 3 | 1 | 1 | 1 | 8 | 4 | 4 |
| பல்கேரியா | 3 | 0 | 1 | 2 | 1 | 7 | 1 |
| **பிரிவு E** | | | | | | | |
| நெதர்லார்ந்து | 3 | 1 | 2 | 0 | 7 | 2 | 5 |
| மெக்சிக்கோ | 3 | 1 | 2 | 0 | 7 | 5 | 5 |
| டெல்ஜியம் | 3 | 0 | 3 | 0 | 3 | 3 | 3 |
| தென்கொரியா | 3 | 0 | 1 | 2 | 2 | 9 | 1 |
| **பிரிவு F** | | | | | | | |
| ஜேர்மனி | 3 | 2 | 1 | 0 | 6 | 2 | 7 |
| யூகோஸ்லாவியா | 3 | 2 | 1 | 0 | 4 | 2 | 7 |
| ஈரான் | 3 | 1 | 0 | 2 | 2 | 4 | 3 |
| அமெரிக்கா | 3 | 0 | 0 | 3 | 1 | 5 | 0 |
| **பிரிவு G** | | | | | | | |
| ருமேனியா | 3 | 2 | 1 | 0 | 4 | 2 | 7 |
| இங்கிலாந்து | 3 | 2 | 0 | 1 | 5 | 2 | 6 |
| கொலம்பியா | 3 | 1 | 0 | 2 | 1 | 3 | 3 |
| துனேசியா | 3 | 0 | 1 | 2 | 1 | 4 | 1 |
| **பிரிவு A** | | | | | | | |
| ஆர்ஜென்டீனா | 3 | 3 | 0 | 0 | 7 | 0 | 9 |
| குரோசியா | 3 | 2 | 0 | 1 | 4 | 2 | 6 |
| ஜமேய்க்கா | 3 | 1 | 0 | 2 | 3 | 9 | 3 |
| ஜப்பான் | 3 | 0 | 0 | 3 | 1 | 4 | 0 |



## முதல் சுற்றில் ஏற்பட்ட முக்கிய முடிவுகள்

அனைத்துப் போட்டிகளிலும் வென்ற நாடுகள்: பிரான்ஸ், ஆர்ஜென்ரீனா
அனைத்துப் போட்டிகளிலும் தோற்ற நாடுகள்: அமெரிக்கா, ஜப்பான்
கூடிய கோல் போட்ட ஆட்டம்: ஸ்பெயின் எதிர் பல்கேரியா (6:1)
அனைத்துப் போட்டிகளிலும் கூடிய கோல் போட்ட நாடு: பிரான்ஸ் (9)
அனைத்துப் போட்டிகளிலும் கூடிய கோல் வாங்கிய நாடுகள்: ஜமேக்கா, தென்கொரியா (9)
கோலே வாங்காத நாடு: ஆர்ஜென்டீனா
அடிப்பட்ட மொத்த கோல்கள்: 126
எதிர் அணியால் அடிக்கப்பட்ட கோல்கள்: 4
மஞ்சள் எச்சரிக்கைகள்: 194
சிவப்பு எச்சரிக்கைகள்: 16
தண்டனை உதைகள்: 13
மொத்தப் பார்வையாளர்கள்: 2,047,685
வெற்றியே பெறாது இரண்டாம் சுற்றுக்கு தெரிவான நாடு: சிலி

ஆரம்பமாகிவிட்டது

சுவிசில்

# GNANAM
# Telecom Centers




| | | | |
|---|---|---|---|
| சிறீலங்கா | – 30Mn | இங்கிலாந்து | – 100Mn |
| பாகிஸ்தான் | – 28Mn | ஜேர்மனி | – 100Mn |
| இந்தியா | – 32Mn | அவுஸ்திரேலியா | – 100Mn |
| கனடா | – 100Mn | சிங்கப்பூர் | – 58Mn |
| அமெரிக்கா | – 100Mn | பிரான்ஸ் | – 135Mn |
| இத்தாலி | – 100Mn | | |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது சுவிசில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**GNANAM** Telecom Centers
Militär Str-84, 8004 Zürich,
Switzerland
Tel: 012420152 - Fax: 012420153
Mobil: 0794142867






## எங்கும் கிடைக்கிறது




*Marketed & Distributed by*
***Ayngaran Limited***
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*







போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

## வரலாற்றில் பதிந்த தவறுகள்

*(உலக வரலாற்றில் பதிவு பெற்ற சில தவறுகள் பெரும் அனர்த்தங்களுக்குக் காரணங்களாகிவிட்டன. இத்தகைய அனர்த்தங்கள் சிலவற்றை ஈழமுரசு, வாசகர்களுக்கு தொகுத்துத் தருகின்றது.)*

# உலகத்தின் மிகப்பெரிய நாடக அரங்கு (Opera house)

பிறேசில் நாட்டில் உள்ள Manaus நகரம் மிக அழகிய, உலகப் பிரசித்தி பெற்ற இடமாகும். *1890 - 1911* வரை பிறேசில் றபர் கைத்தொழில் உற்பத்தியில் முன்நின்ற நகரம் மனஉஸ் ஆகும். இந்த அழகிய இடம் நேக்ரோ (Negro), அமேசன் (Amazon) ஆகிய இரு நதிகளும் சந்திக்குமிடத்தின் அருகாமையில் உள்ளது. உலகம் சுற்றும் உல்லாசப் பயணிகளின் பார்வைக்காக அழகிய கோட்டைகள், அரண்மனைகள், பள்ளி வாசல்கள் அங்கு கட்டப்பட்டுள்ளன. எல்லோராலும் மெச்சக்கூடிய அளவு வீதிகளில் மின்சார வெளிச்சம், கழிவு நீர் வெளியேற்ற வசதியான (Drainage system) குழாய்கள் அமைக்கப்பட்டன. மக்களின் பார்வைக்காக பொருட்காட்சி சாலையும் (Museum), அழகிய பல பூந்தோட்டங்களும் இருந்தன. இந்த அழகிய இடத்தில் உலக மக்களால் கண் கவரக்கூடிய அளவுக்கு மிகப்பெரிய இசை நாடக அரங்கம் (Opera house) ஒன்று கட்டுவதற்காக வேண்டிய கற்கள் உட்பட, விலை உயர்ந்த கட்டடப் பொருட்கள் எல்லாம் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

*1896* இல் பச்சை, நீலம், மஞ்சள் நிறங்கள் கொண்ட கற்கள் பதிக்கப்பட்ட அழகான கட்டடம் கட்டி முடிவடைந்தது. இந்தக் கட்டடம் தெயாற்ரோ அமேசொனாஸ் (Teatro Amazonas) என அழைக்கப்பட்டது.

அளவுக்கதிகமாக பணத்தை செலவு செய்து அழகான கட்டடத்தைக் கட்டி எழுப்பினார்களே தவிர அங்கு வருகைதர இருக்கும் வாடிக்கையாளர்கள் ஒரு சிலரே என்பதை தவறுதலாக மறந்து விட்டார்கள். அங்கு அமைக்கப்பட்ட அரங்கத்தில் *2000* இருப்பிடங்கள் உள்ளன. ஆனால் மனஉஸ் நகரத்தின் மக்கள் தொகை *40,000* க்கும் குறைவாகும். அங்கு றப்பர் கைத்தொழில் செய்யும் ஆண்கள் 'ஒப்பரா கவுஸ்' இற்குச் சென்று இசை கேட்க ஆர்வமெடுக்கவுமில்லை, விரும்பவும் இல்லை. இதனால் அத்தகைய அழகான, கூடுதல் பணம் முதலிட்டு உண்டாக்கிய கட்டடம், இசையைக் கேட்பதற்கு யாரும் வருகை தராததால், இறுதியில் பூட்டி வைக்கப்பட்டது.

தற்போது அந்த அழகிய கட்டடம் புதுப்பிக்கப்பட்டு உள்ளூர் பாடசாலை மாணவர்களின் பள்ளிப்பாடல்கள் ஒத்திகை நடப்பது வழக்கம். முன் யோசனை செய்யாமல் மிகப் பெருந் தொகைப் பணத்தை செலவழித்து அங்கு 'ஓபேரா கவுஸ்' அமைத்தது அவர்களின் தவறாகும்.

**- கவிதா -**


## 5 யூலை-19 யூலை



## துயர் துடைப்பு நாட்கள் 98

தொடரும் இடப்பெயர்வுகளால்
வீடுவாசல் இழந்து மரநிழலில்
பசியுடனும் பட்டினியுடனும் நோயுடனும்
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது
உறவுகளின் துயர் துடைக்க உங்கள்
வீடு தேடி வருகின்றோம்....
எம் உறவுகளின் துயர் போக்க
உங்களால் இயன்ற அதி உச்ச
பங்களிப்பை வழங்குங்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் – பிரான்ஸ்
26, Rue du Departement, 75018 Paris.
Tel: 01 40 38 30 74


# சொற்சிலம்பம்

## போட்டி எண் – 7

**அ - எ - ம - சி - த - தி - ந -**
**நெ - ப - பி - ம - வி - க - உ -**
**ச - ப் - ரி - பு - பூ - தா - த்.**

இங்கு காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு 15 க்கும் மேற்பட்ட சொற்கள் ஆக்கப்பட வேண்டும். சொற்கள் 4 எழுத்திலும் அதற்கு மேலும் அமையவேண்டும். எந்த எழுத்திலும் சொற்கள் ஆக்கப்படலாம். ஆனால் முதல் ஆக்கப்படும் சொல் எந்த இறுதி மூன்றெழுத்தில் முடிகிறதோ, அதே மூன்றெழுத்திலேயே ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் முடியப்படல் வேண்டும்.

மேலதிகமாக எந்த எழுத்தும் சேர்க்கக்கூடாது
மேலுள்ள எந்த எழுத்தும் விடுபடக்கூடாது.

| | |
|---|---|
| 1)............ | 11)............ |
| 2)............ | 12)............ |
| 3)............ | 13)............ |
| 4)............ | 14)............ |
| 5)............ | 15)............ |
| 6)............ | 16)............ |
| 7)............ | 17)............ |
| 8)............ | 18)............ |
| 9)............ | 19)............ |
| 10)............ | 20)............ |

'சொற்சிலம்பம்' எண்–7 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய
**இறுதி நாள்: 10.07.98**
*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்
ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris, France.

பெயர்: ....................
முகவரி: ....................
....................
....................
பிறந்த திகதி: ....................
சந்தா இல: ....................

**சொற்சிலம்பம் போட்டி எண்: 6 இற்கான மாதிரி விடைகள்**

விடுத்தல். உடுத்தல். எடுத்தல். கடுத்தல். கொடுத்தல். தடுத்தல். படுத்தல். தொடுத்தல். கெடுத்தல். மறுத்தல். வெறுத்தல். நிறுத்தல். துறத்தல். கழுத்தல். அறுத்தல். இறத்தல். பருத்தல். ஒறுத்தல்

*சொற்சிலம்பம் –6 இற்கு சரியான பதில் அனுப்பியவர்களில் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்*

1) ஏ.ஜே. [illegible]
6015 Luzern, Swiss.
2) திருமதி மா. வைரநாதன்
92100 Boulogne Billancourt, France.
3) சிவகுரு சத்தியசீலன்
93800 Epinay sur Seine, France.
4) க. செ. இரத்தினவேல்
48153 Münster, Germany.
5) S. செல்வகுமாரன்
58730 Frondenberg, Germany.

*இவர்களுக்குரிய பரிசு காலக்கிரமத்தில் பாரிஸ் மக்கள் கடை நிறுவனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.*

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தெடுக்கப்படும் ஐவருக்கு பாரிஸ் மக்கள் கடை தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

**சொற்சிலம்பம் எண்-7 இற்கான விடையும், சொற்சிலம்பம் எண்-8 உம், 16 - 22 ஜூலை 98 ஈழமுரசில் வெளிவரும்.**

ஆக்கம்: சவேயூ சவுந்தரராஜா

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)

| | |
|---|---|
| இந்தியா | 42 நிமிடம் |
| கனடா | 120 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 62 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் |
| சுவிஸ் | 100 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |
| துனிசியா | 65 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 120 நிமிடம் |
| அமெரிக்கா | 120 நிமிடம் |
| ஜேர்மனி | 100 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 40 நிமிடம் |
| அல்ஜீரியா | 65 நிமிடம் |
| மொரோக் | 65 நிமிடம் |
| பெல்ஜியம் | 100 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |

சகல நாடுகளுக்குரிய தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

45







இந்தியா 42 நிமிடம்

பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

## GNANAM Telecom Center

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.**

**Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14**

**M°: La Chapelle / Gare du Nord**

**UK**
Gnanam Telecom Centers
180 High Street North
East Ham
London E6
U.K.

**Switzerland**
Gnanam Telecom Centers
Militär Str-84, 8004 Zürich,
Switzerland
Tel: 012420152 - Fax: 012420153
Mobil: 0794142867

**Germany**
Gnanam Telecom Centers
Taunusstrasse 52-60,
60329 Frankfurt, Germany.
Mobil: 0171 - 6506679
0172 - 2078068

வெகுவிரைவில் கனடா, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்தில் எமது சேவை ஆரம்பமாகின்றது

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.55 | 1.66 | 0.16 | 0.65 |
| பிராங்பேட் | 1.81 | – | 3.00 | 0.30 | 1.18 |
| லண்டன் | 0.60 | 0.33 | – | 0.09 | 0.39 |
| பாரிஸ் | 6.07 | 3.35 | 10.08 | – | 3.97 |
| சூரிச் | 1.53 | 0.84 | 2.53 | 0.25 | – |
| பம்பாய் | 42.50 | 23.45 | 70.48 | 7.00 | 27.80 |
| கொழும்பு | 64.75 | 35.72 | 107.30 | 10.66 | 42.36 |

# இரத்தினபுரி மின்மாற்றி தகர்ப்பு தொடர்பாக 25 பேருக்கு மேல் கைது

இரத்தினபுரியில் மின்மாற்றி குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 25 பேருக்கு மேல் சிறீலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 20ம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டின் மூலம் மிகவும் சக்திவாய்ந்த இம் மின்மாற்றி வெடிக்க வைத்து அழிக்கப்பட்டது. பல இலட்சங்கள் பெறுமதி வாய்ந்த இம் மின்மாற்றி மீதான தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி வந்த பொலிசாரே இவர்களைக் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் எதுவும் இதுவரை கிடைப்பெறவில்லையாயினும், கைதுசெய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களாகவே இருக்கலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புளொட் குழுவின்....

மோர்தாக்குதல் மேற்கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி 12.05.98 அன்று தாக்குதல் நடத்தப்பட்டதில் தாஸ் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர். இதன்போது அவரது வாகனத்திற்கு முன்பாகவந்த மாணிக்கதாஸ் சில மீற்றர் தொலைவிலேயே வேறுமார்க்கமாக சென்றுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மிகவும் இரகசியமாக இத் திட்டம் நிறைவேற்றப்பட்டதால் இச் சம்பவத்தை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்ப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனாலும், இக் கொலைத் திட்மிடலை ஒரு வெளியாரும் அறிந்திருந்தார் என்பது பின்னர் தெரியவந்தது. வவுனியா புளொட் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாவலராக கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி உடவெல இத் திட்டத்தை அறிந்திருந்தார். இவர் மூலம் தமது திட்டம் அம்பலமாகலம் என்ற பயத்தில் பின்னர் 08.06.98 அன்று ஆயுத பாணியாக பாலச்சந்திரன் எம்பி வீட்டிற்கு வந்த குழுவினர் பொலிஸ் அதிகாரியை சுட்டுக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றதாக மேற்படி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொம்மாந்துறை....

மேற்கு, இலுப்பையடிச் சேனை, கொம்மாந்துறை ஆகிய பகுதிகளில் சுமார் 30 குண்டுகளை வீசின.

வீழ்ந்து வெடித்த இக் குண்டுகளினால் இப் பகுதியில் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

# யாழ் குடாவில் இராணுவத்தின் புதிய நெருக்குதல்

சிறீலங்கா இராணுவம் யாழ் குடாவில் தினமொரு சட்ட விதிகளை அறிவித்துவருவது தெரிந்ததே. இந்த வகையில் கடந்த சனியன்று தென்மராட்சி இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் மக்கள் 25ற்கும் மேற்பட்ட தேங்காய்களை தம்முடன் கொண்டுவரக்கூடாது என்ற புதிய அறிவித்தல்களை அறிவித்துள்ளனர். இவ் அறிவித்தல்கள் இராணுவத்தின் வரணி, எழுதுமட்டுவாள், மிருசுவில், பளை போன்ற இடங்களிலுள்ள தமது சோதனைச் சாவடிகளின் முன் சுவரொட்டிகளாக ஒட்டப்பட்டுள்ளன,

பாதுகாப்புக்காரணங்களுக்காகவே தாம் இவ்விதமான நடைமுறைகளை அமுல்படுத்துவதாக கூறியுள்ளனர். இதே போன்று பருத்தித்துறையிலும் பழைய நகர்ப்பகுதியில் மாலை ஆறுமணியின் பின் மக்கள் கூடுவதை இராணுவம் தடை செய்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### காயமடைந்த....

படையினருக்கு வழங்கப்படும் உதவிகளும் குறைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அரசினைக் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை காயமடைந்த படையினருக்கு அதிகளவு இரத்தம் தேவைப்படுவதால் சிறீலங்கா அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இரத்த தான இயக்கங்களை தொடராக மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்து வருகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புத்தளம்....

தாக தெரிவிக்கும் அச் செய்திகள், கடந்தவாரம் கதிரமலை பகுதிக்கு வந்த சிறீலங்கா கடற்படைக் கலமொன்றின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டு அக்கலம் விரட்டியடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

புலிகளின் கடலணி நடவடிக்கைகள் இப்பகுதியில் தீவிரப் படுத்தப்பட்டு வருவதால் இப்பகுதியிலுள்ள சிறீலங்கா இராணுவ, கடற்படை முகாம்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### செய்தித் தணிக்கையை....

செய்திச் சேவையிலேயே தங்கி உள்ளனர். அவ் வகையில் சிறீலங்கா தொடர்பான செய்திகளையும் தணிக்கையின்றி வழங்க வேண்டி உள்ளதால், தணிக்கை தொடர்பான விதிகளை வாபஸ் பெற்று சுதந்திரமாக செய்திகளை உடனுக்குடன் வழங்க சிறீலங்கா அரசு அனுமதிக்க வேண்டும். இது தொடர்பாக தங்களிடம் விண்ணப்பிக்க தமக்கு உரிமை உண்டென 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்தின் பிரதம ஆசிரியரான மார்க் பூட் இலண்டனில் இருந்து அனுப்பிவைத்த தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்



Pub



6ம் மாத வீர அஞ்சலி

தோற்றம்: 26.05.1978



மறைவு: 02.01.1998

லெப். கலை மொழியான்
கந்தசாமி விஜயகுமார்

மேற்கிலே தோன்றி கிழக்கே மறையும் சந்திரனைப்போல்
தமிழுக்காய் பிறந்து தமிழுக்காய் உயிர் நீத்த வீர மைந்தனே!
உன் வரவால் எதிரிகள் மாண்டனர். உன் பிரிவால் தமிழ் மண்ணே கலங்கிவிட்டதே...
மேற்கில் கந்தசாமி தம்பதிகளுக்கு மகனாய் பிறந்து கிளிநொச்சி சமரில் உன்னுயிரை அர்ப்பணித்துக்கொண்டாயே!
- உன் பிரிவால் வாடும் உற்றார் உறவினர்

மலர்க தமிழ் ஈழம் என எங்களை விட்டுச் சென்றாயே! .....
உமது வீரம் செறிந்த ஆத்மாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

உன்னுடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட சக வீரவேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்: சகோதரர்கள்
சுகி, சீலன் ஆனந்தன்
(பிரான்ஸ், நோர்வே)

யாழ். மாவட்டம், கச்சேரி, நல்லூர்



உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
கல்விச் சேவை நடாத்தும்
சுவட்டு மைதான
மெய்வல்லுனர் போட்டி
04.07.97 சனி
Leichtathletiksstadion
Wankdorf, Bern

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு,
கல்விச் சேவையின் கீழ் பேர்ண் மாநிலத்தில்
இயங்கும் 11 தமிழ் வித்தியாலய மாணவர்கள்
பங்குபற்றும் ஒருநாள் மெய்வல்லுனர் போட்டி

காலை 8.00 மணி முதல் மாலை வரை

தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான போட்டிகள்
பார்வையாளர்களுக்கான போட்டிகள்

அனைத்து தமிழீழ மக்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்
– தமிழ் வித்தியாலய மாணவர்கள் –



AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும்
மொத்த விலையில் கொடுக்கப்படும்.
மரக்கறி வகைகளும் மலிவான
விலையில் மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளலாம். Rungis
மரக்கறி வகைகளும் மொத்த
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்



கணபதி தமிழ்க்கடை
உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் + மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
**Ganapathy Food & Wine**
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

# தென்மேற்கு மாங்குளத்தில் கடும் சமர்
# படை நிலைகள் மோட்டார் தாக்குதல்கள் அழிப்பு

மாங்குளம் சந்தியை கைப்பற்றுவதற்காக ஜெயசிக்குறுய் படையினர் தொடர்ச்சியாக பெரும் பிரயத்தனம் செய்து வருகின்ற போதிலும், விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான பதில் தாக்குதல்களால் பெரும் இழப்புக்களை படையினர் சந்தித்து வருகின்றனர்.

கடந்த 24-ம் திகதி மாங்குளம் தென்மேற்குப் பகுதியில் மீண்டும் வெடித்த பாரிய தாக்குதல்களின் விளைவாக படையினரின் புதிய நிலைகள் பலவும் அழிக்கப்பட்டதுடன், படையணிகள் மீண்டும் பின்நோக்கி துரத்தியடிக்கப்பட்டன. இச் சமரின்போது முப்பதிற்கும் மேற்பட்ட படையினர் பலி, மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆனாலும் செய்தித் தணிக்கை காரணமாக இச் செய்திகளை இருட்டடிப்பு செய்த பாதுகாப்பு அமைச்சகம் தென்மேற்கு மாங்குள பகுதியிலுள்ள படை நிலைகள் மீது புலிகள் தாக்கதல் நடாத்திய போதிலும் படையினர் அவற்றை முறியடித்து விட்டதாகவும் பொய்ப் பிரச்சாரம் செய்துள்ளது.

இதேவேளை மாங்குள சுற்றுப் புறங்களில் மோதல் நடந்த இடங்களில் தேடுதலை நடாத்திய விடுதலைப் புலிகள் அழுகிய நிலையிலிருந்த சிப்பாய்களின் சடலங்கள் சிலவற்றையும் கைப்பற்றி தகனம் செய்துள்ளனர்.

## புத்தளம் கடற்பரப்பில் புலிகளின் கடலணி

புத்தளம் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கடலணியினரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. புத்தளம் தொடக்கம் கதிரமலை வரையிலான கடற்பரப்பிலே புலிகளின் கடற்பிரிவுக் கலங்களின் ரோந்தும் பயிற்சிகளும் அதிகரிக்கப்பட்டுள்ள

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொம்மாந்துறை முகாம் மீது புலிகள் தாக்குதல் கிபீர் விமானங்கள் கடுமையான குண்டுவீச்சு

மட்டக்களப்பு கொம்மாந்துறை இராணுவ முகாம் மீதும், முகாமிலிருந்து ரோந்து சென்ற படையணிகள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தி படையினருக்கு இழப்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

கடந்த 26-ம் திகதி நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் மட்டுமே காயமடைந்ததாக பிரச்சாரம் செய்த அரசு தமது உண்மையான இழப்புகளை மூடி மறைத்துள்ளது.

காலை 7.30 மணியளவில் கொம்மாந்துறை முகாமிலிருந்து புறப்பட்ட படையணிகள் மீது சுற்றிவளைப்பு தாக்குதலை மேற்கொண்ட புலிகள் அதேவேளை முகாம் மீது கடுமையான ஆட்லெறி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இரு தாக்குதல்களையும் சமாளிக்க முடியாத படைத்தரப்பு தமக்கு அவசர உதவிக்கென கிபீர் விமானங்களை அழைத்தன.

படையினருக்கு உதவிக்கு வந்த கிபீர் விமானங்கள் விடுதலைப் புலிகளின் ஆட்டிலெறி நிலைகளை இனங்காண முடியாத நிலையில் செங்கலடி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## காயமடைந்த படையினரை பராமரிக்க முடியாது அரசு திணறுகிறது

மாங்குளம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் காயமடைந்து வரும் பெருமளவான படையினரை வைத்தியசாலைகளில் பராமரிக்க முடியாது அரசு திணறி வருகின்றது.

காயமடைந்த சிப்பாய்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவதால் வைத்தியர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் வேண்டா வெறுப்பாக கடமையில் ஈடுபடுவதை அவதானித்த அரசு காயமடைந்த சிப்பாய்களை பராமரிக்கவென தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை காயமடைந்த

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## புளொட் குழுவின் உட்பூசலே தாஸ் கொலைக்கு காரணம்

அண்மையில் வவுனியாவில் புளொட் குழுவின் அரசியல் பிரிவுத் தலைவர் எனக் கூறப்பட்ட 'அலவாங்கு தாஸ்' என அழைக்கப்பட்ட செல்லத்துரை தாஸ் வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டது தெரிந்ததே. இக் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணமென அன்று கூறப்பட்டது. ஆனால் இது ஒரு உட்பூசலால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொலை என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொலையுண்ட தாஸ் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னரே இவருக்கு திருமணம் நடந்தது என்றும் இத் திருமணத்தின் போது இவருக்கு இரண்டு கோடிக்கும் அதிகமான பெறுமதியுடைய பரிசில்கள் வவுனியா வர்த்தகர்களால் வழங்கப்பட்டது எனச் சொல்லப்படுகிறது. வவுனியா நகர்ப்பகுதியில் இவர் வர்தகர்களிடமும், பொதுமக்களிடமும் கப்பம் அறவிட்டுவந்ததாயும், திருமணத்திற்கு வழங்கப்பட்ட பரிசில்கள்கூட கப்பத்தின் ஒருபகுதி எனச் சொல்லப்பட்டது.

இவரது நடவடிக்கைகள் புளொட் குழுவை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒருசிலருக்கு பெரும் இடையூறாக இருந்தது. தாஸ் அமைப்பின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கிறார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது. இதனால் இவரை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியது. தங்களது பாராளுமன்றக் கதிரைகளுக்கு ஆபத்துவந்துவிடக் கூடாது என்பதிலேயே திட்டமிட்டவர்கள் குறியாக இருந்தார்கள் இதன்படி வவுனியாவிற்கு மேற்காக ஒன்றரை கிலோ மீற்றர் துரத்தில் உள்ள ஒரு புளொட் முக்கியஸ்தரின் இல்லத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது எனவும், இவர் பயணத் செய்யும் வழியில் கிளை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## செய்தி தணிக்கையை நீக்க வலியுறுத்தி 'ராய்ட்டர்' சிறீலங்கா அரசிற்கு கடிதம்

சிறீலங்காவில் இராணுவ நடவடிக்கை தொடர்பாக கொண்டு வரப்பட்டுள்ள செய்தித் தணிக்கையை நீக்கவேண்டும் என வலியுறுத்தி சர்வதேச செய்தி தகவல் அமைப்பான 'ராய்ட்டர்' நிறுவனம் சிறீலங்கா அரசிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சர்வதேச ரீதியில் உலக வெகுஜன தொடர்பாளர்கள் விரிவான வகையிலும், நடுநிலைமையான வகையிலும் செய்திகளை. பெற்றுக்கொள்வதில், 'ராய்ட்டர்'

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில்
ஆச்சீஸ்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள



**Archie'S** Tel: 0181-2053652
205, Edgware Road, Colindale-Nw 9.